303

இரும்புப்புராணம்

O22;4196
N08
118384

175

முதற் சஞ்சிகை.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஸ்ரீமத் பூர்வாசாரியர்க ளருளிச்செய்த

பன்னீராயிரப்படி, ஆறுயிரப்படி

முதலிய பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு பரிசோதித்த

# குருபரம்பரா பிரபாவம்.

யதீந்த்ர ப்ரவணப்ரபாவம், பிரமாணத்திரட்டு,

ஆகர மிவற்றுடன்.

303
4:08

சுத்தமான நூதனப் பதிப்பு.

ஸ்ரீமத்

இ. வே. அ. க. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள்

முன்னிலையில்

வித்வான் - ஸ்ரீமாந்.

ம. இராஜகோபாலபிள்ளை யவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

ஸ்ரீமாந்.

பெ. து. ஸ்ரீநிவாஸாசாரிய சுவாமிகளாலும்

அவர் குமாரர்

பார்த்தசாரதி யையங்கா ரவர்களாலும்

ஸ்ரீமாந். செஞ்சி - இல்லிடு.

அரங்கசாமி முதலியா ரவர்களாலும்

அவர் குமாரர்

திருவேங்கட முதலியா ரவர்களாலும்

சென்னை,

கோமளேசுவரன் பேட்டை,

சச்சிதாநந்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

காப்பி ரயிட்.

ஏட்டுப்பாரம்கொண்ட

சஞ்சிகை ஒன்றின் விலை அணா 4.

வேதாந்தவேத்யாம்ருதவாரிராசேர்
வேதார்த்தஸாராம்ருதபூரமக்ர்யம்
ஆதாயவர்ஷந்தமஹம்ப்ரபத்யே
காருண்யபூர்ணம்கலிவைரிதாஸம்.

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோயாமுநஸூநவே
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலபஶ்ஸ்ரீதரஸ்ஸதா.

ஸ்ரீக்ருஷ்ணபாத பாதாப்ஜே நமாமிசிரஸாஸதா
யத்ப்ரஸாதப்ரபாவேந ஸர்வஸித்திரபூந்மம.

லோகாசார்யாயகுரவே க்ருஷ்ணபாதஸ்யஸூநவே
ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவேநம:.

நமஶ்ஸ்ரீசைலநாதாய குந்தீநகரஜந்மநே
ப்ரஸாதலப்தபரம ப்ராப்யகைங்கர்யசாலிநே.

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.

---

ஸ்வாசார்யபரம்பரைத் தனியன்களை அநுஸந்தித்தும்
பின்பு அநுஸந்திக்கவேண்டிய

## பின்பழகியபெருமாள்ஜீயர் தனியன்கள்:—

---

வாத்ஸல்யஸௌசீல்யகுணம்புராசிம்
வ்ரதாரமர்த்தாந்த்ரவிடஸ்ருதீநாம்
ஸ்ரீதேவராட்புத்ரபதைகநிஷ்டம்
யஜ்ஞேசஸூரிம்முநிமாச்ரயாம:.

கலித்வம்ஸிதயாபாத்ரம் பச்சாத்ஸுந்தரஸம்ஜ்ஞகம்
அஜ்ஞாதஜ்ஞாபகம்பும்ஸாம் அஸ்மத்தேசிகமாச்ரயே.

பட்டார்முகநிஸ்ஸ்ருதத்ரவிடவேதநிர்வாஹகம்
ஸ்வபக்தஜநரக்ஷணக்ஷமக்ருபார்த்ரஸத்வீக்ஷணம்
ஸ்வஸூக்திரசநோஜ்ஜ்வலத்குருபரம்பராவைபவம்
யதீந்த்ரபதஸேவகம்தமபராங்கராம்யம்பஜே.

### பாயிரம்.

"அருணிரம்பும் புட்குழிவாழ் பின்பழகர் ஜீயர்
குருபரம்பராவிபவங் கூறத்—திருவார்
திருச்சங் குடையவன்றாள் சேவிப்போ நெஞ்சே
திருமால் பதஞ்சேர் திறந்து".

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# குருபரம்பரா ப்ரபாவம்.

## ப்ரவேசம்.

---

*ஸ்ரீய:பதியாய், † அவாப்த ஸமஸ்தகாமனாய், ஸ்ரீ வைகுண்ட ‡ நிகேதநனாய், ஸ்ரீமதநந்தமுகநித்ய ஸூரிபரிஷந் நிஷேவ்யமானனாய், அகிலமங்களகுண ஸ்வரூபனான ஸர்வேச்வரன் "க்ஷயந்த மஸ்யரஜஸ: பராகே" என்கிறபடி தமோகுண, ரஜோகுண 0 ரஹிதராயிருப்பவர்கள் வாழுமேல்வீடு என்றும், "த்ரிபாதஸ்யாம்ருதம்திவி" என்கிறபடி ஸமஸ்த வண்டங்களு மொரு பங்காக விருக்க, மூன்றுபங்கா லதிகப்பட்ட பரப்பையுடையதாய், நாச ரஹிதமான மோக்ஷலோகமென்றும், "ததக்ஷரே பரமேவ்யோமந்" என்கிறபடி அழிவில்லாதிருக்கிற பரமாகாசத்தை ஸ்தாநமாகவுடைய மோக்ஷலோகமென்றும், "யோ அஸ்யாத்யக்ஷ: பரமேவ்யோமந்" என்கிறபடி எவன் யாவையு முடையானோ அவன் ப்ரபுவாக வீற்றிருக்குமிடமே பரமாகாசமென்றும், "தத் விஷ்ணோ: பரமம்பதம் ஸதாபஶ்யந்தி ஸூரய:" என்கிறபடி பதங்களுக்கெல்லாம் ச்ரேஷ்டமான அந்த விஷ்ணுவின் பதம் எக்காலமும் நித்ய ஸூரிகளால் சலிப்பின்றி ஸேவிக்கப்படுவதாயிருக்குமென்றும், "உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித: பர

---

* ஸ்ரீய:பதி - லக்ஷ்மீபதி ("லக்ஷ்மீச்சபத்னியௌ" என்றும், "அஸ்யேசாநா ஜகதோவிஷ்ணுபத்நீ" என்றும் ச்ருதி).

† அவாப்த ஸமஸ்தகாமன் - ஒன்றிலும்குறைவில்லாதவன்; ஸமஸ்தமும் உள்ளவன்.

‡ நிகேதநம் - இடம்.

0 ரஹிதர் - இல்லாதவர்.

ரோப்யரை:" என்றபடி பூதேவி நீளாதேவியென்றுமிருவராலும்
விரும்பித் தொழப்படுமவனான பரமேச்வரனுடைய ஸ்தானம்
என்றும், "அத்யர்க்கா நலதீப்தம் தத்ஸ்தானம் விஷ்ணோர்மஹாத்
மந: ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷம் தேவதாநவை:"
என்கிறபடி அந்த ஸ்தானமானது அனேக ஸூர்யர்க ளொன்
றுகச்சேர்ந்து நிறைந்து ப்ரகாசித்தாலும் நிகரற்ற வொளியை
யுடையதாய், யாதொரு மஹாத்மாவான விஷ்ணுவினுடைய ஸ்வ
யம் ப்ரகாசத்தையே நிறையப்பெற்றிருக்கும் என்றும், "ஆக்ரீ
டாவிவிதாராஜந் பத்மிந்ய ஸ்ஸரமலோதகா: - ஏதேவை நிரயாஸ்
தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந:" என்கிறபடி அந்தப் பரமாத்மா
வான ஸ்வாமி யெழுந்தருளியிருக்கிற ஸ்தானமானது * க்ரீடா லக்ஷ
ணத்திற் கநுகூலமான குளிர்ந்த தீர்த்தங்களாலும் † ஸூதர்ச
நீயமான பத்மங்களாலும் ப்ரகாசிக்கப்படுகிற புஷ்கரிணிகளை
யுடையதாய் மனோஹரமா யிருக்கும் என்றும், "காலம் ஸப
சதே யத்ர நகாலஸ்தத்ர வை ப்ரபு:" என்கிறபடி அந்த ப்ரபு வீற்
றிருக்கும் ஸ்தானத்தில் காலை மாலை இன்று நாளையென்கிற கால
‡ பரிச்சேதமேயில்லை என்றும், "கலாமுஹூர்த்தாதி மயச்சகா
லோநயத் விபூதே: பரிணாமஹேது:" என்கிறபடி கலை, முஹூர்த்
தம், காலை, மாலை, இரவு, பகல், இன்று, நாளை என்கிற
காலா 0 வதிகளில்லாத ஸ்தானம் என்றும், "அண்டகோசாத்
ஸாவரணாத் அமுஷ்மாத்பரத: ப்ரபோ ஸ்திதோஹம் பரமேவ்
யோமந்ய ப்ராக்ருத பரிச்வாந்" என்கிறபடி அண்ட வடுக்குக
ளைச்சூழ்ந்து ரக்ஷிக்கப் படுகின்றனவோ, அந்த ஸ்தானத்
தில் ப்ரபுவாயிருந்துகொண்டு நாசரஹிதமான திருமேனிக் காந்தி
யோடு ப்ரகாசிக்குமவன் என்றும், "யத்தத்புராண மாகாசம்
ஸர்வஸ்மாத்பரமம் த்ருவம் - யத்பதம் ப்ராப்யதத்வஜ்ஞா: முச்யந்
தே ஸர்வகில்பிஷை:" என்கிறபடி எது அநாதியாகவும், எல்லா
ஸ்தானங்களுக்கு மேற்பட்டதாகவும், அழிவற்றதாகவு மிருக்
கின்றதோ அதையே தத்வஜ் ஞானிகளாகிற †† ப்ரபந்நர்க

* க்ரீடை - திருவிளையாடல்.
† ஸூதர்சநீயம் - சுகமாயும் பார்க்கத்தகுந்ததாயுமிருத்தல்.
‡ பரிச்சேதம் - அளவு, வரையறை.
0 அவதி - எல்லை.
†† ப்ரபந்நர் - ப்ரபத்தியால்ஸ்ரேஷ்டரானவர்கள்.



ளடைந்து ஸர்வ பாபங்களினின்றும் விடுவிக்கப்பட்டு ஸுகித்
திருக்கிறார்களென்றும், "அண்டேப்ய: பரதோ நித்யம்த்ரிபாதே
நவிராஜதே - இதரேணாநுபாதேந ப்ராக்ருதேண்டே விராஜதே"
என்கிறபடி ப்ரம்ஹாண்டங்க ளெல்லாம் ஸ்திர மற்றவைகளாய்
கால்பங்காயிருப்பது போலாகாமல்முக்காற்பங்கு விஸ்தீர்ணமுள்ள
தாய் ஸ்திரமாயிருப்பதான * அப்ராக்ருத லோகமென்றுஞ்
சொல்லுகிற இத்யாதியாலே யோக, யாஜ்ஞவல்க்ய, பஞ்சமவேத
புராணரத்னம் முதலான ப்ரமாணங்களை யடங்கப்பெற்றிருக்கும்
பாஞ்சராத்ர வசநங்களிலும் "நலமந்த மில்லதோர் நாடு"
என்றும், "சுடரொளியாய்நின்ற தன்னுடைச்சோதி" என்றும்
"தெளிவிசும்பு திருநாடு" என்றும், "மாகவைகுந்தம்" என்றும்;
"தெளிதாகிய சேண்விசும்பு" என்றும் இத்யாதி த்ராவிட சுருதி
களிலும் மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களாலே
யறுதியிடப்பட்டுள்ள ஏற்றத்தையுடைத்தாய் "குண: ப்ரதாநம்
புருஷ: பரம்பதம் பராத்பரம் ப்ரஹ்மசதேவிபூதய:" என்கிற
படி குண ச்ரேஷ்டனாயிருக்கிற பரப்ரம்ஹத்தினுடைய ஒப்புயர்
வற்ற பதம் என்றும், அது அவனுடைய அநந்த கல்யாணகுணாதி
ய ஸம்பத்தைப் பெற்றிருக்கும் என்றும், "பரமயோகி வாங்
மநஸா பரிச்சேத்யஸ்வரூபஸ்வபாவ" என்கிறபடி பரமயோகிக
ளுடைய வாக்கு மனஸுக்களாலும் துதித்தும் நினைத்தும் விவரிக்
கப்படாத ஸ்வரூபத்தை யுடையவனென்றும், "காலாதிகாதவ
பராமஹதீவிபூதி:" என்கிறபடி காலஸ்வபாவத்தை ‡ அதிக்ர
மித்தவனாய், நிரந்தரைச்வரியத்தை யுடையவனா யிருப்பானென்
றும், "நிரதிசய வைகுண்டநாத" என்கிறபடி அத்யாச்சர்யா
தீத ஸ்வபாவத்தையுடைய வைகுண்ட நாதனென்றும், "யத்ர
ரேமஸோ யதேவதமஸ: பாரே யதத்யத்புதம்" என்கிறபடி
எது அதிக தூரத்திலிருக்கின்றதென்றும் அறிவதற் கஸாத்ய
மென்றும் அத்யற்புதமென்றும் விவேகிகளாற் சொல்லப்பட்
டிருக்கின்றதோ அதுவே பரமமான ஸ்தானம் என்றும், இப்படி
ஸர்வ பூர்வதேசிக [illegible]தமாங்களாலே ஏககண்டமா யறுதியிடப்பட்

* அப்ராக்ருதம்-பிரகிருதி சம்பந்தமில்லாதது.
‡ அதிக்ரமித்தல்-கடத்தல்.

டிருக்கிற ப்ரபாவாதிசயங்களையுடைய ஸன்னாஸ்ஸின்ஞானானந்த பரமபதத்தில் "ப்ராகாரைப்ஸம்விராஜைப்ச ஸௌதைஸ்ரத்னமயை ர்வ்ருதா" என்கிறபடி இரத்நமயமான ப்ராகார மண்டப விமாந மாடவீதிகளையும் "கோடி வைஸ்வாநர ப்ரக்ய க்ருஹபங்க்தி பிராவ்ருதா" என்கிறபடி வைச்வானராக்நி கோடி கொழுந்துவிட்டுக் கிளர்ந்தாற்போற் காணுந் தேஜோருபமான திருமாளிகைகளையும், "மணிதோரண சித்ராட்யா விசித்ரத்வஜ மாலிநீ" என்கிறபடி நவரத்ந கசிதமான தோரணங்களாலும் விசித்ரமான கொடிகளாலு மலங்க்ருதமான "கொடியணி நெடுமதிட்கோபுர"ங்களையுமுடைய ராஜஸ்தானத்திலே, "ஸஹஸ்ரஸ்தூணே விசித்ரே த்ருட உக்ரேயந்த்ர தேவாநாமதிதேவ ஆஸ்தே" என்கிறபடி விசித்ரமா யிருப்பதொரு ஆயிரங்கால் மண்டபமான செம்பொன்செய் கோயிலிலே தேவாதிதேவ னெழுந்தருளியிருக்கிறு னென்றும், "மத்யேது மண்டபே திவ்யேராஜஸ்தாநம்மஹோச்ச்ராயம்-மாணிக்யஸ்தம்பஸாஹஸ்ர ஜுஷ்டம் ரத்நமயம் ஶுபம்-நித்ய முக்தைஸ்ஸமா கீர்ணம் ஸாமகாநோப ஶோபிதம்-அதீவ தத்ஸதாபூர்ணம்" என்கிறபடி அதிக விசித்ராகாரத்தை யுடைத்தாய் மாணிக்கமயமான ஆயிரம் ஸ்தம்பங்களாற்சுமக்கப்பட்டுச், சுபகமானதாய் ஸதாநித்யமுக்தர்களாற் சூழப்பட்டுச் சாமவேதகாநஞ் செய்துகொண்டிருக்கும் வைபவத்தை யுடையதாய் "மாமணி மண்டபத் தந்தமில் பேரின்பம்" என்கிறபடியே நிகரற்ற சந்தோஷப் பெருங்கடலாய்ச், சிரேஷ்டமான பீட பர்யங்களோடு விளங்குகிற திருமாமணி மண்டபத்திலே உபயவிபூதியுந் தொழிலாக வகுப்புண்டு "கோப்புடைய சீரிய சிங்காதனத்"தின்மேல் "ஹிரண்மயே பரேகோசே விரஜம் ப்ரம்ஹ நிஷ்களம் தச்சுப்ரஞ் ஜ்யோதிஷாம் ஜ்யோதிஸ் தத்யதாத்மவிதோவிதுஃ" என்கிறபடி - ஸ்வர்ணமயமாய், மாசற்றதாய்ப், பரம காந்தியையுடையதாய், நிஷ்களங்கமாய், ஆத்ம க்ஞானிகளால் மாத்திர மறியப்படுவதா யிருக்குமொரு மேல்வீடு என்றும், "திவி ஸூர்ய ஸஹஸ்ரஸ்ய பவேத்யுக பதுத்திதா யதிபாஸ்ஸத்ருசீ ஸாஸ்யாத் பாஸஸ் தஸ்யமஹாத்மநஃ" என்கிறபடி அம் மோக்ஷலோகத்திலே யிருக்கிற யாதொரு பரமாத்மாவின் திருமேனிக்காந்திக்கு ஆயிரம் ஸூர்யர்க ளொன்றுசேர்ந்து ப்ரகாசித்தாலும் நிகராகாது



என்றும், "ஸ்ரக் வஸ்த்ராபரணைர்யுக்தம் ஸ்வாநுரூபைரநூபமைஃ-சிந்மயைஸ் ஸ்வப்ரகாசைஶ்ச அந்யோந்ய ருசிரஞ்ஜிதைஃ" என்கிறபடி அந்த சின்மய ஸ்வரூபியின் திருமேனியில் தரிக்கப்பட்டிருக்கிற பீதாம்பர ஹார பூஷணாதிகள் ஒன்றுக்கொன்று அழகாலு மொளியாலு மிஞ்சிக் கிடக்கையால் "சுழிபட்டோடுஞ் சுடர்ச்சோதிவெள்ளம்" "சோதி வெள்ளத்தினுள்ளே யெழுவதோருரு" என்கிறபடியே * நிரவதிக தேஜோமயமாய்ப் பெருகி யொழுகு மழகு வெள்ளத்திடையில் அமைந்ததோர் சுழியிலெழுந்ததோ ருருவமென்னலாம்படி நித்ய ஸித்த பரமேஷ்டியாதி பஞ்சோப நிஷன்மயமாய் விளங்குகிற கிரீடாதி நூபுராந்தமான திவ்யவஸ்த்ர திவ்யாபரண பூஷிதமாய் ஆபரண கோடியிலும் ஆயுதகோடியிலு மெய்காட்டுகிற சங்கு சக்ர கதா கட்க கோதண்டாதிகளாலே ப்ரகாசிதனாய் நிரதிசய ஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாதி யபரிமித உதார குணகணநிதியான திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டமாய், "ப்ருஹச்சரீ ரோசிவிமாநதேஹோ யுவாகுமாரத்வ முபேயிவாந்ஹரிஃ-ஶ்ரேமே ஶ்ரியா ஸௌஜநதாஞ்ஜநப்ராஸூத்யோதஸ்நபாசந்த்ர இவாம்ருதாம்ஶுஃ" என்கிறபடி †† புஷ்கலாகாரனாய் நித்ய யௌவந கௌமார தசையையு முடையனாய் மார்பைவிட் டகலாத பெரிய பிராட்டி சமேதனாய்க், கோடிபாநுதேஜனாய்த், தன்றுள்தொழுவார்க்குச் சந்த்ரபிம்பத்தையொத்து ஸுகஸேவையைத்தருந் திருமுகமண்டலத்தை யுடையனாய், "ராஜாதி ராஜஸ் ஸர்வேஷாம் விஷ்ணுர் ப்ரஹ்மமயோ மஹாந்-ஈஶ்வரந் தம்விஜாநீமஸ் ஸபிதா ஸ ப்ரஜாபதிஃ" என்கிறபடி ஓரொருகாலத்தில் ப்ரம்ஹருத்ராதிகளைத் தன்னிடத்தி லிருந் துண்டாகச்செய்கிறவனான அந்த விஷ்ணுவாகிய பரப்ரம்ஹம் ஸமஸ்ததேவர்களுக்கும் ராஜாதிராஜனாய் ப்ரகாசித்துக் கொண்டிருப்பா னென்கிறபடியே "ஏழுலகும் தனிக்கோல்செல்ல வீற்றிருந்து" "போங்கோதஞ் சூழ்ந்த

* நிரவதிக-எல்லையற்ற.

†† புஷ்கலாகாரனாய்-பூர்ண சொரூபனாய்.

புவனியும் விண்ணுலகும் அங்காநந்சோராமே யாள்கின்ற செங்
கோனுடைய திருவரங்கச்செல்வனார்" "கண்டவாற்றாற்றனதே
யுலகெனநின்றான்" என்கிறபடியே தான் * உபய விபூதிக்கும்
நிர்வாஹகனானமை, காட்சியிலே தோற்ற வெழுந்தருளியிருந்து
"ஸ்வேதரஸமஸ்த வஸ்து விலக்ஷணாநந்த ஜ்ஞாநாநந்தைக
ஸ்வரூப" என்கிறபடி. நிரதிசயாநந்த யுக்தனாய், வரம்பில்லாத
ஞானமூர்த்திகளாகிய நித்ய ஸூரிகளையும் "இயக்கெலாமறுத்து"
என்கிறபடியே அந்யோந்ய ஸம்பந்தங்களாகிற அவித்யா கர்ம
வாசநாருசி ப்ரக்ருதி ஸம்பந்தங்களையெல்லாம் போக்கிக்கொண்ட
வர்களாய், நிவ்ருத்தஸம்ஸாரராய், அந்த நித்யரைப்போலவே
† லப்தகைங்கர்ய பரராயிருக்கிற முக்தர்களையும் ஆநந்திப்பித்துக்
கொண்டுவராநிற்க ஸம்சாரிகளும் தன்னை இவ்வண்ணமாகவே
அநுபவித்து, ‡ அநுபவ ஜநித ப்ரீதி காரிதாவஸ்தோசிதாசேஷ
சேஷைதைக ரதிரூப நித்ய நிரதிசயாநந்த ரூப மத்கைங்கர்ய
மாகிற மஹாஸம்பத்தைப்பெற்று வாழ்கைக்கு ப்ராப்தி யுண்டா
யிருக்க இவர்களந்த வாழ்வைப் பெறுதற்குத் தேடிக்கொள்ள
வேண்டிய த்ரவியங்களாகிற ஜ்ஞாந பக்தி வைராக்யாதிகளை
எள்ளளவேனு முடைத்தாயிராமல், கரணகளேபர ஶூன்யர்
களாய் "ஹாநபக்ஷ இவாண்டஜா:" என்கிறபடி இறகொடிந்தபக்ஷி
கள்போலே வ்யவகாரமற்று நோவுபட்டுழல்வதைக் கண்டு ஸஹி
யாதவனாய், தனியரைப்போலே நொந்து "கரணகளேபரைர்
கடயிதுந் தயமாநமநா:" என்கிறபடி "பல்லுயிர்க்கு மாக்கை
கொடுத்தளித்தகோனே" என்றுஞ் சொல்லுகிறபடியே அகி
லாத்மாக்களுக்கும் கரசரணாதி யவயவ ப்ரதானம் பண்ணி
யருள, இவர்களவற்றைப் பெற்றும் "விசித்ரா தேஹஸம்
பத்திரீஶ்வராய நிவேதிதும் - பூர்வமேவக்ருதா ப்ரஹ்மந்
ஹஸ்த பாதாதிஸம்யுதா" என்கிறபடி பூர்வமே இவர்கள் கரண

* உபயவிபூதி-நித்யவிபூதி, லீலாவிபூதி.

† லப்த-அடைந்த.

‡ அநுபவ-அநுபோகத்தினாலே, ஜநிதா-பிறந்த, ப்ரீதி-ப்ரீதியின், காரிதா-காரியமாகவும், (மற்றும்) அவஸ்தோசிதாசேஷ-ஸமஸ்த இடங்களிலும் செய்யத்தக்கதாயும், அசேஷ-விசேஷப்பட்டதாயுமுள்ள, சேஷதா-காரியமாகவும், ஏகதா-ஒப்பற்ற, ரதிரூப-ப்ரீதிசொரூபமாயுமுள்ள, மத்கைங்கர்யம்-தனது (ஈச்வரனுடைய)கைங்கர்யத்தை.



களேபரங்களைப் பெற்றிருக்கினும், அவற்றாலவனை வணங்குதற்
குறுப்பான சில விசேஷங்களைக் கடாக்ஷித்திருக்கிறனென்றென்
றுமறும், "நாடாத மலர்நாடி நாடோறும்நாரணன்றன் வாடாத
மலரடிக்கீழ்வைக்க" முயலாமலும், "மாயவன்றன்னை வணங்க
வைத்த கரணமிவை" என்று நினையளவேனும் நினையாமலும்,
அவனது தேனேமலரும் திருப்பாதங்களில் தொண்டுசெய்தற்
குறுப்பாகப்பெற்ற அந்த அவயவ ஸமூஹங்களைச் சமிதை தறிக்
கக்கொடுத்த கத்தியைக்கொண்டு பசுவின்வாலைத் துணிப்பாரைப்
போலும், களையெடுக்கக் கொடுத்த கோலைக்கொண்டு—கண்
களைக் கிளறிக் கொள்வாரைப் போலும், ஆற்றைக் கடக்கக் கொ
டுத்த தெப்பத்தைக்கொண்டு நீர்ப்போக்கிலேவிட்டுக் கடலுக்குள்
புகுவாரைப்போலும், ஆக்கையின் வழியுழன்று சப்தாதி விஷய
ப்ராவண்யத்துக் குறுப்பாக்கிக்; கர்ம ப்ரவாஹத்தாலே பிறவி
யென்னும் பெருங்கடலிலே புக்கு அநர்த்தப்படுகிற படியைக்
கண்டு, அதன்மேலும் "ஹர்த்தும் தமஸ்ஸதஸதீச விவேக்து
மீஶோ மாநம்ப்ரதீப மிவகாருணி கோததாதி" என்கிறபடி தாம
ஸத்தையொழித்து ஸத்வகுண ப்ரசுராயிருந்து தேஹாத்மப்
ஸ்வாதந்த்ர்யங்களை விவேகிக்கைக்குறுப்பாகக் "கலைகளும் வேதமும்
நீதிநூலும் கற்பமுஞ் சொற்பொருள் தானு மற்றை, நிலைகளும்
வானவர்க் கும்பிறர்க்கும் நீர்மையி னலருள் செய்த" என்றும்,
"தொண்டேசெய் தென்றுந் தொழுது வழியொழுகப் பண்டே
பரமன் பணித்தவகை" என்கிறபடியே சாஸ்த்ர ப்ரதாநமும்
பண்ணியருளி "ஈஶ்வரோஹ மஹம்போகீ ஸித்தோஹம்பலவாந்
ஸுகீ-ஆட்யோபிஜநவாநஸ்மி கோந்யோஸ்தி ஸத்ருஶோமயா"
என்றும், "யோந்யதாஸந்தமாத்மா நமந்யதா ப்ரதிபத்யதே - கிந்
தேநநக்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்றுஞ்
சொல்லுகிறபடி ஸர்வரூபருசிபேத பல ஐஶ்வர்யாதிகளுக்குந்
தானே காரணனென்றும், அப்படியிருக்கிற தனக்கே ஸகலாத்
மாக்களும் சொத்தாகிறார்களென்றும், அப்படி தன்னுடையதான
ஆத்மவஸ்துவைஎன்னுடையதென்னுமதிப்பாலே † பகவத்விமுக
ராவாரைப்பார்க்கிலும் பாபிகள் வேறில்லையென்றும், அவர்களே
ஈஶ்வர த்ரோஹிகளான ஆத்மாபஹார சோரர்களென்றும்
சாஸநஞ் செய்துவைத்துத் திருத்தப்பார்க்கையில், இவர்கள்தன்

† பகவத் விமுகர் - பகவத் விரோதிகள்.

பிறரும் அகிலபாபஹேதுவான ஆத்மாபஹாரத்தைப் பண்ணி † அநாதிகர்ம வாஸநாதோஷதூஷிதாந்தஃகரணராயிருக்கக்கண்டு அவன் கைவிடத் துணியாதவனாய் ஓலைப்புறத்துச் செல்லாத நாட்டை யெடுத்துவிட்டுக் குடும்பமாட்சும் அரசர்கள்போலே தானே யிவண்வந்து இவர்களை வாரிப் பிடியாகப் பிடித்துக் கொண்டு போகவேண்டு மென்றெண்ணி, இராம க்ருஷ்ணாதி யவதாரங்களைச்செய்து, "ஆஸுரீம்யோநிமாபந்நா மூடா ஜந்மநிஜந்மநி-மாமப்ராப்யைவ கௌந்தேய ததோயாந்த்யதமாங்கதிம்; அவஜாநந்திமாம் மூடா மாநுஷீம் தநுமாச்ரிதம், பரம்பாவ மஜாநந்தோ மமபூதமஹேச்வரம்" என்கிறபடி என்னுடைய அவதாரங்களில் மநுஷ்ய புத்திபண்ணி, என்னைக் கிட்டாமல், ‡ ஆஸுர க்ருத்யங்களைப் புரிவோரை ஜந்ம ஜந்மாந்தரங்களிலும் நரகில் இட்டழுத்துவேனென்றும், இத்தேசத்தார் என்னைப் பரனென்றும் மஹேச்வரனென்றும் அறிந்து கிட்டாமல் மநுஷ்யப்ரதிபத்தி பண்ணி யொழிகிறார்களே யென்றும், குந்திபுத்ரனான அர்ஜுனனைப் பார்த்துத் தன் திருவாயாலே †† சாமாதி யுபாயங்களாற் சொல்லித் திருந்தப் பார்க்கையிலும் இவர்கள் ‡‡ சஜாதீய ப்ரதிபத்தியாலே தன்னையவமானம் பண்ணி எதிரம்புகோத்து "சேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும்" என்றும் "வல்லவா பழித்து" என்றுஞ் சொல்லுகிறபடியே ஆஸுர ப்ரக்ருதிகளால் வாக் துருக்தங்கள்பண்ணித் தன்னை யடையாமல் நானென்னும் அகப்பற்றையும் எனதென்னும்புறப்பற்றையுமுடையராய் அதமமான கதிகளுக் காளாகவிருக்க அப்போதும் இவர்களுக்குநேரிடுந் துன்பங்களைக்குறித்து வ்யாகுலனாய்த், தான் "மனிசருக்குமற்றும் முற்றுமாய் மாயப்பிறவி பிறந்த தனிய" னானபடியால் விசேஷக் க்ருபையாலே ஐயோ!! வென்றிரங்கி இனி யிவர்களைத் திருத்தவேண்டுமாகில் ஸர்வ ப்ரகாரத்திலும் இவர்களுடன் கலந்திருந்து மீட்பதுதானுபாயமாகுமென்றுநினைத்து, (மானைக்காட்டி மானை யடக்குவாரைப் போலும், வலையையிட்டுப் பறவைகளைப் பிடிப்பாரைப்போலும்) தன்னுடைய ஸ்ரீவத்ஸ கௌஸ்துப வைஜயந்தீவநமாலை ஸ்ரீபூ நீளாதேவிகள் அநந்த கருட விஷ்வக்ஸேநஸ்ரீஸுதர்சந பாஞ்சஜந்யகதா நந்தக சார்ங்காழ்வார்தொடக்கமானவர்களைப்பார்த்து நீங்கள் பூமியிற்போய் நால்கு வர்ணங்களிலு மவதரித்து அகிலாத்மோத்தாரணங்களைப் பண்ணக்கடவீர்களென்று நியமித்தருள; அவர்களும் கிணற்றில் விழுந்த குழந்தையை மூச்சுப் பிறழா முன்னமே விரைந்து குதித்தெடுக்கு மன்னையைப்போல் பரிவுடையவர்களாய் அஜ்ஞாநார்ணவத்தில் மூழ்கித் தவிக்கின்ற இச் சம்ஸாரி சேதநர்களைக் கரையேற்றத் திருவுள்ளம்பற்றிக் "கலௌகலு பவிஷ்யந்தி நாராயணபராயணாஃ-க்வசித் க்வசிந் மஹாபாகா த்ரமிடேஷு சபூரிசஃ" என்றும் "தாம்ரபர்ணீ நதீயத்ர க்ருதமாலாபயஸ்விநீ, காவேரீசமஹா பாகாப்ரதீசீச ஸரஸ்வதீ" என்றுஞ் சொல்லுகிறபடி உத்தவரைப் பார்த்துக் கண்ணன் கலியுகத்தில் நாராயண பாராயணரான சில மஹாநுபாவர்கள் தாம்ரபர்ணி க்ருதமாலை காவேரி ஸரஸ்வதி நதீதீரங்களில் த்ரமிட பூபாகத்தி லவதரிக்கப் போகிறார்களென்று திருவாய் மலர்ந்தருளி யிருந்தபடியே அங்கங்கு மவதரித்தருள ஸர்வேச்வரன் அவர்களுக்கு மயர்வற மதிநலமருளி, அவர்கள் முகமாய் ஸர்வாதிகாரமான த்ராவிடரூப திவ்ய ப்ரபந்தங்களை ப்ரகாசிப்பித் தருளினான்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ப்ரவேசம் முற்றிற்று.

---

† அநாதிகர்ம வாஸநாதோஷ தூஷிதாந்தஃ கரணர் - அநாதியான கர்மவாசனையாலே தோஷத்தையும் பழிப்பையும் விளைக்கக்கூடிய அந்தக்கரணத்தையுடையவர்கள்.

‡ ஆஸுரக்ருத்யம் - தீச்செயல்.

†† சாமாதி - சாம, தான, தண்ட பேதங்கள்.

‡‡ சஜாதீயம் - ஒத்தஇனம்.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

# குருபரம்பராப்ரபாவம்.

## முதலாழ்வார்கள்

மூவரிலொருவராகிய

# பொய்கையாழ்வார் வைபவம்.

## தனியன்.

ஸ்ரீமுதலியாண்டானருளிச்செய்தது.

நேரிசை வெண்பா.

கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு—வையத்
தடியவர்கள் வாழ வருந்தமிழந் தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து.

இவ் வாழ்வாருடைய அவதாரக்கிரமம் எங்ஙனேயென்னில் "காஞ்ச்யாம் ஸரஸிஹேமாப்ஜே ஜாதங் காஸாரயோகிநம் - கலயே யஶ்ஶ்ரியஃ பத்யே ரவிந்தீப மகல்பயத்" என்கிறபடி காஞ்சீபுரியில் மநோஹரமாயிருப்பதொரு பொய்கையில் பொற்றாமரைப் பூவில் ஸ்ரீயஃ பதியினுடைய கலாம்ச ஸம்பூதரான காஸாரயோகியென்கிற பொய்கையாழ்வார் ஸூரியனைப்போன்ற தேஜஸ்ஸையுடையரா யவதரித்தருளினார் என்றும், "முகுந்தஸ்ய முகோல்லாஸ மூலவாக்ஜாலமூர்ச்சிதம் - முநிமுக்யம் ஸரோஜாதம் முக்திமூல முபாஸ்மஹே" என்கிறடி மோக்ஷப்ரதாயகனான எம்பெருமானுக்கு முகோல்லாஸத்தைத் தருமவராய் ஸமஸ்த வாக்குகளுக்கும் மூலமானவராய் முனிசிரேஷ்டராய்ப் பொற்றாமரைப் பொய்கையில் அவதரித்து முக்திமார்க்கத்தைக் காட்டி யருளினவரான மூலபுருஷனை நமஸ்கரிக்கிறேன் என்றும், "ஹேமாப் ஜிநீஹேமஸரோஜ கர்பாத் ஸ்ரீபாஞ்ச ஜந்யோஜநி- திவ்யயோகீ - தாரேஹரோரப்ய யுஜாக்யமாஸே ஸமஸ்த ஜீவா வநகர்மஹேதோஃ"



என்கிறபடி ஸ்வர்ணபொய்கையில் பொற்றாமரைப் பூவினிடமாக ஐப்பசிமாசம் திருவோண நக்ஷத்திரத்தில் யோகிகளில் சிரேஷ்டராய் ஸர்வருக்கும் ரக்ஷகராய் எம்பெருமானுடைய பாஞ்சஜந்யாம்ச ஸம்பூதரான முனிவரர் அவதரித்தருளினார் என்றும், "ஆஜ்ஞாதி ஸ்ரீசந்தரே த்வாபராக்யே ஸித்தார்த்யாக்யே வத்ஸரேமாஸி சேஷே ஶுக்லாஷ்டம்யாம் பௌமவாரேஶ்ரவர்க்ஷே விஷ்ணோர் ஜந்ம ப்ராபகாஸாரயோகீ" என்கிறபடி எம்பெருமானுடைய ஆஜ்ஞையினாலே துவாபரயுக அந்தியத்தில் சித்தார்த்தி வருஷம் ஐப்பசிமாசம் சுக்லாஷ்டமி செவ்வாய்க்கிழமை கூடிய சுபதினமாகிய விஷ்ணு நக்ஷத்திரமென்று சொல்லப்படுகிற திருவோண நக்ஷத்திரத்தில் ஸ்ரீகந்த பரிமளத்தைப்போலே காஸாரயோகி யென்பவர் அவதரித்தருளினார் என்றுஞ் சொல்லுகிறபடியே "கஇதி ப்ராஹ்மணோ நாமதே நதத்ராஞ்சிதோஹரிஃ-ததஃ காஞ்சீ திக்யாதாபுரீ புண்ய விவர்த்தநீ" என்கிறபடி ககாரவாச்யனான பிரமன் அசுவமேத யாகஞ்செய்து ஸர்வேஶ்வரனான ஸ்ரீயஃபதியை ஆராதித்த ஸ்தலமாகையாலே காஞ்சிபுரமென்று சொல்லப்பட்ட "கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சி" யிலே, "விண்ணோர் தொழுங்கண்ண" னுடைய திருவெஃகாவிலே, பொற்றாமரைப் பொய்கையில் த்வாபரயுகத்தில் எட்டுலக்ஷத்தறுபத்திராயிரத்துத் தொளாயிரத் தோராவதாண்டில் நிகழ்ந்த சித்தார்த்திவருஷம், ஐப்பசிமாஸம், சுக்லாஷ்டமி, செவ்வாய்க்கிழமை கூடிய திருவோண நக்ஷத்திரமாகிய சுபதினத்தில், ஸ்ரீபாஞ்ச ஜன்யாம்சரா யவதரித்தருளினார்.

### திருநக்ஷத்ரத் தனியன்.

"துலாயா ஶ்ரவணம் ஜாதம் காஞ்சாயாம் காஞ்ச வாரிஜாத்
த்வாபரே பாஞ்ச ஜந்யாம்சம் ஸரோயோகி நமாஶ்ரயே".

ஸ்ரீ பொய்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

ஜீயர் திருவடிகளேசரணம்.

இரண்டாவது

# பூதத்தாழ்வார் வைபவம்.

## தனியன்.

திருக்குருகைப்பிரான் பிள்ளானருளிச்செய்தது.

நேரிசைவெண்பா.

என்பிறவி தீர விறைஞ்சினே னின்னமுதா
அன்பே தகளி யளித்தானை — நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேருங் கடன்மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல்.

இவ்வாழ்வாருடைய அவதாரக்கிரம மெங்ஙனே யென்னில் "மல்லாபுரவராதீஶம் மாதவீகுஸுமோத்பவம் - பூதம்நமாமியோ விஷ்ணோ: ஜ்ஞாநதீப மகல்பயத்" என்கிறபடி மல்லைமா நகரத்தில் குருக்கத்திப் பூவினிடமாக வவதரித்து, ஞானமென்கிற தீபத்தை யேற்றிவைத்து எம்பெருமானை ப்ரத்யக்ஷமாக "வந்தேபூதாக்ய யோகீந்த்ரம் வரேண்யகுண ஸம்பதம் - லக்ஷ்மீஸஹாய கருணா ப்ராப்த பரமவைபவம்" என்கிறபடி லக்ஷ்மீ ஸமேதனான எம்பெருமானுடைய கருணைக்குப்பாத்திரராய், அநந்தஸுகுண ஸம்பத்தைப்பெற்று யோகீந்த்ரராய் விளங்குகிற பூதயோகியை நமஸ்கரிக்கிறேன் என்றும், "மாஸேதத்ஸ்மிந் வஸுபேஜநிஷ்ட பாரேஸமுத்ரம் புரிமல்ல நாம்யாம், லதாக்ருஹாந் தாத்புவிபூத நாமா கௌமோதகீ ஸக்தி மயோமுநீந்த்ர:" என்கிறபடி. திவ்ய ஸூரிசரிதையிலே சொல்லப்பட் டிருக்கிறபடியே "மாதவன் பூதம்" என்று சொல்லலாம்படியான பூதத்தாழ்வார் "கச்சிக் கிடந்தவனூர் கடன்மல்லைத் தலசயனம்" என்று அநுசந்தேயமான திருக்கடன்மல்லையிலே, பரிமளப்ரசுரமாய் நன்றாயிருப்பதொரு குருக்கத்திப் புஷ்பத்தினிடம் (பொய்கையாழ்வாருடைய தோற்றத்திற்கு) அடுத்த நாளான அவிட்ட நக்ஷத்திரத்தில் ஸ்ரீ கதாம்சரா யவதரித்தருளினார்.

திருநக்ஷத்ரத் தனியன்.

"துலாதநிஷ்டா ஸம்பூதம் பூதம்கல்லோல மாலிநம், தீரே புல்லோத் பலாமல்லாபுரய ரீடே கதாம்சகம்".

ஸ்ரீ பூதத்தாழ்வார் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

மூன்றாவது

# பேயாழ்வார் வைபவம்.

## தனியன்.

குருகாவலப்ப னருளிச்செய்தது.

நேரிசை வெண்பா.

சீராரு மாடத் திருக்கோவ லூரதனுட்
காரார் கருமுகிலைக் காண்புக்கு — ஓரா
திருக்கண்டே னென்றுரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே யுகந்து.

இவ்வாழ்வாருடைய அவதாரக்கிரம மெங்ஙனே யென்னில் "தந்மாவிஜாதம் ஶததாரகாயாம் மயூரபுர்யாம் மணிகைரவாந் தாத், பக்த்யாமஹாந்தம் மஹதாஹ்வயந்தம் ஸ்ரீநந்தகாம்ஶம் ஶ்ரித பக்திரூபம்" என்கிறபடி அவ்விரண் டாழ்வார்களுடைய தோற்றத்திற்கடுத்த நாளான சதய நக்ஷத்ரத்தில் திருமயிலை யென்கிற திவ்யதேசத்திலே சந்நிதித் திருக்கிணற்றி லுள்ளதொரு அழகியதான செவ்வல்லிப் புஷ்பத்தினிடமாக பரமபக்தியை யுடையவராய், மஹதாஹ்வயரென் றழைக்கப்படுகிற முனிவர் ஸ்ரீநந்தகாம்ஶரா யவதரித்தருளினார் என்றும், "த்ருஷ்ட்வாஹ்ருஷ்டம் ததாவிஷ்ணும் ரமயாமயிலாதிபம் - கூபேரக்தோத்பலேஜாதம் மஹதாஹ்வய மாஶ்ரயே" என்கிறபடி எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹ ஸேவையிலும் குணநுபவத்திலு மீடுபட்டுக்கொண்டிருக்கும் மனதையுடையவரும், திருமயிலைக்கு நிர்வாஹகரும், மாதவப்பெருமாள் சந்நிதித் திருக்கிணற்றில் செவ்வல்லிப் பூவினிடமாக வவதரித் தருளினவருமான மஹதாஹ்வயரென்கிற முனிவரை நமஸ்கரிக்கிறேன் என்றும், "பத்மாரமண பாதாப்ஜப்ரேமப்ராந்த்யாமநோஜ்ஞயா, ப்ராந்தயோகீதி

விக்யாதம் முநிம்வந்தே குணம்புதிம்" என்கிறபடி. நாயகரைப் புஷ்பத்தை ஜந்மஸ்தாநமாகவுடைய லக்ஷ்மிக்கு நாயகனான எம்பெருமான்பக்கல் ப்ராந்திகொண்ட மனதையுடையவரானதையால் ப்ராந்த யோகியென் றழைக்கப்படுகிற ஸத்குண ஸாகரரை நமஸ்கரிக்கிறேன் என்றுஞ் சொல்லுகிறபடியே "தேனமர்சோலை மாடமாமயிலை" என்கிற திருமயிலையில் மாதவப்பெருமாள் சந்நிதித் திருக்கிணற்றிலே யுண்டானதொரு அழகிய செவ்வலிப் புஷ்பத்தினிடம் (பூதத் தாழ்வா ருடைய தோற்றத்திற்கு) அடுத்தநாளான சதயநக்ஷத்திரத்தில் ஸ்ரீநந்தகாம்ஸரா யவதரித்தருளி "நியத புலகிதாங்கா நிர்ப்பராநந்தபாஷ்பா, களிதநிகிலஸங்காகத்கத ஸ்தோத்ரகீதிঃ-அம்ருதலஹரிவர்ஷ ஹர்ஷஸ்ருத்தோபகாகத்கத ஸ்தோத்ரகீதி-அம்ருதலஹரிவர்ணு ஹர்ஷக்ருத்தோப பந்நாவிகத நரகபீதிர் விஷ்ணுபக்திர்விபாதி" என்கிறபடி விஷ்ணு பக்தியையுடையவராய்ப் "பேயனேயொழிந்தே னெம்பிரானுக்கே" என்கிறபடியே நிரந்தரம் பகவதநுபவானந்தத்தால் திருமேனியில் மயிர்க்கூச்செறிந்து, ஆனந்தக்கண்ணீர்சோர, நெகிழ்ந்த திருவுள்ளத்தை யுடையராய்ப், பரவசத்தொனியோடு அமிர்தப்ரவாஹத்தையொத்து வெளிப்படுஞ் சொற்களடங்கிய திருவாக்கையுடையராய், ஸர்வஸங்கபரித்யாகியாய்க் கிஞ்சித்தேனும் நாகபீதியில்லாதவராய், நர்த்தனஞ் செய்துகொண்டு "அழுவன்றொழுவன் ஆடிக்காண்பன் பாடிப்பலற்றுவன்" "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்கிறபடியே பகவதநுபவ பாரவஸ்யமென்கிற பித்தேறினவரா யிருக்கையிலே "பேயாழ்வார்" என்கிற திருநாமமே நிரூபகமாக வுடையவராயிருப்பர்.

### திருநக்ஷத்ரத் தனியன்.

"துலாசதபிஷக்ஜாதம் மயூரபுரி கைரவாத், மஹாந்தம் மஹதாயாதம் வந்தே ஸ்ரீநந்தகாம்சகம்".

ஸ்ரீ பேயாழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

## முதலாழ்வார்கள்

## மூவருடைய வைபவம்.

இப்படி † யோனிகதரன்றிக்கே புஷ்பத்தினிடமாக வவதரித்தருளின இம்மூவரும் எம்பெருமானுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே "முக்குணத் திரண்டவையகற்றி" என்கிறபடியே ராஜஸ தாமஸகுணங்க ளொழியப்பெற்று "ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச கார்யாகார்யே பயாபயே-பந்தம்மோக்ஷஞ்ச யாவேத்தி புத்திஸ்ஸா பார்த்தஸாத்விகீ" என்கிறபடி ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி, நல்லவைதீயவை, ஸத்கார்யம் துஷ்கார்யம், பயம் அபயம், பந்த மோக்ஷங்களின் ஸ்வபாவங்களை உள்ளபடியறிகிற சுத்த ஸாத்விகமாகிற "ஒன்றினிலொன்றி நின்று" என்கிறபடியே மேற்பட்ட ஒருகுணத்தையே யுடையவர்களாய்த் "காலாவயமிதிப்ரஹ்மங் மாநி ஸோலோக வர்ஜிதாঃ" என்கிறபடி நாமுலகத்தாருடைய ஸஹவாஸத்தை ‡ ஸவாஸனமாகவிட்டு எம்பெருமானுக்கே தாஸபூதர்களாகக்கடவோம் என்றும், "தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாநঃ பரமாத்மநঃ" என்கிறபடி ஆத்மாக்கள் பரமாத்மாவாகிற ஸ்வாமி யொருவனுக்கே(சேஷிக்கே)அடிமைப்பட்டிருக்க வேண்டுமென்றும், "ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்திதம்-ஆத்மதாஸ்யம்ஹரேஸ்ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதாஸ்மர" என்கிறபடி சுத்த ஸத்வகுணத்தையுடையவனும், சுவாமித்வ முடையவனுமான எம்பெருமானிடத்திலன்றோ ஆத்மாக்கள் ஸதா அடிமைத்திறத்தை வஹித்தலான ஸ்வபாவத்தை யுடையவர்களாகவேண்டியது என்றும், "ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா சேஷோஹி பரமாத்மநঃ" என்கிறபடி ஞானாநந்த ஸ்வரூபியாய் ஸர்வசேஷியாயிருக்கிற சுவாமிக்கன்றோ ஆத்மாக்கள் தாஸபூதர்களாகவேண்டுமென்றுஞ் சொல்லுகிறபடியே ஸ்வதஸ்ஸித்த பகவத் தாஸ்யத்தை வஹித்து, அதனாலே நிரதிசய ஜ்ஞாநபக்தி வைராக்யாதிகளை யுடையவர்களாய்ப் "புலன்களைந்து பொறிகளாலேதமொன்றுமிலாத" என்கிறபடியே அன்ன

† யோனிகதரன்றிக்கே-யோனிசம்பந்தமில்லாதவராய்.

‡ ஸவாஸனமாக-வேரற (அடியோடு).

பாநாதி † வர்ஜிதர்களாய் 'உனநுபாலேபோல்சீரில்பழுத்தொழிந்தேன்'' என்கிறபடியே சிசுக்களுக்குத் தாய்ப்பால் தாரகமானாற்போல, பகவத் குணாநுபவமே இவர்களுக்குத் தேஹாத்ம போஷகமாக விருக்கையாலே "உண்டியே யுடையேயுகந்து" வயிற்றைத்தூர்க்கச்சோறும் குளிருக்குப்போர்க்க வஸ்திரமுமான இவற்றி னளவில்தானே சுகமிருப்பதாய் ப்ரமித்துப்போந்து "நீதில் நன்னெறி நிற்கவல்லாதசெய்து" பகவந் முகோல்லாஸமாக வநுஷ்டிக்கவேண்டிய ஸத்கார்யங்களையெல்லாம் ஒருபுறம் நிற்கவிட்டு, அபாயத்தைத் தருமவையான தாபத்ரயாதிகளையே உபாயமாகத் தழுவிக்கொண்டு, பகவத் விமுகராயிருக்கிற ஸம்ஸாரிகளுடைய கொள்கையைப்பார்த்து ஸகியாமல் "நாட்டு மானிடத்தோ டெனக்கரிது" என்கிறபடியே அவர்களுடைய ஸஹவாசங் கொடியதென்று வெறுத்து, ஒருநாளிருந்தவிடத்தில் மறுநாளிராமல் கிராமத்துக் கோரிரவாகத்தங்கி இவர்களொருவரை யொருவரறியாதே யாத்திரை செய்துகொண்டிருக்கிற காலத்திலே ஸர்வேச்வரன் "மஹாத்மா ஜ்ஞாநிநாம்வர:" என்கிறபடி ஞானிகளில் சிரேஷ்டனாயிருப்பவன் என்னுடைய ஆத்மாவாகிறானென்றும் "ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" ஜ்ஞாநிகள் எனக்கு ஆத்மாக்களென்பது என்னுடைய மதமென்றும் தானே சொல்லியிருக்கிறபடியே, தனக்கு ஆத்மபூதரான இவர்களைக்கொண்டு "அநாதிமாயயா ஸுப்த:" என்கிறபடி அநாதியாயிருக்கிற மாயையால் உறங்கிக்கிடக்கிற ஸம்ஸாரி சேதநர்களுக்குத் தன் விஷயமான ஜ்ஞாந பக்தி வைராக்கியங்களை யுண்டாக்குகைக்காக ஒருநாளிரவில் இம்மூவரையும் "சீரேறு மறையாளர்நிறைந்த செல்வத் திருக்கோவலூரி"லே ப்ரவேசிக்கச்செய்து அத்யாச்சர்யமானதொரு பெருமழையை யுண்டாக்க, இவர்கள் தனித்தனியே ஒரு ஸ்ரீவைஷ்ணவருடைய திருமாளிகையின் ‡ இடைகழியில் வந்துசேர்ந்து "வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா தண்டவத் ப்ரணமேத்புவி" என்கிறபடி வைஷ்ணவனை வைஷ்ணவன்கண்டால் ஸாஷ்டாங்கமாகத் தண்டன் ஸமர்ப்பிக்கவேண்டிய முறைப்படி அந்யோந்ய வந்தனம் பண்ணிக்கொண்டு நீரார்? நீரார்? என்று ஒருவரையொருவர் கேட்டுப் "பகவச்சேஷபூதோஹ

† வர்ஜிதர்-ஒழித்தவர்.

‡ இடைகழி-தலைக்கடை.



ம்நாந்யார்ஹோஸித: பர:" என்கிறபடி நான்பகவானுக்குச் சேஷபூதனேதவிர அந்யருக்கு உரியவ னல்லனென்று ஒருவரும், "தாஸோஹம் வாஸுதேவஸ்ய" என்கிறபடி நான் வாஸுதேவனுடைய தாஸனென்று ஒருவரும், "ஜ்ஞாநாநந்த மயஸ்த்வாத்மா சேஷோஹிபரமாத்மந:" என்கிறபடி ஞானாநந்தஸ்வரூபியாயிருக்கும்படியானதொரு பரமாத்மாவான ஸ்வாமிக்கே நான் தாஸபூதனென்று மற்றொருவருஞ் சொல்லித் தங்களையொருவர்க்கொருவர் தெரிவித்துக்கொண்டு அந்தத்திருமாளிகையையுடைய ஸ்ரீ வைஷ்ணவனை யழைத்துத் தங்களுக்குத் தங்க இடந்தரவேண்டுமென்று கேட்க; அவரும் ஸ்வாமிகாள்! இங்கிருக்கிற திண்ணை யொன்றுதான் ஒழிந்திருக்கிறது; இதுவோ ஒருவர்க்காகில் படுக்கப்போதும், இருவர்க்கு இருக்கப்போதும், மூவர்க்கெனில் நிற்கவே போதுமென்று காட்டினார். அதையே இவர்கள் திருவுள்ளம்பற்றி அதன்மீது நின்றுகொண்டு "போக்யஸ்த: பரஸ்பரம்" என்கிறபடி பரஸ்பர குணாநுபவம் பண்ணிக்கொண்டிருக்கையில் "துளஸீகாநநம் யத்ரயத்ரபத்மவநாநிச - வஸந்தி வைஷ்ணவாயத்ர தத்ர ஸந்நிஹிதோஹரி:" என்கிறபடி துளசிவநத்திலும் பத்மவநத்திலும் வைஷ்ணவர்கள் மத்தியிலும் வாசஞ்செய்யும் இஷ்டமூர்த்தியான எம்பெருமான் இறையுமகலகில்லாதபிராட்டி ஸஹிதனாய்க் கூராழிவெண்சங்கேந்தி செந்தமிழ்பாடுவாராகிற இவர்கள் மத்தியில் உருக்காட்டாமல் தழுவி முழுகிப்புகுந்து நெருங்கிநிற்கவே இவர்கள் நம்மையொழியவு மிங்காருண்டு? இப்படி நெருக்குகைக்கென்று ஞானச்சுடர் விளக்கேற்றியும், வெய்யகதிரோனை விளக்காகவேற்றியும், தங்களுடைய நெஞ்சென்னு முட்கண்ணாலே காணப்புக "தார்க்ஷ்யாதிரூடம் தடிதம்புதாபம் லக்ஷ்மீதரம் வக்ஷஸிபங்கஜாக்ஷம் ஹஸ்தத்வயே சோபிதசங்கசக்ரம் விஷ்ணும் ததர்சு: பகவந்தமாத்யம் ஆஜாநுபாஹும் கமநீய காத்ரம், பார்ச்வத்வயே சோபித பூமிநீளம், பீதாம்பரம் பூஷண பூஷிதாங்கம், சதுர்ப்புஜம் சந்தனரூஷிதாங்கம், பிம்பாதரம் குந்தஸமாந தந்தம், சாந்திசாகர ஸமாநவக்த்ரம், நீலாலகம் திவ்ய கிரீட ஜுஷ்டம் கர்ணத்வயே சோபித குண்டலாட்யம், ரத்நாங்கதம், மௌக்திகதிவ்யஹாரம், கடிதடலம்பிதஹேம ஸூத்ரம், ரத்நாங்குளீயம், மணிகங்கணாட்யம், மாணிக்கமஞ்ஜீரஸுநிஷ்டபாதம், மந்தாரமாலாஞ்சித கேசபந்தம், ஸ்ரீ கௌஸ்துபோத்பாஸிதகண்டதேசம், ஸ்ரீவத்ஸவக்ஷம் ஸுமநீயவேஷம், வேதாந்த

வேத்யம் மநஸாப்யகம்யம், அப்ராக்ருதம் தேவமநந்தரூபம், யத்யோககம்யம் குணஸம்ஸியோகே, அத்பற்புதம் கோடி ரவிப்ரகாசம், மநோநுபம் யத்ஸநகாதிகம்யம்" என்கிறபடி ஸர்வேஸ்வரன் பெரியதிருவடியின்மேலேறி நவரத்நகசிதமான திருவபிஷேகத்தைத்தரித்து, மஸிநமில்லாத சந்த்ரனைப்போன்ற திருமுகமும் தாமரைப் புஷ்பத்தைப்போன்ற திருக்கண்களும் கொவ்வைக் கனியையொத்த திருவதரமும் முல்லையரும்பை யொத்த திருமுறுவலும் மகரகுண்டலங்களும் தாழ்ந்திலங்குந் திருக்காதுகளும் பாரிஜாத புஷ்பஞ்சூடிய திருக்குழலும் ஸ்ரீ கௌஸ்துபமணி பிரகாசிக்கிற திருக்கண்டமும் திருவாழி திருச்சங்கினால் அலங்க்ருதமான திருத்தோள்களும் புஜகீர்த்திகளும் ஸ்ரீ வத்ஸமும் மின்னற் கொடியைப்போன்ற பிராட்டியு மமர்ந்திருக்குஞ் செல்வத் திருமார்பும் முத்தாரங்களும் மின்னுநூலும் வனமாலையும் படிந்திருக்கிற திருவுதரமும் சோதிவெள்ளத்தினடுவில் சுழலுண்டானைப்போற் காணுந் திருவுந்தியும் ஆஜான பாஹுவும் அழகாழியணிந்த திருவிரல்களும் கொடிமின்னற்போன்ற அரைநாண் படிந்திருக்கிற திருமருங்கும் அழகிய பீதாம்பரமும் நக்ஷத்ரங்களை யொருகோவை யானாற்போலப் பிரகாசிக்கும் நூபுரங்கள் படிந்திருக்கிற போதுநின்ற பொன்னடிகளும் இருபுறமும் பூ நீளாதேவிகளுமாக அத்யற்புதமாய்க் கோடிஸூர்யப்ரகாசமும் கேரொவ்வாததாயிருக்கும் தன்னுடைய திவ்யமங்கள விக்ரஹத்தைக்காட்டி யருளினான். அந்தஸேவையில் இவர்கள் ஈடுபட்டுப் பொய்கையாழ்வார் "வையந் தகளியாய் வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காகச்-செய்ய, சுடராழி யானடிக்கே சூட்டினன்சொன் மாலை, யிடராழி நீங்குகவே யென்று" என்றுதொடங்கி முதல் திருவந்தாதியையும், பூதத்தாழ்வார் "அன்பே தகளியா யார்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை யிடுதிரியா-நன்புருகி, ஞானச் சுடர்விளக் கேற்றினே னாரணற்கு, ஞானத் தமிழ்புரிந்த நான்" என்று தொடங்கி இரண்டாந் திருவந்தாதியையும், பேயாழ்வார் "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும், அருக்க னணிநிறமுங்கண்டேன் - செருக்கிளரும்; பொன்னாழி கண்டேன்புரிச்சங்கங்கைக்கண்டேன், என்னாழி

அடியிற் கூறியவை வேறுசில குருபரம்பரைப் பிரதிகளிற் கண்டவை.

திருமயிலையில் ஓர்பொய்கையினிடஞ் செவ்வல்லிமலரின்கண் அவதரித்தபேயாழ்வார்எம்பெருமான்எழுந்தருளியிருக்கும்திவ்யதிருப்பதிகளாயுள்ளவைகளை யெல்லாம் மிக்கபக்தியோடு ஒவ்வொரு தினமாகச்சேவித்துச்



வண்ணன்பாலின்று" என்று தொடங்கி மூன்றாந் திருவந்தாதி

சென்று திருக்கடன் மல்லையிற் பூதத்தாழ்வாரைச்சந்தித்து இருவருமாய்த் திருக்கச்சிக்குவந்து அங்குப் பொய்கையாழ்வாரைச் சந்தித்தார்கள். ஒருநாள் மூவருங்கூடி அங்கே எழுந்தருளியிருக்கும் பேரருளாளப் பெருமாளைப்பணிந்து அங்குநின்றும் புறப்பட்டுத் திருக்கோவலூரையடைந்தனர். அப்போது அஸ்தமனமாய் விட்டபடியால் அவ்விடத்துத்தங்க ஓர் இடைகழியை நாடிச்சென்றனர். அவ்விடைகழியிடத்தே இம்மூவரும்பகவத் கல்யாணகுண வைபவத்தைப் புகழ்ந்துகொண்டிருக்கும்போது அத்திருப்பதியில் எழுந்தருளியபெருமான் மழையை யுண்டுபண்ணி மூவருடைய செம்மையான தமிழ்ப் பாசுரங்களைவிரும்பி ஒருவிருத்தவேதியனாய் அவ்விடைகழியைக்கிட்டி இங்கிருப்பவர்களே நீங்கள்யாவர்? எமக்கிங்கிருக்க இடமுண்டோ? என்றனன். இவ்வாறுசொல்லும் பெருமானை அழைத்து இடங்கொடுத்து இருத்தி ஆழ்வார்கள் மூவரும் நின்றுகொண்டு இடம்போதாமல் நெருக்கமடையவே எம்பெருமான் அம்மூவரையும்நோக்கி நீங்களிருக்கும் இடைகழி நன்று நன்று! நாம் நால்வருமிருக்க இது இடங்கொடுப்பதன்று; மழையும் ஒழிவதன்று; நீபமுண்டாயின் இருளொழியும் வரையில் பகவானது திருவடியைச்சுலபமாகச்சேவித்துவணங்க நூல்செய்யலாமென்றனன். இம்மொழி தங்கள்செவியில் புகுதலும் உள்ளமுருகிப்புளகாங்கிதராய்ஆநந்தமேலிட்டு இவர் திருப்பாற்கடலில் அறிதுயில்கொள்ளும் பெருமானேயென்றுசந்தேகித்து அவ் வுண்மையையறியத் தாங்கொண்ட ஞானதீபத்தாலேகாண நினைத்து "வையந்தகளி", "அன்பேதகளி", "திருக்கண்டேன்" என்னும் அந்தாதிநூல்கள் மூன்றினையும் மேற்சொல்லியபடி செய்தருளினர் என்பதாம்.

மற்றுஞ் சிலபிரதிகளில்:—இவர்கள் ஒருநாளிருந்த இடத்தில் மறுநாள் இராதே, தம்மோடொத்த பரமசாத்விகர்களைத் தேடித்தரிசிக்கத் திருவுள்ளங்கொண்டு, திவ்யக்ஷேத்திரங்கள் தோறும் சஞ்சரித்துவந்தனர்கள். ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியே சஞ்சரித்துவந்த ஆழ்வார்கள் மூவரையுங்கொண்டு உலகத்தை உய்விக்க, ஸர்வேச்வரன் இம்மூவரும் ஒருவரை யொருவர் அறியாமல் பெண்ணையாற்றின் தென்கரையில் வாமனக்ஷேத்திரமாகிய திருக்கோவலூரில்வந்து தன்னைச் சேவிக்கும்படி, இவர்களுக்குப் புத்தி ப்ரதானம் பண்ணினான். இவர்களுமவ்வாறே அத்திருப்பதியை யடைந்தனர்கள்; பகற்பொழுதும் போயிற்று.

சூரியன் அஸ்தமனமான பொழுது, முதல் முதல் பொய்கையாழ்வார் ஒரு ஸ்ரீவைஷ்ணவருடைய திருமாளிகையிற் சென்று, அம்மாளிகையின் இடைகழியின் மீது சயனித்திருந்தனர். பின்னர் பூதத்தாழ்வார் கண்வளர்தற்கு இடந்தேடிக்கொண்டு சென்று, பொய்கையாழ்வார் பள்ளிகொண்டிருக்கும் இடத்தையடைந்து 'அடியேன் சயனித்தற்கு இத்திருமாளிகையிற் சிறிது இடங்கிடைக்குமோ!' என்று வினவினர். பொய்கையாழ்வார் அதுகேட்டுச் சுவாமி! இங்கே இவ்விடை கழியில்ஒருவர் படுக்கலாம்,

யையும் ஆகமூவரும் திருவந்தாதிமூன்றினையுந் திருவாய்மலர்ந்தருளி ஜகத்தை வாழ்வித்தருளினார்கள்.

---

இருவர் இருக்கலாம், தேவரீர் எழுந்தருளினால் இருவரும் இருக்கலாமெனவிண்ணப்பஞ்செய்தனர். அங்ஙனமே அவ்விருவரும் அங்கு இருந்து ஒருவரையொருவர் உசாவிக்கொண்டிருக்கும்போது, பேயாழ்வாரும் அவ்வாறே இடந்தேடிக்கொண்டு அந்தத் திருமாளிகைக்கு வந்து 'சயனித்துக்கொள்ள இங்கே இடங்கிடைக்குமா?' என்று கேட்க, முன்னைய ஆழ்வார்களிருவரும், சுவாமி! 'இவ்விடம் ஒருவர் படுக்கலாம் இருவர் இருக்கலாம் மூவர் நிற்கலாம்' எனக்கூறினார்கள். கூறவே, இவரும் உள்ளுறச்சென்று மூவருமாக நின்றுகொண்டு அளவளாவியிருந்தனர்.

அவ்வளவிலே திருக்கோவலூர் எம்பெருமானும் பேரிருளும் பெருமழையும் உண்டாக்கித், தானும் அவ்விடைகழியிற் சென்று, அவர்களுக்கு அதிகநெருக்கம் உண்டாகும்படிச் செய்தருளினன். ஆழ்வார்கள் மூவரும், 'முன்னில்லாதநெருக்கம் இப்பொழுது உண்டான காரணமென்னை?; நம்மையொழியவும் இவ் விடைகழியைப்பற்றி நிற்பார்கள் உண்டோ'! என்று "ஞானச்சுடர் விளக்கேற்றியும்", "உணர்வெனும் ஒளிகொள் விளக்கேற்றியும்", வெய்யகதிரோன் விளக்கேற்றியும்" பார்த்தனர். ஸ்ரீமந்நாராயணனுடைய மைப்படி மேனியையும் செந்தாமரைக் கண்ணையும் நெஞ்சென்னும் உட்கண்ணாலே கண்டநுபவித்து, அநுபவத்தாலுண்டாகிய அன்பின் மிகுதியாலே பொய்கையாழ்வார் பிறப்பென்னும் பெரும்பிணிக்குப் ப்ரமௌஷதமும் சமுசாரசாகரத்தைக் கடக்கலாவதான தெப்பமுமாய் எம்பெருமானுடைய திவ்யகுணாநுபவ ரூபமாய் "வையந்தகளியா" என்று தொடங்கி ருக்வேதசாரமான முதற் றிருவந்தாதியும், பூதத்தாழ்வார் பரமபத சோபானமே என்னலாவதாய் "அன்பேதகளியா" என்று ஆரம்பித்து எஜுர்வேதசாராமிசமான இரண்டாந் திருவந்தாதியும், பேயாழ்வார் பக்திரசம் ஒழுகுவதாய் எம்பெருமானுடைய ரூபகுணசக்திகளைப் பிரதிபாதிப்பதாய்த் "திருக்கண்டேன்" என்றெடுத்துச் சாமவேதசாரமான மூன்றாந் திருவந்தாதியும் ஆகிற திவ்யப்பிரபந்தங்களைச்சேதனர் உய்ந்து போமாறு ஞானத்தமிழாக அருளிச்செய்து உலகத்தைவாழ்வித்தருளினார்கள்.

திருக்கோவலூரில் எம்பெருமானைக்கண்டுகளித்துஅதன்பின்னர்இவ்வாழ்வார்கள் மூவரும் திருவயோத்திக் கெழுந்தருளி, அங்குச் சீதாலக்ஷ்மண பரதசத்ருக்ந ஆஞ்சநேய சமேதரா யெழுந்தருளியிருக்கும் சக்ரவர்த்தித் திருமகனாரைத் துதித்து வணங்கி, அவ்விடத்தே வறுமையால் வாட்டமடையும் வேதியரொருவருக்கு இவ்வுலகவின்பத்தையும் மோக்ஷவின்பத்தையுங் கொடுத்தனர். அதன்பின்னர் அங்கிருந்து வதரியாச்ரமத்தையடைந்து நரநாராயண முனிவர்களைச் சேவித்து ஒரு மலைக்குகையில் யோகத்திலிருந்தனர். பிரமதேவன் அங்கு வந்து நரநாராயணர்களால்



முதலாழ்வார்கள் திருவவதாரவருஷம் கஎகூ-க்குச்சரியான பஹுதானிய வருஷம் தை மாதம்.

முதலாழ்வார்கள் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளே சரணம்.

---

இம்மூவர் வைபவமுமுணர்ந்து அதனை ஆராய்ந்தறிய வேண்டி ஓர் சோலையும் அதில் மங்கையரையும் உண்டாக்கி அவர்களால் ஆழ்வார்களை மயக்க முயன்று பயனடையாமலே காட்டிலுள்ள கொடிய மிருகங்களையேவினன். சரபங்கள் ஆழ்வார்களைக் கடியுண்டிறந்தன. அக்காலத்தும் ஆழ்வார்கள் யோக நீங்கிற்றிலர். பின்னரும் பிரமதேவன் புயலையும் மழையும் மின்னலுமுண்டாக்கினன்; அதற்கு மாழ்வார்கள் சலியாதிருக்கவே, பிரமதேவன் ஆழ்வார்களை வணங்கித் துதித்துச் சென்றனன். மூவரும் அங்கு நின்றும் திருவேங்கடமலைக்கெழுந்தருளி அம்மலை ஆதிசேஷாம்சமாதலால் அதன் மீதேறாது அடிவாரத்திருந்தே ஸ்ரீநிவாசப்பெருமானை யேத்த அப்பெருமான் ஆழ்வார்களிருக்குமிடத்தே வந்து சேவைசாதித்துச் சென்றனன். அங்கு அரிதாசரென்னுமொருவர் ஆழ்வார்கள் திருவடியை யடைந்தனர்; அவர்க்கு அக்ஷய பாத்திரமொன்றும் அதனைக் காக்கத் திருவாழியுங் கொடுத்துத் தினமும் அப்பாத்திரமளிக்கும் பொன்னைக்கொண்டு சந்நிதி ஜீர்ணோத்தாரணகைங்கர்யமும் பாகவதாராதநமும் செய்துவரும்படி நியமமிட்டனர். இவர்களெழுந்தருளியிருந்தவிடத் திருந்த தீர்த்தம் இப்போதும் ஆழ்வார் தீர்த்தமென வழங்கிவருகிறது. ஆழ்வார்கள் அவ்விடம் நின்றும் திருக்கச்சிநகரை யடைந்துபேரருளாளப் பெருமானைச் சேவித்திருக்கையில் விஷ்ணுவர்த்தன னென்னுமரசன், ஆழ்வார்களிடத்து அன்புண்டாயினன். அந்தக்காலத்தே அவ்வரசர்க்குப்பகைவர்கள்படையெடுத்துவந்து மாயப்போர்விளைத்து அவனைத் தோற்பித்தனர். அரசன் ஆழ்வார்களைச் சரணடைந்து ஆழ்வார்களளித்த சக்கரப்படையைக் கொண்டுசென்று சத்துருக்களைவென்று மீண்டு சிலநாள் கழித்து மோக்ஷவின்பம் துய்த்தனன். பின்னர் ஆழ்வார்கள் திருவரங்கத்தையடைந்து அரங்கத்தெம்பெருமானைச் சேவித்து யோகத்திருந்து பகவத்தியானபரராயிருக்கையில் குட்டநோய்கொண்ட அரசனொருவன் ஆழ்வார்களிருந்த விடத்தேவந்து அவர்கள் திருவடிப்பொடியைப் பூசிக்கொள்ளவே வியாதிநீங்கிச் சுந்தரவடிவம் பெற்று யோகிதாசனென்னும் பெயரெய்தினன். அக்காலை சோழபூபதியொருவன் நாறுகுமாரத்திகளுடனும் மனைவியுடனும்வந்து ஆழ்வார்களைச் சேவித்து வியாசவித்தையுபதேசம்பெற்றனன். அவ்வரசன் தன் குமாரிகள் நூற்றுவரும் யோகிதாசனென்னுமரசனை விரும்பியதையுணர்ந்து அவ்வரசற்கு அவர்களைத்தந்து திருமணமுடித்துச் சோழநாட்டையுந் தன் செல்வமுழுதையு மளித்துச் சிலநாளில் மோக்ஷமெய்தினன். யோகிதாசனும் பல்லாண்டுகளுலகைப்புரந்து அர்த்தபஞ்சக ஞானமடைந்து முத்தியுலகெய்தி

# திருமழிசையாழ்வார் வைபவம்.

தனியன்கள்.

திருக்கச்சிநம்பிக ளருளிச்செய்தவை.

கலிவிருத்தம்.

தருச்சந்தப்பொழில்தழுவு தாரணியின்றுயர்தீரத்
திருச்சந்தவிருத்தஞ்செய் திருமழிசைப்பரன்வருமூர்
கருச்சந்துங்காரகிலுங்கமழ் கோங்குமணநாறும்
திருச்சந்தத்துடன்மருவு திருமழிசைவளம்பதியே.

இருவிகற்ப நேரிசைவெண்பா.

உலகு மழிசையு முள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க்கோலாற் றூக்க—உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது.

.......ராமபிள்ளை யருளிச்செய்தது.

நேரிசை வெண்பா.

நாரா யணன்படைத்தான் நான்முகனை நான்முகனுக்
கோரா சிவன்பிறந்தா னென்னுஞ்சொல்—சீரார்
மொழிசெப்பி வாழலாம் நெஞ்சமே மொய்பூ
மழிசைப் பரனடியே வாழ்த்து.

"ஸக்திபஞ்சமயவிக்ரஹாத்மநேஶுக்திகாரஜநிதஹாரிணே முக்திதாயகமுராரிபாதயோர்பக்திஸாரமுநயேநமோநம:" என்கிற படி பஞ்சசக்திமயமான திவ்ய திருமேனியையுடையவரும் ஶுக்தி காரமென்கிற சித்தபுருஷனை ஜயித்தவரும் முக்தியைத்தருமவ னான வெம்பெருமான் திருவடிகளில் திருத்தின பக்தியென்னுங்

---

வன். அதன் பின்னர் ஆழ்வார்கள் மூவரும் சுவேதத்வீபத்தை யடைந்து அங்குள்ளார் வழிபடும் திருமாலைவணங்கித் திருப்பாற்கடலையடைந்து க்ஷீராப்தி நாதனைத்தொழுது சூரியமண்டலத்தையடைந்து சூரியமண்டல... பிரமலோகமெய்தி அங்குப்பிர லாந்தர்வர்த்தியான பெருமானைவழிபட்டுப் பிரமலோகமெய்தி அங்குப்பிர மனுலாராதிக்கப்படும் பெருமானைப் பராவி, ஆமோத பிரமோத சம்மோத லோகங்களுக்குச்சென்று சங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்களான வியூக மூர்த்திகளைச்சேவித்து, நெடுநாள் யோகத்திலிருந்து அர்ச்சிராதி மார்க்க மாகப் பரமபதமெய்தினர் என்பதாம்.



கயிற்றால் மனதைக்கட்டின ஜிதேந்த்ரியரானபடியாலே பக்திசார ரென்னுந் திருநாமத்தை யுடையவருமான திருமழிசைப்பிரானை நமஸ்கரிக்கிறேன். "ததோகிலஜகத்பத்மபோதாயாச்யுத பாநுநா॰ தேவகீபூர்வ ஸந்த்யாயாமாவிர்பூதம் மஹாத்மநா" என்கிறபடி அச்சுதனென்கிற சூர்யன் ஜகமென்கிற பத்மத்தை விகசிப்பிக்கத் தேவகி கர்ப்பமென்கிற கிழக்குத் திசையிலுதித்து "அநார்த்ர மார்த்ரம் விரஸம்ஸரஸ்ய மபல்லவம் பல்லவிதந்ததாவீத்॰ஹாவோ பஹுக்ஷீரதுகாபபூவுர் நாராயணே நந்தகுலம் ப்ரவிஷ்டே" என் கிறபடி திருவாய்ப்பாடியில் ப்ரவேசித்துக் காய்ந்தமரங்களில்துளி ருண்டாவதும், இரசமற்றவைகளிலிரசமுண்டாவதும், பாலற்ற பசுமுலைகளிற் பால்சோர்வதுமான அற்புதங்களை யுண்டாக்கி நந் தன் குலமகளையெனப்பெயர் வஹித்து, யசோதைப்பிராட்டியின் மடியாகிற மேற்றிசையில் படிந்து வளர்ந்தருளின னென்னகின்ற கண்ணனைப்போலே,இவ்வாழ்வாரும்ஒருபிறவியிலேஇருபிறவியை யுடையராயிருப்பர். அஃதெங்ஙனே யென்னில்:- அத்திரி, பிருகு, வசிஷ்டர், ஆங்கிரசர்முதலான மஹருஷிகளெல்லோரும்ப்ரஹ்மா வின் பக்கல்சென்று நாங்கள் நித்யவாசஞ் செய்கைக்காகப் பூலோகத்தில்† உத்க்ருஷ்டமான ஒருக்ஷேத்திரத்தைஎங்களுக்கு நிச்சயித்துத் தரவேண்டுமென்று பிரார்த்திக்க "உலகுமழி சையு முள்ளுணர்ந்து தம்மில், புலவர் புகழ்கோலாற்றூக்க" என் கிறபடியே ப்ரஹ்மா வானவர் தன்னுடைய ஜ்ஞானமென்னுந் துலையிலே பஞ்சாஶத்கோடி விஸ்தீர்ணமானபூமியையொருதட்டி லும், திருமழிசையொன்றையு மொருதட்டிலுமாகவைத்துச் சீர் தூக்கிப்பார்க்க; "உலகுதனை வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே,வைத்தெடுத்த பக்கம் வலிது" என்கிறபடியே பூமியை வைத்த பக்கம் நொய்தாய்த் திருமழிசையை வைத்த பக்கம் கனமாயிருக்கக்கண்டு அதற்கு மஹீசார க்ஷேத்ரமென்று பெய ரிட்டுக்கொடுக்க; அந்த ருஷிகளெல்லாம் அந்தவிடத்தைவிடாதே நித்தியவாசஞ் செய்துகொண் டிராநிற்க அவர்களில் பார்க்கவ மஹாருஷியென்பவர் "ப்ரஸிமே யோஜநார்த்தேச விதேஹாதிஷ்டி தம் வநம் - பார்க்கவோ தீர்க்க ஸத்ரேண வாஸுதேவம் ஸநாத நம் - அபிபூஜ்யயதாந்யாய மிதிநீந்ய மகல்பயத்" என்கிறபடி அந்த க்ஷேத்திரத்திற் கடுத்து மேற்றிசையில் கொஞ்சதூரத்தி

† உத்க்ருஷ்டம் - மேன்மை.

விருக்கிற வேதேஹவனத்தில் தீர்க்க சத்ரயாகஞ்செய்து ஸ்ரீபக நாராயணனைப் பஜித்துக்கொண் டிருக்கையில் இந்திரன் அந்த யாகத்தைப் பின்னப்படுத்துவதாய்க் கனகாங்கியென்னுமொரு ஸ்த்ரீயையனுப்ப; அவளுடைய சௌந்தர்யத்தில் மயங்கி அவ ளுடனிணங்கிக் கர்ப்பதானஞ்செய்கையால் "ஸாத்ப்பமாதத்தமு நேப்சபத்நீ ஸாகர்ஹராம்பேபாக ததாநவிஷ்டம்,பபாதகர்ப்போபு விதைஷ்யமாஸே மகாபிதாநே - மஹீயதாரே" என்கிறபடி அந்தப்பெண் கர்ப்பவதியாய்ப் பன்னிருதிங்கள் கழிந்தபிறகு தை மாதம் மகநட்சத்திரங்கூடிய சுபதினத்தில் ப்ரசவிக்கப், பிண்டாக் ருதியாய் ருஷிபுத்ரர் ஸுதர்சநாம்சராயவதரித்தாரென்றும், "ஸித் தார்த்திப்யுஷ்ணரப்மௌ மகாபதிகதே த்வாபரேஞ்ஞாத தாரா ஷோதேஸம்வத்ஸரௌகே கதவதிசதிநேஸப்தவிம்பே மகாக் யே - நக்ஷத்ரேபாநுவாரே முநிவரதநயோ பக்திஸாரோ முநீந் த்ரஃ ஸ்ரீமான் ப்ராபாவதாரம் ஜக துபக்ருதயே பார்வணேந் யேத்யுரத்ர" என்கிறபடி. த்வாபரயுக அந்தியத்தில் சித்தார்த்தி வருஷம் தைமாதம் பானுவாரங்கூடிய மகநட்சத்திரத்தில் பக்தி சாரர் என்கிற முனிஸ்ரேஷ்டர் லோகோபகாரஞ் செய்தற் பொருட்டா யவதரித்தருளினாரென்றும் திவ்யஸூரிசரிதையிலே சொல்லப்பட் டிருக்கிறபடியே த்வாபரயுகம் எட்டுலட்சத் தறு பத்தோராயிரத்துத் தொளாயிரத் தோராவதாண்டில் நிகழ்ந்த சித் தார்த்திவருஷம் தைமாதம் கிருஷ்ணபட்சம் ப்ரதமை ஞாயிற் றுக்கிழமை கூடின மகநட்சத்திரமாகிய சுபதினத்தில் ஸுதர்சனாம் சராய் ஒன்றும் அங்கீகரியாமல் அவதரித் தருளுகையாலே பார்க்க வருஷியும் பத்நியும் அருதரித்து ஒருபிரப்பின் * ஆற்றின்மேலே போட்டுப்போய்விட; ஜகன்மாதாவான பெரியபிராட்டியாருடைய அநுக்ரஹத்தாலே ரக்ஷிக்கப்பட்டிருந்து "சிக்கென்று சென்னிக் கால் சிரிடைப்பின் கண்ணுயிரா பொக்கவருப் பாய்த்தரிவா னன்னிறைந்தான்" என்கிறபடியே ஸர்வாவயவங்களும் பரிபூர்ண மாய் அதிமெ † புரித்துத் தோன்றிப் "போதைக்குழவி" என்கிற படியே அத்யந்தம் சிசுவாய்ப் பகவத் [illegible] ஆழ்வார் பசி தாஹங்களாலே கூப்பிட்டு ஸ்தன்யபானம்வேண்டி ஜனசஞ்சார மில்லாத அவ்வனத்திலே யழுதுகொண்டிருக்க; அவ்வளவிலே மஹீசார க்ஷேத்ரபதியான பெருமான் அங்கெழுந்தருளித்

* ஆற்றில் - புதரில். † புரித்து - தழைத்து.



தன்னுடைய கடாட்சமாகிற கருணாம்ருத வருஷத்தால் அவர் பசி தாகங்களைத்தீர்த்து, ஆராவமுதான தன்னுடைய திவ்யமங்கள விக்ரஹ சேவையையுங் காட்டித் தரிசிக்கச்செய்து மறைய; இவர் பகவத் § விஸ்லேஷத்தைச் சஹியாதவராய் மீளவும் அழத் தொடங்கினார். அப்போது திருவாளனென்னும் பெயரையுடைய வொருவன் அங்கே பிரம்பறுக்கப் போனபடியால் அழுகுரலைக் கேட்டுத் தானும் தன்னுடன் வந்தாருமாகச் சோதித்து இவ ரைக்கண்டு அளவற்ற சந்தோஷத்துட னெடுத்துக்கொண்டுவந்து தன்னுடைய பத்நியான பங்கயச் செல்வியார் கையிற்கொடுக்க; அந்தப் பாக்கியவதியும் † வந்த்யை யாகையாலே மிகவும் ப்ரீதி யுடையவளாய் "உத்தானஞ்செய்து" என்கிறபடியே எடுத்துக் கொண்டு புத்ரஸ்வீகாரம் பண்ணினவளவிலே "வனமுலைகள் சோர்ந்துபாய" என்கிறபடியே முலைப்பால் சோர்ந்துகொடுக்கத் "தத்துக் கொண்டாள்கொலோ தானே பெற்றாள் கொலோ" என்று ‡ விகல்பிக்கலாம்படி ஸ்நேக பூர்வகமாக வளர்த்தருளுகிற இவர் "நந்தகோப னணிசிறுவா நான்சுரந்த முலையுணாயே" என் கிறபடியே பங்கயச்செல்வியாரால் ப்ரார்த்திக்கப்பட்டும் ஸ்தன் யாதி ¶ போஜ்யங்களிலே யாசையற்றவராய்ப், பகவத் குணாநுபவ மாகிற அம்ருதத்தையே தாரகமாகக் கொண்டவராய், அழுகை முதலியவை யொன்றுமின்றி மலமூத்ராதிரஹிதராய்ச், சர்வாவய வங்களும் பரிபூர்ணமாய் விருத்தியடையப் பெற்றவராயிருக்கத் "தத்தோமஹீஸ பூர்தம்வாவிப்ராஜ்ஞோமகாத் கர்ப்பசத மமேத் ரவ்ருத்தஃ- ப்ருத்வாத்புதம் நந்தேபாப்ரபாவம் த்ருஷ்டிந்தமா யாம் தநயேநரித்தஃ" என்கிறபடி இந்த ஆச்சர்யத்தைத் திருமழி சையில் வாசஞ்செய்பவனும் நான்காம் வர்ணத்திற் பிறந்தவனும் புத்ரனில்லாதவனுமான ஒரு வ்ருத்தன் கேட்டுப் பக்குவமாகப் பாலமுது காய்ச்சிக்கொண்டு தன் பத்நிசஹிதனாய் இவரிருக்கு மிடத்தில் விடிவுகாலத்தேறவந்து, பஞ்சசத்திமயமான சிசுவா யிருக்கிற இவருடைய அப்ராக்ருத திவ்யதேஜஸைக்கண்டு, அத் யாச்சர்யப்பட்டுத் தான் கொண்டுவந்த பாலமுதைச் சமர்ப்பித்து அமுதுசெய்தருள வேணுமென்று ப்ரார்த்திக்க; அதைஸ்வீகரித் தருளினார். அந்தத் தம்பதிகளும் சந்தோஷமுடையவர்களாய்ப்பல

§ விஸ்லேஷத்தை - பிரிவை. † வந்த்யை - மலடி. ‡ விகல்பம் - சந்தேகம். ¶ போஜ்யம் - புசிக்கற்குரியவஸ்து.

நாளும் ப்ரீதியுடனே பாலமுது செய்வியாநிற்க; ஒருநாள் அந்த வ்ருத்த தம்பதிகளுடைய 0 பாவத்தையறிந்து அன்றைய தினத்தில் ஸ்வீகரித்த பாலமுதில் கொஞ்சம் † சேஷிக்கவிட்டு, இதை நீங்களுட்கொண்டா லுங்களுக்கு நல்லபுத்ரனொருவ னுண்டாவானென்று திருவாய் மலர்ந்தருளினர்.

அந்தச் சூத்திரதம்பதிகள் ஆழ்வார் ப்ரசாதித்தப் பாலமுது சேஷத்தை அதிக பக்தியுடனுட்கொண்டு, உடனே யௌவன லட்சணத்தை யடைந்து தத்பத்னி கர்ப்பவதியாய்ப் பத்துமாசம் நிறைந்தவாறே, கேசவன் ‡ தமராய்க்கொண்டு மானிடம்பாடாத மஹா ¶ ப்ராக்ஞரான ஒரு புத்திரனைப்ரசவிக்க; ஸ்ரீவிதுரரைப் போல் ப்ரகாசிக்கிற அப்புத்ரனுக்குப் பனிரண்டாவது நாளில் கணிகண்ணனென்று திருநாமஞ்சாற்றி அகில வித்தைகளையும் $ அதிகரிப்பித்தார்கள்.

பின்பாழ்வார் தாம்ருஷிபுத்ரராகையாலேஏழுசம்வத்சரத்தில் அகில வித்தைகளையு மதிகரித்து "இளைப்பினை யியக்கம் நீக்கி யிருந்துமுன் னிமையைக் கூட்டி, யளப்பிலைம்புலனடக்கி" என்கிறபடி இயமநியமமாதி அஷ்டாங்க யோகத்திலே இச்சை யுடையவராய், அதற்கு ஜகத்காரண வஸ்துவை த்யானத்திற்கு விஷயமாகச் சொல்லுகையாலே, அந்த வஸ்துவையறிய வேண்டுமென்றுன்னுங்கால் "பிணங்குஞ்சமயம் பலபல" வாயிருக்கக்கண்டு சமயந்தோறும்புகுந்து, ஆராய்வோமென்று "ஸாக்யோலூகாக்ஷபாதப்ச கபிலஸ்ச பதஞ்சலிஃ, ஏதே ப்ராஹ்ம்ய மதாப்ரோக்தாஸ்தாந் ஸர்வாநஸ்வயமேஸோதயத், மாயாவாதஞ்ச சைவஞ்சந்யாயம்வைஸே ஷிகம்ததா, ஏதே குத்ருஷ்டி ஸமயாஃ பாட்டப்ராபாகராதயஃ" என்கிறபடி சாக்ய உலூக்ய அக்ஷபாத க்ஷபண கபில பதஞ்சலிகளாகிற பாஹ்யசமயங்களிலும் சைவ மாயாவாத ந்யாய வைசேஷிக பாட்ட ப்ரபாகராதிகளாகிற குத்ருஷ்டிசமயங்களிலும் புகுந்தும், உணர்ந்து முரைத்தும் ஆராய்ந்தும் பார்த்துக் கடைசியில் சைவ மதத்திற் ப்ரவேசித்துச்சிவவாக்யரென்கிறப்ரசித்தமானபெயரையுடையவராய், அந்த மதத்திற்காதாரமாக வனந்த நூல்களையுஞ் செய்துவைத்துச் சிவதீட்சையினாலே பூ சஞ்சாரம்பண்ணி

0 பாவம் - கருத்து. † சேஷிக்கவிட்டு - மிச்சப்படுத்தி. ‡ தமர் - உறவினர். ¶ ப்ராக்ஞர் - அறிவுடையவர். $ அதிகரிப்பித்தல்-கற்பித்தல்.



அன்யமத † நிரசனஞ்செய்து, திருமயிலைமார்க்கமாய் வருகையில் பேயாழ்வார்பார்த்து, இப்படிப்பட்டவரைத்தான் விஷ்ணுபக்தராகச்செய்ய வேண்டுமென்று மனதில்நினைத்து "த்ருதோர்த்வ புண்ட்ரஸ்ஸமஹாலலாடே புஜத்வயேலாஞ்சித ஸங்கசக்ரஃபத்மாக்ஷமாலாதி விபோஷிகண்டோஹ்யலக்ஷிதாதித்ய ஸமாநகாந்திஃ" என்கிறபடி திருநெற்றியில் ஊர்த்வபுண்டரமும் இருபுஜங்களில் சங்கசக்ர ‡ லாஞ்சனமும் மார்பில் துளசி நளினாட்ச மாலைகளையுமுடையராய்ச் சூரியனைப்போலே பிரகாசித்துக்கொண்டு அம்மார்க்கத்திலிருக்கிற தம்முடைய திரு நந்தவனத்திலுள்ள சில திருத்துழாய்ச் செடிகளையும் பூஞ்செடிகளையும்பிடுங்கித் தலைகீழதாக நட்டுவைத்து, ஒரு மண் குடத்தில் நூறு துவாரங்களைச் செய்து அதைக்கொண்டு அவற்றிற்கு ஜலம்விடத் தலைப்பட்டார். அதைப்பார்த்த சிவவாக்யரான திருமழிசைப்பிரான் கலுக்கென்று நகைத்துக் குடத்திலெடுக்கப்பட்ட ஜலம் செடியினிடங் கொண்டுபோகப்படுவதன்முன்னமே வழியிலொழுகிப்போவதை யறியாத கொள்கையுமுண்டோ? இந்தப் பேய்த்தனத்தையுடைய விஷ்ணு பக்தனுக்கென்று சொல்ல; அவரிதைக்கேட்டு "ஏகோஹவை நாராயணஆஸீத் நப்ரஹ்மாநஸங்கரஃ" என்கிறபடி பிரஹ்மருத்ராதிகளுக்கு மேற்பட்டவனாய், ஏகநாதனாய், அழிவற்றவனாயிருக்கும் ஸ்ரீமந்நாராயணனைவிட்டு அநித்யமான தேவர்களுக்குப்பரத்வங்கற்பிக்குங் குத்ருஷ்டி மதங்கள்தோறும் புகுந்துமொன்றிலும் பசையிருக்கக் காணாமல் நிலைகொள்ளா நெஞ்சினனாய் வாணாளை வீணாளாகக் கழித்துழலும் பேய்த்தனம் உமக்கேயிருப்பது கிடீர்; அதை நாம் வாய்திறந்து சொல்லவும் அசஹ்யமா யிருக்கையாலன்றோஉமக்கதைசூசிப்பதாகவிப்படிச்செய்தோம்; இதையறிந்து கொள்ளாத நீர் உம்மையும் உம்மைச் சேர்ந்தாரையும் ரட்சிக்க வல்லீரென்று விருதுகூறிக்கொண்டு திக்விஜயஞ் செய்யப்புறப்பட்டதை விவேகிகள் பார்த்தால் நகையாரோ? என்றார்.

அதன்மேல் திருமழிசைப் பிரான், சிவபிரானைப்பார்க்கிலும் பரத்வமுடைய தேவனேயில்லையென்று சிலசாமான்ய சுலோகங்களைச்சொல்லப்பேயாழ்வார் "ஸாத்தஸத்வமயோவிஷ்ணுஃப்ரஹ்மா சைவரஜோதிகஃ ருத்ரஸ்துதாமஸஃ ப்ரோக்தா இதிஸாஸ்த்ரஸ்ய

† நிரசனம்-நிக்கிரகம். ‡ லாஞ்சனம்-குறி.

விப்ரசய: ஐஶ்வர்யம் ப்ரஸாதிதம் பரமேஶ்வரேண நாந்யேநகஷாதிதந்
தக்பாதநித்யமேவ ஸிராவிந்ருதர்முநா'' என்கிறபடி சுத்த
ஸாத்விகமூர்த்தியா யிருக்குமவன் ஸ்ரீமஹாவிஷ்ணு வென்றும்,
இராஜஸ குணத்தை யுடையனா யிருக்குமவன் ப்ரஹ்மாவென்றும்,
தாமச குணத்தை யுடையனா யிருக்குமவன் ருத்ரனென்றும்,
அந்த விஷ்ணுவி னுடைய திருவிக்ரமாவதாரத்தில் மேலுலகங்
களை யளந்த அவன் திருவடியை இவ்விருவரிலொருவனான ப்ரஹ்மா
தீர்த்தங்கொண்டு திருமஞ்சனஞ் செய்திருக்கிறா னென்றும்,
பெருக்காறுய்வடிந்த அந்த ஸ்ரீபாததீர்த்தத்தை மற்றொருவனை
ருத்ரன் ஸிரஸில் தரித்துக்கொண் டிருக்கிறா னென்றும் சாஸ்த்ரங்
களில் † லறுதியிடப்பட் டிருப்பதைத் தெரிந்து கொள்ளாமல்
வாய்கொண்டு பேசவந்த உமக்குப் பரத்வமில்லா திருப்பவனின்னா
னென் றுணர்த்துவோம், கேளுமென்று "ஶிவாக்ருதிர்பஸ்ம
விகதகாத்ரே சர்மாம்பரம் பரமகபாலமாலா த்ருதாக்ஷமாலா
பித்ருகாந ஸ்தா ஜடாதராதிக் வஸநாதிமேபம்'' என்கிறபடி
தேகமெல்லாம் பஸ்மத்தைப்பூசியும் புலித்தோல் யானைத்தோல்
களை வஸ்த்ரமாகத் தரித்தும் ப்ரஹ்மஹத்தியினாலே தொத்திய
மண்டையோட்டி னிரந்தும் சடைமுடியைத்தரித்து மசானத்திற்
சென்று நிர்வாணியாகியு மிருக்கு மொருவனை ஶிவனுடையஸ்வ
ரூபத்தையும் "ப்ரம்மாக்ருதி: ஸ்ருக்ஸ்ருவ தர்ப்பஹஸ்தாஸ—நிர்த்த
ஸம்பூர்ண கமண்டலா சத்ருதாக்ஷமாலா- க்ருதவேத பாடா
ஸநாஸமாராதித ரங்கநாதா அஸ்தீதிநிஞ்சந்மஹநியதத்வம்தத்யா
யதிவேய மிதோவிபாதி அப்ராப்தகாமார்த்த பராதிகேஶ பஸ்யா
க்ருதிந்தாம் கமலாஸநஸ்ய'' என்கிறபடி யக்ஞத்தில் நெய்விடுகிற
ஆஜ்யபாத்ரத்தைக் கைவிடாதவனாய்த் தர்ப்பாபவித்ரத்தையும்ஜப
மாலிகையையுந்தரித்துவேதநடனைசெய்துகொண்டு, எக்காலமும்
ரங்கநாதனையே ஆராதித்துக் கொண்டு, யாதொரு மஹாதத்வமா
யிருக்கும்படியான பகவான் ஸ்ரீமந்நாராயணனே தவிர வேறில்லை
யென்று ஸித்தாந்தஞ்செய்யு மொருவனை ப்ரஹ்மாவின் ஸ்வ
ரூபத்தையும் "விஷ்ணவாக்ருதி: ஸசந்தநாங்கிதாங்கா பார்ஶ்வ
வத்ஸ்வயே ஶோபித திவ்யநாரீபுஜாந்த ரஸ்தாரமணீய லக்ஷ்மிஹீ
க்ரீடமஞ்சீர முகாங்கபுஷ்யாமந்தார மாலாஞ்சித கௌஸ்துபதாபீதாம்
பராலங்க்ருத நீலகாத்ர, அவாப்தகாமாச விபாதி ஶைஷாவிஷ்

† அறுதி-முடிவு.



ஸ்வா க்ருதிந்தாம் விபுதார்யபஶ்ய'' என்கிறபடி சந்தனத்தினால்
அலங்க்ருதமாய் இந்த்ர நீலவர்ணத்தையொத் ததிசயித் திருக்குந்
திருமேனியும் உபயபார்ஶ்வங்களில் பூ நீளா தேவிகளும் திரு
மார்பில் ஸ்ரீ தேவியும் கிரீட குண்டலாதி பாதாபரணங்களும்
பாரிஜாத பசுந் துளவமலர்மாலைகளும் பீதாம்பராதிகளையுமுடைய
வனாய் ஆத்மாக்களையுடையவேண்டிய சர்வபலப்ரதாஸ்தானபூதனா
யிருக்கின்ற பகவானான ஸ்ரீமந் நாராயணனுடைய ஸ்வரூபத்தை
யும் நிரேஉம்முடைய யோக த்ருஷ்டியினாலே பார்த்துப் பரனா
யிருப்பவன் இன்னானென் றறிந்து கொள்ளுமென்ன; இவரும்
அவ்வண்ணமே நிர்ப்பாத்வ நிர்பக்ஷபாதத்வாதிலக்ஷணத்தோடும்
தம்முடையயோகதிருஷ்டியினாலே விஷ்ணுவாக்ருதியே (ரூபமே)
பரதத்வமா யிருக்கக்கண்டு த்ருப்தராய், சடை முடியையும்
சணப்பநார் அரைநாணையும் கழுத்திற் பூட்டி யிருந்த லிங்
கத்தையும் கையில்வைத்திருந்த ஜபமாலிகையையும் சிவக்கெனக்
கழித்துத் தீர்த்தமாடிச் சிருடை தரித்துவந்து பேயாழ்வார்
திருவடிகளில் சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டுத் தன்னைத்திருத்தி
பண்ணிக்கொள்ள வேண்டுமென்று ப்ரார்த்திக்க; அவரிவருக்குப்
பஞ்ச ஸம்ஸ்காரபூர்வகமாகத்திருமந்த்ர த்வயசரமஶ்லோக யோக
ரகஸ்யங்க ளைனத்தையுந் தெரியவருளிச்செய்ய; அவற்றைத் தன்
னெஞ்சுட்கொண்டு "இனியறிந்தேனீசற்கும் நான்முகற்குந்தெய்
வம்'' என்றறுதியிட்டுத் தமதாசார்யரானபேயாழ்வார்சந்நிதியில்
தானே ஜ்ஞானயோகத்தி லமர்ந்திருக்கையில் ஸ்ரீமந் நாராயணன்
தன்னுடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும்—அதை யாதாரமாகப்
பற்றியிருக்கும் ஞான-சக்தி-பல-ஐஸ்வர்ய-வீர்ய-தேஜஸ் என்கிற
ஷட்குணவர்க்கத்தையும் ப்ரகாசிப்பிக்கிற திவ்யமங்கள விக்ரஹத்
தையும் பொலிவடைந்திருக்கிற கிரீடாதி பாதாபரண மீறான
திவ்யபூஷணவர்க்கத்தையு மவற்றினின்றும் பிரிந்துதோன்றுகிற
ஶங்கசக்ராதி திவ்யாயுதங்களையும் பெரியபிராட்டி முதலாயுள்ள
தேவிமார்களையும் "பவாம்ஸ்து ஸஹவை தேஹ்யா'' என்றும்,
"வழுவிலாவடிமை செய்வார்'' என்றும், "சூழ்ந்திருந்தேத்துவர்''
என்றுஞ் சொல்லுகிறபடியே அச்சேர்த்தியிலே அடிமைசெய்
கையே தங்களுக்குத்தாரகாதிகளாக வுடையரான திவ்யபரிஜன
வர்க்கத்தையும், அந்தப்போகத் தாக்ருதிலொயிருந்துள்ள (நலமந்த
மில்லதோர்நாடு) என்னும் அளவற்றஐஸ்வர்யத்தையுடையநாடான

பரமபதத்தையும் ப்ரகாசிப்பித்து ப்ரக்ருதிபுருஷ காலாத்மகமான ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார வ்யவஹாரங்கள் "இன்புறுமிவ்விளையாட்டுடையான்" என்கிறபடியே தன்னிலுந் தன்நியமனத்திலுமிருக்கிறபடியையும் "யந்நாபி பத்மாதபவந்மஹாத்மா ப்ரஜாபதிர் விஶ்வஸ்ருக்" என்கிறபடியே "நின்னுள்ளே நான்முகனைத்தோற்றுவித்து நீருலகெல்லாம் படையென்று முதல் படைத்தாய்" என்றும், "யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்" என்கிறபடியே தனக்கு ஜ்யேஷ்ட புத்ரனாக ப்ரஹ்மாவைத் தன் திருநாபிக்கமலத்தில் உத்பன்னனாக்கினபடியையும் "ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்டாய ஶ்ரேஷ்டாய" என்கிறபடியே அந்தப்ரஹ்மாவுக்கு ஜ்யேஷ்டபுத்ரனாக ருத்திரனை உத்பன்னனாக்கினபடியையும் காட்டியருள; இவரும் "நான்முகனை நாராயணன்படைத்தான் நான்முகனுந் தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்" என்றும் "சாக்கியங்கற்றோஞ்சமணங் கற்றோமச் சங்கரனார் - ஆக்கிய வாகமநூலாராய்ந்தோம் - பாக்கியத்தால் செங்கட் கரியானைச் சேர்ந்தியாந் தீதிலோ - மெங்கட் கரியதொன்றில்" என்றும் தம் வாக்காலே சொல்லி, இதாஸித்தாந்த நிவ்ருத்தபூர்வகமாகத் "திருநின்றபக்கம் திறவிதென்றோர்ந்து" அநுஸந்தித்துப் பேயாழ்வாரிடத்தில் நியமனம் பெற்றுக்கொண்டு தம்முடைய அவதார ஸ்தலமாகிய திருமழிசைக் கெழுந்தருளிக் கஜேந்திர ஸரஸின் கரையிலே "ஆலோட்யஸர்வஶாஸ்த்ராணி விசார்யசபுந: புந:, இதமேகம்ஸுநிஷ்பந்நம்த்யேயோ நாராயணஸ்ஸதா" என்றும், "யோமேஶ்வரம் ஜகந்நாதம் விஷ்ணும் ஜிஷ்ணும் ஶ்ரிய:பதிம், பத்மநாபம் விஶாலாக்ஷம் சிந்தயாமிஜகத்பதிம், இத்யேவம் புண்டரீகாக்ஷம் ஜகத: காரணம்பரம், ஶ்ரியப்பதிம் ஜகந்நாதம் ஸர்வாந்தர்பஹிராஸ்தி" என்றுஞ் சொல்லுகிறபடியே ஜகத்காரணபூதனாய், ஸர்வாந்தர்யாமியாய், புண்டரீகாக்ஷனாய், இலக்ஷ்மீவல்லபனாய்ப்பராத்பரனாயிருக்கும் யாதொரு ஸர்வேஶ்வரனைத் தியானம்பண்ணிக் கொண்டு க்ருதார்த்தராய் எழுநூறுசம்வத்ஸரம் யோகத்திலெழுந்தருளி யிருக்கையில் ஒருநாள் அந்தத்திவ்யதேசத் தெம்பெருமானுடைய வாஹன வஸ்திரங்களில் கிழிந்திருக்கு மவற்றைத் தைத்துக்கொண் டிருக்கக் கைலாசபதியான ருத்ரமூர்த்தி பார்வதீ ஸமேதராய், ரிஷப வாகனமேறித், திரிசூலபாணியாய்,



ஆகாசமார்க்கத்திலே செல்லாநிற்க, இவர்கண்டு அவன் நிழல் தன்மேற்படாதபடி யொதுங்கியிருந்தார். இதைத் தம்பதிகளிருவரும் பார்த்துநின்று, இவரிப்படி செய்வதற்குக் காரண மேதென்று யோசிக்கையில், பார்வதி ருத்ரனை நோக்கி இவனை யாரென்றறிந்து போவோமென்ன, ருத்ரன் இவன் மஹாநுபாவனாயிற்றே நம்மை மதிப்பானோவென்ன; ஆகிலும் கண்டுபோவோமென்று பார்வதி சொல்ல, ருத்ரன் சம்மதித்து இவர் சமீபத்தில்வந்து நிற்க, இவர் கண்ணெடுத்தும் பாராதிருந்தார்; ருத்ரன் நாம் வந்துநிற்க நீர் அலக்ஷியமாகக் காணலாமோவென்ன; இவர் உன்னைக் காண்பதிலெனக்கென்ன ப்ரயோசன முண்டாமென்ன; ருத்திரன் நாம் உமக்கொன்று தரக்கடவோ மென்ன; இவர் நமக்கொன்றும் வேண்டாமென்ன; ருத்ரன் நம் வரவு வியர்த்தமாகாதபடி உமக்கிஷ்டமிருப்பதைக் கேளுமென்ன; இவர் புன்முறுவல் செய்து மோக்ஷந் தரவல்லையாகில் தாவென்ன; ருத்ரன் அது என்னால் தரக்கடவது அன்று, ஸ்ரீமந் நாராயணனாலாவது காணென்ன; ஆனால் இன்றுசாவாரை நாளைக்குச்சாகும்படிப் பண்ணவல்லையோவென்று இவர்கேட்க; அதுவும் கர்மாநுகுணமாய் நடந்தேறுவதுகாணென்று ருத்ரன்சொல்ல; ஆகில் என் ஊசியின்பின்னே நூல்வரும்படி வரப்ரதானம் பண்ணீர்? என்றிவர்கேட்க, ருத்ரனுக்குக் கோபமுண்டாய் இவரையும் † அநங்கனை மன்மதனைப்போ லாக்கக்கடவேனென்று, தன்னுடைய பொறியும் புகையும் கிளம்புகிற நெற்றிக் கண்ணைத் திறக்க, அதினின்றும் சுட்டெரிக்கத் தக்கதோர் அற்புத ஜ்வாலையானது திரை திரையாய் 0 வடவானலம்போலே கிளர்ந்துவர, அப்போது ஸ்ரீய:பதியான எம்பெருமான் இவருடைய யோகதிருஷ்டியில்சேவை சாதித்து, உம்முடைய வலத்திருவடியின் பெருவிரலை நிமிர்த்துவீராகில் அதிலிருந்தும் ஓரக்கினி கிளம்பி ருத்ராக்னியை ஜயிக்குமென்று சாதித்தருள அப்படியே இவரும் தன் வலத்திருவடியின் பெருவிரலை நிமிர்த்த, அந்த நகக்கண்ணினின்றும் ப்ரளய காலாக்னியைப்போலும், வைஸ்வானராக்னியைப் போலும் பயங்கரமா யிருப்பதொரு தீ கிளம்பி ருத்ரனேத்ராக்னியையெதிர்த்து ருத்ரன்பேரிலும் தாவிக்கொண்டுபோக, அதை ருத்ரன் சஹிக்காமல் புஷ்கலாவர்த்தகமென்கிற மேகங்

---

† அநங்கன் - சரீரமற்றவன். 0 வடவானலம் - ஊழித்தீ.

கலே வர்ஷிக்கும்படி யாக்ஞாபிக்க, அம்மேகங்கள் ஆகாசப்பரப்பில் நிறைந்து மின்னி முழங்கி வில்லிட்டு அகிலதாபங்களு மாறும்படியாய் வர்ஷித்து, எரிகிறதணலையும் ஆற்றி, பெருவெள்ளங்கோர்த்தன. அந்த சமயத்திலும் இவர் பர்வதராஜனைப்போல் வர்ஷதாரைக்கு நிலைகுலையாமல், பகவதநுபவ தத்பரரா யிருக்கையால், ருத்ரன் இவருடைய ‡ த்ருட வ்ரதத்தைக் கண்டதிசயித்து, "பக்திசாரர் என்கிற திருநாமத்தையுஞ் சாற்றி, இவர் வைபவத்தைக்கொண்டாடிச் சிரக்கம்பனம்பண்ணித் தன் பத்னியைப்பார்த்துப்பாகவதர்களையெந்தவிதத்திலும் எவராலும்ஜயிக்க முடியாதென்று பூர்வம் அம்பரீஷரால் துர்வாசன் அவமானப்பட்டிருக்கிற வ்ருத்தாந்தத்தாலு முணர்ந்திலையோ! வென்றுரைத்துக்கொண்டு யதாஸ்தானமே போயினன். பின்னும் ஆழ்வார் பூர்வம்போலே யோகநிஷ்டரா யெழுந்தருளி யிருக்க, † யாத்ருச்சிகமாய்ச் சுக்திஹாரன் என்கிற ஒருகேசரன் 0 வ்யாக்ராரூடனாய் ஆகாச மார்க்கத்திலே செல்லாநிற்க, அந்த வ்யாக்ரம் மேலேபோகாமல் திமிர்த்துநிற்க, அவனு மீதேதோவென்றாய்த்துப் பார்க்குமளவில், கீழே மௌனமாய் யோகத்திலெழுந்தருளியிருக்கு மிவரைக்கண்டு அதிசயித்து, அப்போதே ஆகாசத்தினின்றும் பூமியிலிறங்கி இவர் சமீபத்தில்வந்து, ஓய் பார்க்கவ முனீந்திரரே! நீர் தைத்துக்கொண்டிருக்கிற கந்தையை எறிந்துவிட்டு நான்தருகிற இந்த திவ்யவஸ்த்ர நிர்மிதமான கலசத்தைத் தரித்துக்கொள்ளுமென்று கொடுக்கவர, இவரதை யனாதரித்துத் தன் சங்கற்பத்தாலே மணிஸ்வரூபமாய்ச் சூரியகாந்தியேபோல் மின்னுமோர்கவசத்தை யவனுக்குக்காட்ட, அவன்வெட்கித் தன் கழுத்திலிருந்ததொரு ரத்னஹாரத்தைக்கழற்றி இதைஜபமாலிகையாகத் தரித்துக்கொள்ளுமென்று கொடுக்கவர, இவரும் தன் கழுத்திலிருக்கிற துளசி பத்மாக்ஷமாலைகளையெடுத்து இவற்றைப் பாராயென்ன, அவை நவரத்நமயமாய் விளங்கக்கண்டு அத்யாச்சர்யமடைந்து, இவரை மஹாநுபாவரென்றும், பரிபூர்ணரென்றுந் துதித்துத் தண்டனிட்டுப் போயினன்.

அதன்பின்னும் இவரிடத்தில் கொங்கண சித்தனென்கிற ஒரு ரஸவாதிவந்து இவருடைய வைபவத்தைக்கண்டு இவருக்குக்

‡ த்ருட - நிலையான. † யாத்ருச்சிகமாய் - அபேக்ஷையாய்.
0 வ்யாக்ராரூடனாய் - புலிவாகனத்தை யுடையனாய்.



காணிகோடியைப்பேதிக்கச் சக்தியுடையதொரு சில 0 குளிகையைச்சமர்ப்பிக்க, இவரதை யனாதரித்து அவனுக்குத்தம்முடைய பொன்னொத்த மேனியின் புழுதியோடே காதிற்குறும்பியையெடுத்துத்திரட்டி இது காணிகோடாகோடியைப் பேதிக்காதோ பாராயென்று கொடுத்தருள, அவனதை வாங்கிப் பரீக்ஷிக்கையில் அது இவர்சொன்னபடிக் கொத்திருக்கக்கண்டு தன்யோஹமென்று க்ருதார்த்தனாய்ப் போயினன்.

அநந்தரம் ஆழ்வார் ஒரு குஹைக்குள் ப்ரவேசித்து பத்மாசன மிட்டெழுந்தருளித் திருக்கண்களைத் திறவாமல் யோகத்திலிருக்க, பொய்கை, பூதன், பேயார் ஆகிற முதலாழ்வார்கள் மூவரும் "எங்குந்திரிந் தரங்கனம்மானுக்கே காதல்செய் தொண்டராய்" ஸ்ரீரங்காதி திவ்யதேச யாத்ரை செய்துகொண்டு அந்த மார்க்கமாய் வருகையில், ஒரு † அப்ராக்ருத திவ்யதேஜசைக்கண்டு ஆச்சர்யப்பட்டு, இதையாராயக் கடவோமென்று அவ்விடத்தைச் சுற்றிலுஞ் சோதித்துக்கொண்டு வருகையில், குகைக்குள்ளிருந்த இவரைக்கண்டு, இம்மஹாநுபாவர் ஆரோவென்று தங்களுடைய நெஞ்சென்னும் உட்கண்ணாலே பார்த்துப் பார்க்கவ முனீந்திரரே! சுகமாயிருக்கின்றீரோ வென்று ‡ குசலப்ரஸனம்பண்ண, இவர் பத்ம மாதவி குசும கைரவோத்பவ முனிகாள்! பாங்காயிருக்கின்றீர்களோவென்று வினவியருளி "அக்ஷ்ணோ:பலம் த்வாத்ருஶ தர்ஶநம்ஹி ஜிக்வா:பலம் த்வாத்ருஶ நாமகீர்த்தநம், ஶிர: பலம்த்வாத்ருஶவந்தநம்ஹி பாண்யோ:பலம் த்வாத்ருஶ பூஜநஞ்ச" என்கிறபடி பகவானையு மவனடியார்களையுந் தர்சிக்கையே கண்பெற்றதற்குப் பலனாகவும், நாமசங்கீர்த்தனமே நாவுக்குப்பலனாகவும், வந்தனஞ்செய்கையேசிரசுக்குப்பலனாகவும், ஆராதிக்கையே கைகளுக்குப் பலனாகவுங்கொண்டு ஆனந்தக் கண்ணீர்ததும்ப ० புளகீக்ருதராய் அந்யோந்ய வந்தனபரராய், ஒருவரையொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டு மிகவும் ப்ரீதியுடனே பாலுடன்பாலும் தேனுடன்தேனும் கூடினாற்போல இந்நால்வருங்கூடி "தேனூறி யெப்பொழுதுந் தித்தித்து" என்கிற

0 குளிகை - மாத்திரை (மணிபோன்றது).
† அப்ராகிருத திவ்யதேஜஸ் - மாறுதலில்லாத சுந்தரமானபிரகாசம்.
‡ குசலப்ரசனம் - ஒருவரோடொருவர் க்ஷேமம்வினவல்.
० புளகீக்ருதராய் - சந்தோஷத்தையுடையராய்.

படியே பகவத் சரணாரவிந்த மதுவையுண்டு, போதைவேறப் பெற்று சிலகாலம் அந்த விடத்தில்தானே பகவதநுபவம் பண்ணிக்கொண்டிருந்து, அனந்தரம் உகந்த திருவுள்ளத்தையுடையராய், ப்ரீதியுடனே திருமயிலைக் கெழுந்தருளிப், பேயாழ்வாரவதரித்தருளின கைரவதீர்த்தத்தைப்ரீதியுடன்தரிசித்துக்கொண்டு, அங்கேயும் சிலகாலம் யோகத்தி லெழுந்தருளியிருக்க "ஒழிந் திரியும் யோகிகள்" என்கிறபடியே முதலாழ்வார்கள் மூவரும் இவரிடத்தில் அநுமதிபெற்றுக்கொண்டு, பூசஞ்சாரணார்த்தமாக வெழுந்தருளினார்கள்.

அதன்பிறகு, இவ்வாழ்வார் தம்முடைய திருவவதார ஸ்தலமான திருமழிசைக்கெழுந்தருளித், தரித்துக்கொள்ளத் † திருமண்வேண்டிப் பூமியைக் கல்லிச்சோதித்துத் திருமண் அகப்படாமல் கலங்கிக்கிடக்க, அப்போது திருவேங்கடத்தெந்தை இவர் ஸ்வப்பனத்தி லெழுந்தருளித் திருமண் இருக்குமிடத்தை அடையாளத்தோடுங் காட்டியருள, இவர் அந்த சுவட்டிநிந்து திருமண் கண்டெடுத்து அதைக்கொண்டுத் திருமேனியில் த்வாதச ஊர்த்வ புண்டரங்களை யேறியருளப் பண்ணிக்கொண்டு, அதிகப்ரீதியுடன் "சிந்தை மற்றொன்றின் றிறத்தல்லால்" என்கிறபடியே சிந்

† திருமண்காப்பு:—பிரம்மாவின் உள்ளத்தினின்றுஞ் ஜனித்த சனத்குமாசர் ஆதிபுருஷ வராகரூபியாகிய பகவானைச் சாஷ்டாங்கமாகச் சேவித்து ஊர்த்வபுண்டர விஷயமாக வினவியபோது, பகவான் அடியில்வருமாறு விடைபகர்ந்தருளினன்:—திருப்பாற்கடல் மத்தியில் சுவேதத்தீபமொன்றுளது. வைநதேயனென்னுங் கருடாழ்வான் ஒருகால் அத்தீபத்தினின்றும் பாற்கட்டிகளைக் கொண்டுவந்து தன் பிடரிச்சட்டைகளினாலே பலஸ்தலங்களிலுஞ் சிதற அவை சுவேதமிருத்திகையாயின. இம்மிருத்திகையே ஊர்த்வ புண்டரந்தரிப்பதற் குரித்தான திரவியம். பகவானது திருமேனியினம்சமான இம்மிருத்திகையை இரண்டு ரேகைகளாகவும் மத்தியில் பூதேவியினம்சமான அரித்ரா சூரணத்தை ஒருரேகையாகவும் சிரமுதற் பன்னிரண் டிடங்களில் தரிக்கவேண்டும். யாவனொருவன் இத்திருமண் காப்பைச் சுத்திபத்தியாய் வந்தனை பூர்வமாக வேதவிதிப்படி அணிவனோ அவன் சகலாபீஷ்டங்களையும் பெற்று இறுதியில் நிரதிசயாநந்த வீடாகிய பரமபதத்தையடைவானென்பதாம். இதைத்தரிக்கும் அதிகாரி முறைமை, இடம், ரேகை, மந்திரம் முதலியவற்றை உபநிஷதங்கள் கூறுமாறு ஆசாரியன் மூலமாக விரிவாய்த்தெரிந்து கொள்ளலாம்.



கைகளை † க்ஷுத்ர புருஷார்த்தங்களில் வையாது, பகவதநுபவத்திலே நிறுத்திப் பொய்கையாழ்வார் அவதரித் தருளின பொய்கைப்ரதேசத்தில் சிலகாலமெழுந்தருளியிருக்கத் திருவுள்ளமுடையவராகி "யத்ராஸ்ய வ்ரதநாம க்ஷேத்ரம் பாபவிநாசநம், புண்யக்ஷேத்ரேஷு ஸர்வேஷு தஸ்ரைஷ்ட்ய மீரிதம்" என்கிறபடி புண்யக்ஷேத்ரங்களில் சிரேஷ்டமானதாய், சர்வபாபவிமோசனஞ்செய்வதாய் சத்யவ்ரதக்ஷேத்ரமென்கிறபெயரையுடைய திருவெஃகாவுக்கெழுந்தருளி, "ஶயாநம் ஶேஷபர்யங்கே குந்தேந்து தவளப்ரபே, பணாரத்ந ஸஹஸ்ராம்ஶு நவாஸ்தரண விஸ்த்ருதே, நீலஜீமூத ஸங்காஶ: பத்மபத்ர நிபேக்ஷண:, ஸேவ்யமாநோ விஶாலாக்ஷ்யா ஶ்ரியாகமல ஹஸ்தயா, தரண்யாசஸதந்வங் க்பாதாதாவிஶ்வஸ்யவிஶ்வபுக்" என்கிறபடி ‡ சரத்கால சந்திரனைப்போல் ப்ரகாசிக்கும் ஆயிரம் பணமகுடங்களையுடைய திருவனந்தாழ்வானென்கிற ம்ருதுவான படுக்கையில் நீருண்ட பர்வதத்தினுச்சியில் சாய்ந்த மேகத்தைப்போல் சயனஞ்செய்து ஸ்ரீதேவி பூதேவிகளால் சேவிக்கப்படுமவனாய், சிருஷ்டி கர்த்தாவான ப்ரம்ஹாவைத் தன்னுடைய திருநாபிக்கமலத்தில் தோற்றுவித்துக்கொண்டிருக்கிற சொன்னவண்ணஞ்செய்த பெருமாளைச் சேவித்து க்ருதார்த்தராய்ப், பொற்றாமரைப் பொய்கையையுந் தர்சித்து, அந்த தீரத்தில் ௭௰ சம்வத்சரகாலம் மெழுந்தருளியிருந்தார். அப்போது கணிகண்ணன்வந்து இவரை யடிபணிந்து இவர் கடாக்ஷத்தைப்பெற்று சிசுருக்ஷை செய்துகொண்டு பகவத் 0 ப்ராவணரா யிருக்கையில் அங்குள்ள ஓர் தாசிக்கிழவி வந்து, ஆழ்வார் திருவடிகளிலே பக்தியுக்தையாய் "கடைத்தலை சீக்கப் பெற்றால் கடுவினைகளையலாமே" என்கிறபடியே ஆழ்வாரெழுந்தருளி யிருக்குமிடத்தில் சீத்தல் மெழுகல் கோலமிடல் ஆகிய அலங்கார கைங்கர்யங்களைச் செய்துகொண்டிருக்க, யோகத்திலிருக்கிற இவ்வாழ்வார் ஒருநாள் திருக்கண் மலர்ந்தருளி, அவள்செய்கிற [] கிங்கர வ்ருத்திக்கு மிகவுமுகந்த திருவுள்ளத்தராய், உன்னிஷ்டத்தி லிருப்பதைச் சொல்லாயென்று கேட்க அவள் இவரடியில்வீழ்ந்து சுவாமீ! அடியேனிடத்தில் க்ருபாதி

† க்ஷுத்ர புருஷார்த்தங்கள்-தேவதாந்தரங்களான அற்பபலன்கள்.
‡ சரத்கால சந்திரன் - வசந்தகால சந்திரன்; 0 ப்ராவணம் - பிரீதி.
[] கிங்கரவ்ருத்தி - கைங்கர்யவிருத்தி.

சயமுண்டாகில் இந்த வார்த்திக்யம்போய் யௌவன ... யும்
வரும்படி கடாக்ஷித்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க அவ
ளைக் குளிரக்கடாக்ஷித்து அப்படியே யாகக்கடவதென்று திரு
வாய் மலர்ந்தருளினார். அவ்வளவிலே, 0 ப்ராப்த யௌவனையாய்
தேவஸ்த்ரீயைப்போலே அதிசுந்தரையாக, தத்ராஜ்யாதிபதியான
பல்லவராயனென்பவன் அவளைக்கண்டு மன்மதபாணபாதிதனாய்த்
தனக்குப் பத்னியாக வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவளுமனு
கூலித்து அவனுடனே ‡ அதிமாநுஷபோகங்களையநுபவியாநிற்க,
ஒருநாள் பல்லவராயன் தனக்கு நாளுக்குநாள் சரீரம் † ஜரித்து
வருவதையும் அவளுக்கு அந்த யௌவன மாறாமலிருப்பதையுங்
கவனித்து அவளைப்பார்த்து உனக்கிந்த அதிமாநுஷ வைபவ
மான யௌவனம் எங்ஙனமுண்டாயிற்றென்றுகேட்க, எனக்கிது
ஆழ்வார் கிருபையாலுண்டாயிற்று; ஆகையால் நீயும் உன் அகத்
திற்கு நித்யமுமுபாதானம் பண்ணவருகிற கணிகண்ணரை யநு
வர்த்தித்து அவருடைய புருஷகாரத்தால் அவரது தேசிகரான
பக்திசாரரென்கிற ஆழ்வாரை யடிபணிந்து சிசுருஷைசெய்தா
யாகில் இப்படிப்பட்ட யௌவனத்தைப் பெறுவாயென்று சொன்
னாள். அரசன் கணிகண்ணரையழைத்து ஐயா! உமதாசார்யரை
நான் சேவிக்கக் காதல்கொண் டிருக்கிறேன்; நீர் கிருபைசெய்து
அவரைஎன்னிடம் அழைத்துவரவேண்டுமென்ன; கணிகண்ணர்
நம்மாசாரியர் ஒருவரகத்துக்கு மெழுந்தருளாரே! அரசராயிருப்
பினும் [] கணிசித்துப்பாராரே! என்றார்; பின்பு அரசன் கணிகண்
ணரைப்பார்த்துத் தன்மேற் கவிபாட வேண்டுமென்றபேக்ஷிக்கக்
கணிகண்ணர், "நாக்கொண்டு மானிடம் பாடேன்" என்றும்,
"வாய்க்கொண்டு மானிடம் பாடவந்தகவியேனல்லேன்"என்றும்,
தம்முடைய அத்யவசாய ஹேதுவான சிஷ்டாசார வசனங்களைச்
சொல்லித் தான் பகவத் பாகவத விஷயமொழிய நரஸ்துதிபண்ணி
ஒருவரையும் பாடுவதில்லை யென்றார். அதன்மேலும் அவன்
தன்னைப் பாடவேண்டுமென்று கணிகண்ணரை நிர்ப்பந்திக்க,
"ஆடவர்க ளெங்ஙனங் கல்லா ரருள்சுரந்து, பாடகமு மூரகமும்

0 ப்ராப்தயௌவனை - சித்தித்த யௌவன பருவத்தினள்.
† ஜரித்து - வார்த்திகப் பருவத்தால் தளர்ந்து.
‡ அதிமாநுஷ - மனித சுபாவத்தைக் கடந்த.
[] கணிசித்து - மதித்து.



பாம்பணையும் - நீடியமால், நின்று னிருந்தான் கிடந்தா னிறவன்
றோ, மன்றார் பொழிற்கச்சி மாண்பு" என்றுசொல்ல, அரசன்
அதிக கோபங்கொண்டு, நம்மைப் பாடென்றால் நம்முடைய
ஊரையுந்தெய்வத்தையும்பாடினீர்; ஆனபடியால் நீரிந்தக்ஷணமே
நம்முடைய ராஜ்யத்தினின்றும் போய்விடவேண்டிய தென்று
சொல்ல, கணிகண்ணர் சடக்கெனத்திரும்பித் தம தாசார்யரான
ஆழ்வாரிடத்தில்வந்து தண்டன் சமர்ப்பித்துத் தனக்கும் அரச
னுக்கும் நடந்த செய்தியை விண்ணப்பஞ்செய்து, தனக்கு விடை
தந்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க; ஆழ்வார் தாமுமுடல்
செய்து, நீர்போவீராகில் நாமிங்கிருக்கப் போகிறதில்லை; நாம்
புறப்பட்ட பிறகு எம்பெருமானும் இங்கு கண்வளர்ந்தருளப்
போகிறதில்லை; அவனில்லாதபோது 0 தத்பரிகரபூதரான ப்ரம்
ஹாதிகளுமிருக்கப் போகிறதில்லையென்று திருவாய் மலர்ந்து
"வெஃகாவிலுன்னிய யோகத்துறக்க மானவனையும்" எழுப்பிக்
கொண்டு வருவதாய், திருவெஃகா நாயினார் முன்பெழுந்தருளி
"கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி, மணிவண்ணா நீ
கிடக்கவேண்டா - துணிவுடைய, செந்நாப் புலவனும் போகின்றேன்
னீயுமுன்றன், பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்" என்று
விண்ணப்பஞ் செய்ப, அந்த எம்பெருமானும் இவர்சொன்ன
வண்ணமே பாம்பணையைச் சுருட்டிக்கொண்டு இவர் பின்னே
தொடர, "சுடர்கொள்சோதியைத் தேவருமுனிவருந் தொடர"
என்கிறபடியே மற்றுமுள்ள ஆலயங்களிலிருக்கிற தேவதைகளும்
எம்பெருமான் பின்றொடர, கணிகண்ணருடன் கலந்துகொண்டு
ஊரைவிட் டெழுந்தருளினார். பின்பு "அபிவ்ருக்ஷா: பரிம்லா
நாஸ்ஸ புஷ்பாங்குரகோரகா:, உபதப்தோதகாநத்ய: பல்வலா
நிஸராம்ஸிச" என்கிறபடி திருவயோத்தியிலிருந்துசக்ரவர்த்தித்
திருமகன்புறப்பட்டவனந்தரம் மரங்கள்வாடியும்புஷ்பங்களுலர்ந்
தும் ஆறுவடிந்தும் அந்நகர்பொலிவை யிழந்தாற்போலகாஞ்சிமகா
நகரில் ஸ்தாவரங் தடாகங்க ளுடைய வாடி வடிவழகடங்கி வற்
றித் தபிக்க, ஆலயங்கள்தோறும் தேவதைகளின்றியே அந்த
காரம்கவிந்து உதயாஸ்தமயந் தெரியாதபடி "நீளிரவாய் நீண்ட
தா" லென்கிறபடியே † கனதிமிர ‡ பூயிஷ்ட்டமாயிருக்கின்றதை

0 தத்பரிகரபூதர் - ஈசுவரனுடைய பரிவாரதேவர்.
† கனதிமிரம் - மிக்க இருள்; ‡ பூயிஷ்டம் - நிறைவு.

அரசனும் மந்திரிகளுங்கண்டு போரக்லேசித்து இவர்களைப் பின்றொடர்ந்து "ஓரிரவிருக்கை" என்கிற கிராமத்திலே கண்டு கப்படத்தைக்காட்டிக் கணிகண்ணர் திருவடியில்வீழ்ந்து நகர்க்கேற வெழுந்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க, கணிகண்ணரும் ஆழ்வாரை வேண்டிக்கொள்ள, ஆழ்வார் மீண்டெழுந்தருளும்படித் திருவுள்ளமாய், ஆஸ்ரிதபரதந்த்ரனான "சொன்னவண்ணஞ்செய்த பெருமாளை"ப் பார்த்துக் "கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி, மணிவண்ணா நீகிடக்க வேண்டுந்-துணிவுடைய, செந்நாப்புலவனும் போக்கொழிந்தேனீயுமுன்றன் பைந்நாகப் பாய்படுத்துக் கொள்" என்று விண்ணப்பஞ் செய்ய, பெருமாளும் சொன்னவண்ணஞ்செய்து திருவெஃகாவுக் கெழுந்தருளி ஆழ்வாருடைய ப்ரபாவத்தை யாவருமறிந் துஜ்ஜீவிக்கலாவதாய்த் தன்னை ப்ரத்யக்ஷமாகக்காட்டிப் பூர்வம்போலே திருவனந்தாழ்வான்மேல் கண்வளர்ந்தருளினார்.

ஆழ்வார் தாம் சொன்னவண்ணமெல்லாஞ் செய்த நாகத்தணையானுடைய சௌலப்யத்தை யநுஸந்தித்து "வெஃகணைக் கிடந்த தென்னநீர்மையே" என்று ப்ரீதராய்ப்பாடியருளி "நிறைந்தசீர் நீள்கச்சி" என்கிறபடியே பொலிவடையப்பெற்ற அந்நகரியில்தானே, "வெள்ளத்தரவிற் றுயிலமர்ந்தவித்தினை யுள்ளத் தூக்கொண்டு" யோகத்தில் சில்கால மெழுந்தருளியிருந்து, "யோநரஃ கும்பகோணேஸ்மிந் ஸ்நாநதர்மபிதிஷ்டதி, கரஸ்தம் தஸ்யவைகுண்டம் கிமுதாந்ய விபூதயஃ" என்கிறபடி வைகுந்தமாநகரைக் கரதலமாகப்பெறும் யோக்யதையைத்தருமதான ப்ரபாவாதிசயத்தையுடைய திருக்குடந்தையி லிருக்கிற ஆராவமுதாழ்வாருடைய வீரார்கோலத்தைச் சேவித்து, அங்கே நித்யவாசம்பண்ணத் திருவுளமாய், "நலத்தால்மிக்கார்குடந்தைக் கிடந்தா யுன்னைக்காணலா ஞனலைப்பாய்" என்கிறபடியே அதித்வரையா யெழுந்தருளுகையில், மார்க்கத்திலுள்ள பெரும்புலியூர் என்கிற கிராமத்திலோர் திண்ணையின்மேல் அவஸரித்துவீற்றிருக்க, அத்திண்ணையிலிருந்து அத்யயநம் பண்ணிக்கொண்டிருந்த ப்ராம்ஹணர்கள் இவரைச்சூத்ரனென் றவமதித்து வேதவாக்யங்களிவர்காதில் விழப்போகாதென் றெண்ணி, அத்யயனத்தைத் தவிர்ந்திருந்து, இவரவ்விடத்தைவிட் டெழுந்து போகையில் தொடங்கத் தலைப்பட்டு விட்டதறுவாய்த் தோன்



றாமல் தவறித்தடுமாற, இவர் கொஞ்சநாரத்தி லிருந்தபடியே தரையிற் கிடந்ததோர் கருப்புநெல்லையெடுத்து நகத்தாற்கீறிச் சூசிப்பித்தருள "க்ருஷ்ணாநாம்வ்ரீஹீணாம் நகநிர்பிந்நம்" என்கிற வாக்கியந்தோன்றி "நஶூத்ரா பகவத்பக்தாவிப்ரா பாகவதாஸ்ம்ருதாஃ" என்கிறபடி பகவானான ஸ்ரீமந்நாராயணனை நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நீங்கப்பெறாத மஹாநுபாவரைச் சூத்ரரென்று அவமதிக்காது விப்ரரென்றும் பாகவதரென்றும் நினைக்கவேண்டுமென்கிற ப்ரமாணத்தாற் கட்டுண்டவர்களாய்த் தெளிந்துவந்து தண்டன் சமர்ப்பித்தார்கள். பின்னையு மிவர் அந்தக் கிராமத்தில் உபாதாநார்த்தமாகச் சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் கிராமார்ச்சையான எம்பெருமானுஞ் சந்நிதிக்குள்ளிருந்தபடியே இவரெழுந்தருளுகிற திருவீதிகள்தோறும் † அபிமுகமாய்த் திரும்பியருள அந்த ஆச்சர்யத்தை நம்பியார்கண்டு அங்குள்ள சில ப்ராம்ஹணர்களுக்குக்காட்ட, அவர்கள் அங்கே யாகஞ்செய்துகொண்டிருந்த பெரும்புலியூரடிகளிடமோடிக் "கண்டோங் கண்டோங் கண்டோங் கண்ணுக்கினியனக் கண்டோம்" என்கிறபடியே இவருடைய ப்ரபாவத்தை விஸ்தரித்துச்சொல்ல யாகதீக்ஷிதர் கேட்டு "மெய்யடியார்கள்தம் ஈட்டங்கண்டிடக் கூடுமேலது காணுங்கண்பயனாவதே" என்று அதிப்ரீதியுடன் யாகசாலையிலிருந்து வாசலேறச்சென்று இவருடைய பஞ்சசக்திமயமான விக்ரஹத்தைச் சேவித்துப் "போதுமினமதிடம்புகுதுக" என்கிறபடியே நம்முடைய யாகசாலைக் கெழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து, எழுந்தருள்வித்துக் கொண்டுபோய் இருக்கச்செய்து அக்ரபூசைபண்ண, அதைக்கண்டு அங்குள்ள ‡ அத்வர்யுதொடக்கமான சடங்கிகள் இவரைக்கொண்டு யாகத்தை 0 உபஹதியாக்கினீரென்று, (தர்மபுத்திரனுடைய ராஜசூயயாகத்தில் க்ருஷ்ணனுக்கு †† அக்ரபூஜைபண்ணினபோது சிசுபாலன் ‡‡ பகுமுகமாகப் [] பருஷோக்திகளைப்பண்ணினாற்போல) இவரைப் "பொறுப்பரியனகள்பேசி" () க்ரோதிக்கத்தீக்ஷிதர்வ்யாகுலாந்தஃகரணராய் இவரைப்பார்த்து "இவர்களேதேனும் பேச

† அபிமுகம்-எதிர்முகம். ‡ அத்வர்யு-யாகத்திற்குத்தலைமைவாய்ந்தவர். 0 உபஹதி-தடை. †† அக்ரம்-தலைமை. ‡‡ பகுமுகமாக-பகிரங்கமாக. [] பருஷோக்திகள் - கடூரமான வார்த்தைகள். () க்ரோதிக்க-பழிக்க.

நான்கேட்கமாட்டேன்" என்றுவிண்ணப்பஞ்செய்ய, இவர் இனித் தம்மை வெளியிடாதிருக்க வொண்ணாதென்றெண்ணி "அஷ்டாங்கயோக ஸித்தாநாம் ஹ்ருத்யோக நிரதாத்மநாம், யோகிநாமதிகாரஸ்யாதேகஸ்மின் ஹ்ருதயாம்புஜே, ஹ்ருத்புண்டரீக மத்யஸ்தம்ஶங்குசக்ரகதாதரம், பீதாம்பரதரம்தேவம் தர்ஸயாமாஸயோகிராட்" என்கிறபடியே அஷ்டாங்க யோகஸித்தி கைபுகுந்த யோகிகளுடைய ஹ்ருதயகமலங்களிலந்தர்யாமியாயிருக்கும் யாதொருசர்வேசுவரனைப் பிறர்கண்படக் காட்டுவதான ஓர் சக்தியையுடைத்தாயிருப்பர்களென் றுரைக்குஞ் சாஸ்த்ரப்படியே தனக்குளந்தர்யாமியாய்ச் சங்கசக்ரபீதாம்பரதரனாயிருக்கும் "அற்புதனனந்தசயனனைப்" பார்த்து "அக்கரங்களக்கரங்களென்றுமாவதென்கொலோ, இக்குறும்பை நீக்கியென்னை யீசனுக்கவல்லையேற், சக்கரங்கொள்கையனே சடங்கர்வாயடங்கிடவுட்கிடந்தவண்ணமே புறம்பொசிந்துகாட்டிடே" என்று விண்ணப்பஞ்செய்யத், தம்மையேதொழுவார்க்குத் தம்மையேயொக்கவருள்செய்பவரான ஒண்சங்கதை வாளாழியான் "அரவத்தமளியினோடு மழகியபாற்கடலோடும் அரவிந்தப்பாவையுந்தானு" மாய்க் கண்வளர்ந் தருளுகிறபடியை அனைவருங் கண்டநுபவிக்கும்படி இவர்திருமேனியிலே ப்ரத்யக்ஷமாக்கிச், சாரூப்யப்ரதானஞ்செய்தருள, கர்வித்த சடங்கிகளனைவரும் இவர்திருமார்வத்தில் ப்ரகாசிக்கின்ற எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்கிரகத்தைக் கண்களாரச்சேவித்து, இவர்திருவடிகளிலே சாஷ்டாங்கப்ரணாமத்தைப்பண்ணி, † க்ஷமைகொண்டு இவரைப்ரம்ஹரதமேறியருளப்பண்ணி, மனங்குளிரச்செய்து ‡ நக்ஷமாமிகுலக்ஷயமாகாமல் "திருமாலடியார்களைப் பூசிக்கநோற்று" என்கிறபடியே க்ருதார்த்தரானார்கள். இவரவர்களுக்கு பஹுப்ரகாரமாகஜ்ஞானப்ரதானம்பண்ணி அவர்களை வாழ்வித்தருளித், 0 ததனந்தரம் "செழுமாமணிகள்சேருந்திருக்குடந்தையை" நோக்கிஎழுந்தருளி அங்கே ஆராவமுதப்பெருமானுடைய ஏரார்கோலத்தைச்சேவித்து அவர்விஷயமாக நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழியையுந் திருச்செவிசாற்றியருளிப், பிறகு தம்மாற்செய்யப்பட்டிருந்த அகிலக்ரந்தங்களையுந் திருக்காவிரி ப்ரவாஹத்திலேவிட்

† க்ஷமை-மன்னிப்பு. ‡ நக்ஷமாமி குலக்ஷயமாகாமல் - குலநாசத்தின் க்ஷமிப்பின்மை யுண்டாகாமல். 0 ததனந்தரம்-அதன்பிறகு.



டிருக்க அவற்றில் திருச்சந்தவிருத்தமும் நான்முகன் திருவந்தாதியும் அந்தப்ரவாஹத்தில் எதிர்த்துவர அவற்றையெடுத்துக்கொண்டு மறுபடியும் ஆராவமுதனைச்சேவித்துக் "காவிரிக்கரைக்குடந்தையிற்கிடந்தவா றெழுந்திருந்துபேசு" என்று விண்ணப்பஞ்செய்ய ஆராவமுதன் தன்திருமுடியை நிமிர்த்தியெழுந்திருக்கப்போகையில் அந்த சௌலப்யத்தைக்கண்டு "வாழிகேசனே" என்று மங்களாசாசனஞ்செய்ய, ஆராவமுதன் 0 உத்தானசயனங்கொண்டு சேவைசாதிக்க, அந்த திவ்யமங்கள விக்ரஹத்தையே த்யானம் பண்ணிக்கொண்டு யோகத்தில் இரண்டாயிரத்துமுன்னூறு சம்வத்சரமங்கெழுந்தருளியிருந்து, இப்படித் திருமேனியுடனே அன்னாகாரவர்ஜ்ஜிதராய்ப் பலகாலங்களில் கிஞ்சித் † கதாசித்தமாக அமுதுசெய் தருளிக்கொண்டு, விஷ்ணுதர்சனஸ்தாபனாசார்யராய் மூவாயிரத்தெழுநூறு சம்வத்சர மிந்தவிபூதியிலிருந்து ()நிமக்னரையும் உயர்த்திவாழ்வித்தருளினார்.

திருநக்ஷத்ர தனியன்.

"மகாயாம் மகரேமாஸே சக்ராம்சம் பார்க்கவோத்பவம்
மஹீஸாரபுராதீசம் பக்திஸாரமஹம் பஜே"

குறிப்பு:—இவர்த்வாபரயுகத்தில் ௪000 சம்வத்சரம் அன்யமதங்களிற் பிரவேசித்திருந்து, நின்ற ௯௯ம், கலியுகத்தில் ௩௬௦௪ம் சேர்ந்து ஆக ௩௭00 சம்வத்சரம் விஷ்ணுதர்சன ஸ்தாபனாசார்யராய் ப்ரகாசித்து ஆக ௪௭00 சம்வத்சரம் இந்த விபூதியிலெழுந்தருளியிருந்தார்.

திருமழிசையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

* குறிப்பு:—இங்கே அவதாரக்ரமத்தைப் பார்க்கில், நம்மாழ்வாருடையவைபவத்தை யெடுக்க வேண்டுவதிருக்க, ஸ்ரீகுலசேகராழ்வாருடையஅவதாரத்தைச்சொல்லுவதற்குக்காரணமென்னவென்று நஞ்ஜீயர்ஸ்ரீபட்டரைக்கேட்க அவர் "நிரூப்யாவயவம் பூர்வம்பஸ்சாத்தஸ்ய நிரூபணம், யதோவயவிநஶாஸ்த்ரைகர்த்தவ்யம் ஶாஸ்த்ரநிர்ணயः" என்கிறபடி ஓருருவத்தைநிரூபிக்கவேண்டுமாகில் முகம், கண், வாய், கை, முதலிய அவயவங்களை யதற்கலங்காரமாக முன்னே நிரூபிக்கத்தக்கதென்று சாஸ்த்ரமிருக்கையால் அந்தசடகோபர் அவயவியாகவும் மற்றவர்களவருக் கவயவங்களாகவுமிருப்பதைநோக்கி நாமுமிங்ஙனஞ் சொல்லத்தொடங்கினோமென்றருளிச்செய்தார்.

0 உத்தானசயனம்-நிமிர்ந்துகிடத்தல். † கதாசித்தம்-இடைவிட்டகாலம் (நேர்ந்தபோது). () நிமக்நர்-சமுசாரத்திலழுந்தினவர்

# ஸ்ரீகுலசேகராழ்வார் வைபவம்.

## தனியன்கள்.

மணக்கால்நம்பிக ளருளிச்செய்தது.

இருவிகற்ப நேரிசைவெண்பா.

இன்னமுத மூட்டுகே னிங்கேவா பைங்கிளியே
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமான்—பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோ னெங்கள்
குலசே கரனென்றே கூறு.

கட்டளைக்கலித்துறை.

ஆரங் கெடப்பர னன்பர்கொள் ளாரென் றவர்களுக்கே
வாரங் கொடக்குடப் பாம்பிற்கை யிட்டவன் மாற்றலரை
வீரங் கெடுத்தசெங் கோற்கொல்லி காவலன் வில்லவர்
சேரன் குலசே கரன்முடி வேந்தர் சிகாமணியே. [கோட.

—

மலைவளம் நிலவளம் நீர்வளங்களையுடைய கொல்லிநகரத்தை யாண்டுக்கொண்டிருந்த மஹாசக்திசீலனும், நன்னெறியாளனுமான திடவ்ரதபூராஜதேவனென்னும் † வஞ்சிவேந்தன் வெகுநாள்வரையிலும் தனக்குப் புத்ரப்பேறு சித்தியாதிருந்தகாரணத்தால் வ்யாகுலாந்தஃகரணனாகி, ஒருநாள் தன்னுடைய சமஸ்தானத்திலிருக்கும் பண்டிதர்களை நோக்கி நாமிதற்கென்ன செய்தாற்றீருமென்று வினவ, அவர்கள் ஐயனே! பூர்வத்தில் இக்ஷ்வாகு வம்சஸ்தரான தசரதசக்ரவர்த்தி யென்பவரு மிப்படியே சிந்தை கலங்கி நல்ல கேள்வியையுடையவராகி வசிஷ்டாதிமஹருஷிகளை முன்னிட்டுக்கொண்டு சர்வலோக சரண்யனை ஸ்ரீயஃபதியின்முகோல்லாசமாக, புத்ர காமேஷ்டி யென்னுமோர் ப்ரபலமான யாகத்தைச்செய்து, அவனையே தனக்குப் புத்ரனாகவாய்க்கப்பெற்று மகிழ்ந்திருந்தா ராகையாலே, நீருமப்படியே சர்வபலப்ரதனான அந்த ஸ்வாமியினுடைய கடாக்ஷத்துக்குப் பாத்ரராக முயன்றலிக்குறை தீருமென்ன, அரசனதிக

† வஞ்சி-அனந்தபுரம் (திருவாங்கூர்).



சந்த்ருஷ்டனாய் அனேகசற்குண சம்பன்னரான ஸ்ரீவைஷ்ணவர்களை முன்னிட்டுக்கொண்டு 0 அப்ரமேயர்சந்நிதியில் புத்ரகாமேஷ்டியாகத்தைக் குறைவறச்செய்துமுடிக்கத் தத்பத்நியாகிய நாதநாயகியம்மாள் கர்ப்பவதியாய்ப் பத்துமாதமும் பூர்த்தியானவளவில் "தஸ்மாதபூச்சே ரகுலப்ரதீப ஸ்ரீகௌஸ்துபாத்மா குலசேகராக்யஃ, மஹீபதிர்மாகபுநர்வ ஸுஹ்யத்தினேஹ ரேஃ பூர்ணகடாக்ஷலக்ஷ்யஃ" என்றும் "கல்யாப்தேஸ்ஸகலஸங்க்யயாவ்யபகதே மாஸேசமாகாபிதே, வர்ஷேசாபி பராபவே ஸுர குரோர்வாரேச பக்ஷேஸௌ, த்வாதஸ்யாக்யதிதௌபுநர்வஸுதினேப்ரீத்யாக்யா யோகான்விதே, த்ராதும்கஃ குலஸேகரஃ க்ஷிதிபதி ஸ்ரீகௌஸ்துபாத்மாபவத்" என்றுஞ்சொல்லுகிறபடியே, சேரகுலத்துக்கோர் தீபத்தைப்போல்பவரான குலசேகராழ்வார் எம்பெருமானுடைய ஸ்ரீகௌஸ்துப மாணிக்கத்தினம்சபூதராய், கலியாப்தம் இருபத்தெட்டில், பராபவவருஷம், மாசிமாதம், குருவாரம், சுக்லபக்ஷம், த்வாதசி, புநர்பூசம், ப்ரீதிநாமயோகங்கூடியசுபதினத்திலவதரித்தருளினர்; இவரவயவசுந்தரசேவையில் தாயாராகிய நாதநாயகியம்மாளீடுபட்டு அதிசயானந்த வாரியில்மூழ்கி இவரைப்பெற்றதனாலுண்டான வருத்தங் கிஞ்சிற்றேனுந் தோன்றாதிருந்துவிட்டாள். புத்ரோத்பத்தியைக் கேட்டவரசனும் பெருங்களிப்படைந்து, உத்சவங்கொண்டாடி ஜாதகங்கணித்துப் பனிரண்டாவதுநாளில் சுற்றத்தார்தொடக்கமான மற்றவர்களுஞ் சூழ்ந்திருக்கத் தொட்டிலில் கிடத்தி மட்டிலாவைபவத்துடன் மங்களம்பாடிக் குலசேகரனென்று திருநாமஞ்சாற்றி மகிழ்ந்திருந்து † சௌளம் அன்னப்ராசனமுதலிய கர்மங்களையெல்லாங் காலவளவுபடிக்கு நடத்திவைத்து, ஏழாவது திருநட்சத்திரத்தி லுபநயனஞ்செய்து, குருமுகமாகவித்யாரம்பஞ்செய்வித்தனர். இவர்மயர்வறமதிநலமருளப்பெற்றவ ராகையால் சிலகாலைக்குள்ளாகவே வேதவேதாந்த அங்கோபாங்க இதிஹாஸாதிகளிலுள்ள ‡ சேக்கங்களை (சமுத்ரஜலத்தை யாவிரூபமாக க்ரஹிக்கின்ற சூரியனைப்போல)க் ஞானரூபத்தாற்க்ரஹித்துப்பத்தியென்றும்வீட்டின்கண்வைத்து நெறி

0 அப்பரமேயர் - அளவிடக்கூடாதவர், பகவான்.

† சௌளம் அன்னப்ராசனம் - மயிர்கழித்தலும் சோறூட்டலும்.

‡ சேக்கங்களை - முழுமையும்.

முறைதவறாத அறிவுடையவராயிருக்க, இதை அரசன்கண்டுகளிப்படைந்து இவருக்கு யௌவனம்வந்தவளவில் திருக்கல்யாணமும் இராஜ்யாபிஷேகமும் செய்துவைத்து இவர் ப்ரஜாபரிபாலனஞ்செய்யுமுறையையுஞ் சிலநாளருகிலிருந்து பார்த்தானந்தித்துக் கலிதீர்ந்து, அனந்தரந் தான் றவஞ்செய்து சத்கதியையடைய விரும்பிப் பத்நிசஹிதனாய் அரண்யவாசஞ் செய்யப்போயினன். பின்பு கல்விக்கிருப்பிடமும், செல்வத்திற்கு உதிப்பிடமும், சற்குணத்திற்குச் சுரப்பிடமுமான இவர் தந்தேசத்திலுள்ளாரை ஜாதியாசாரத்தினின்றும் வழுகாதொழுகும்படியாயும், சிறியதைப் பெரியது நலியாதபடியும், விவேகிகளை யவிவேகிகள் நிந்தியாதபடியும் நெறிப்படுத்தி யாண்டுகொண்டு வாழுகையில், ஒருநாள் உபயவிபூதிநாயகனான திருவேங்கடத்தெந்தை, இவர் ஸ்வப்பனத்தில் தனது நிர்ஹேதுகபரமக்ருபையாலே சேவைசாதித்து இவரைப் பரமசாத்விகராம்படிக் கடாக்ஷித்துத் தன்னுடையஸ்வரூபரூபகுணவிபூதிகளை யெல்லாங்காட்டியருளி மறைய, இவர் திடுக்கிட்டு நித்திரைகுலைந்தெழுந்து படுக்கையில் வீற்றிருந்தபடியே, அநுபவஜனிதப்ரீதியதிசயத்தா லடங்காத வார்த்திகொண்டு, எம்பெருமானுடையசுலபத்வத்தையுஞ், சேதனனவனையடையப்பெறாத ஹ்ருதயகடினத்வத்தையுந், தமக்குத் தற்காலம் லபித்த வவனுடைய சேவையிலுண்டான வானந்தத்தையும், † தத்பூர்வம் இராஜ்யாதிபாரத்தாலடைய நேரிட்டிருந்த துக்கத்தையும், ஒன்றாக்கொண்டொப்பிட்டுப்பார்த்துத், தம்மா லெம்பெருமானுக்குச் செய்யப்பட்டதொன்று மில்லையாகவிருந்தும் அவனே யிப்படி நிர்ஹேதுகமாக வருள்செய்திருப்பதற்குக் கைம்மா றென்செய்யக்கடவோமென்றெண்ணித்தளர்ந்து, எழுந் துலவும்பொழுது ஒன்றுமே தோன்றாமல், அர்ச்சையைப்போல்சையாதிருந்துவிட்டார். இப்படியிருக்கையில், அருணோதயமாகவே இவரைத் திருப்பள்ளியுணர்த்துகிறவர்கள் வழக்கப்படி இனியவிசைகளையுடைய வீணைமுதலிய கருவிகளைநெடுநேரமிழற்றியும் இவர்திருக்காப்பை நீக்க வாக்ஞாபிக்காதிருக்கக்கண்டு அச்சமுற்று அமைச்சர்களிடமோடியறிவிக்க, அவர்களு மப்பொழுதேவந்து சில சைகைகள் செய்துபார்த்து விடைபெறாமல் அந்தரங்கத்தொண்டர்களை மெதுவாக வுள்ளேயனுப்பிப் பார்க்கச்சொல்ல, அவர்கள்போ யிவரிருந்த

† தத்பூர்வம்-அதற்குமுன்.



திருக்கோலத்தைச் சேவித்துத் திடுக்கிட்டு வெளியில்வந்து வாய்திறந்துசொல்ல வகையற்றுவிழிக்க, அமைச்சர்கள் கலங்கி இனி ‡ யாக்ஞைக் கெதிர்பார்ப்பதிற் கார்யகரமாவதில்லை, உள்ளேபுகுவது தான் றருமமென் றொருவரோடொருவர் கலந்துபேசி அறைக்குட்சென்று ஆனந்த பாஷ்பத்தினா லலம்பப்பட்டிருக்கிற திருமேனியையும் அஞ்சலி ஹஸ்தத்தையு முடையராய்ச் சேவைசாதித்துக்கொண்டிருக்கிற விவரைப்பார்த்து அற்புதமடைந்து இப்படியாவதற்குக் காரணமென்னவாமென் றொருவரையொருவர்வினவியுந் தங்கள்தங்களபிப்ராயத்தை வெளியிட்டுக்கொண்டும் பெருஞ்சப்தமுண்டாக்க, அதனாலிவர்தெளிந்தெழுந்து வெளியில்வந்து தன்னைச்சூழ்ந்திருக்கிற வமைச்சர்களை நோக்காமல், () பகவத்பக்திரூபாபன்ன க்ஞானத்தையுடைய முதன்மந்திரியைமாத்ரம்பார்த்து, அவரை யொருபுறமா யழைத்துக் கொண்டுபோய்த்தோழனே! வாழ்நாள்களை யெல்லாம்வீணாள்களாகக்கழித்துழன்ற வென்னையும் ஸ்ரீயःபதி யொருபதார்த்தமாக மதித்துத் தன்னுடைய சேவையைத் தந்தருளப்பெற்றேன். இவ்வாறு பெற்ற வெனக்கு இனிமேலும் "அக்ருத்ய கரணாதாவப்யத்யந்தோத்படவ்ருத்திகः, அர்த்தகாமாபி பூதோயமுன்மத்த இவ வர்த்ததே" என்கிறபடி தேஹவசியராய்த்தேஹபோகத்தை யநுபவித்துத் தேஹாபிமானிகளாய்ப்பகவத்விமுகராய்ச்சப்தாதிவிஷயப்ரவணராயிருக்கு மித்தேசத்தாரான ஸம்ஸாரிகள் நடுவிலிருக்குமிருப்பும் "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பு" என்கிறபடியேயானைக்கழுத்தகத்தின்மேலிருந்து அரசுசெலுத்தி யதனாற் பெறுங்கீர்த்தியும் உயிர்க் () கழுவேபோலும் அக்நியேபோலும் அல்லலுக்கிடமாமென்றுதோன்றாதிருக்குமோவென்றுரைத்து, அன்றுதொடங்கி எம்பெருமானுடைய நித்யமங்களகுணங்களை யநுபவம் பண்ணிக்கொண்டிருக்கும் பரமஸாத்விகரான ஸ்ரீவைஷ்ணவர்களைத் தேடித்தார்த்துத் தண்டன்சமர்ப்பித்து, அவர்களை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து சத்காலக்ஷேபஞ்செய்து கொண்டுந், திருமழிசைப்பிரானுந் திருக்குருகைப்பிரானுமருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களைச்சேவித்துக்கொண்டுஞ் சிங்காசனத்தில்வீற்றிருந்து (ஓட்டிலொட்டாத † நிர்க்குணபலந்

‡ ஆக்ஞை - கட்டளை. () பகவத்பக்திரூபாபன்னக்ஞானம் - [illegible] பக்தி ரூபமாய்ப்பரிணமித்த ஞானம். () கழு - [illegible] † [illegible]
[illegible]

ளைதப்போலுஞ், சேற்றிலொட்டாதபிள்ளைப் பூச்சியைப்போலுந், தாமரையிலையிலொட்டாத நீர்த்திவலையைப்போலும்) இராஜகார்யங்களிற்பற்றியும் பற்றுதவராயிருந்து "த்ரைலோக்ய விபூரிதா புண்யாஸ்வாமி புஷ்கரிணீதிவை, கங்காத்யைஸ்ஸகலை ஸ்தீர்த்தைஸ் ஸாஸமாவிமலோதகா, நந்ரதேவார்ஷிகந் தர்வாஸ்ஸித்தாப்ஸ பரமஸ்ஷயஃ, வஸந்தி னியதாஹாராவேங்கடாஹ்வய பூதரே" என்கிறபடி கங்காதி சகலதீர்த்தாதிகமான சுவாமி புஷ்கரிணியையுடையதாய்ப் பரமருஷிகள்தொடக்கமானமஹாத்மாக்களாலும் சித்தகந்தர்வர்களாலும் வாசம்பண்ணப்படாநின்ற திருமலையைச் சேவிக்கக்காதலித்தெழுந்தருளித் திருவேங்கடத் தெந்தையைக் கண்டு களித்தடிபணிந்தானந்தக் கூத்தாடி "ஊனேறுசெல்வத் துடற்பிறவியான்வேண்டேன்" "திருவேங்கடச்சுனையில் மீனாய்ப் பிறக்கும்விதியுடையேனாவேனே" என்றும் "வானாளுஞ்செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்", "கோனேரிவாழுங் குருகாய்ப் பிறப்பே" னென்றும், கொடியாடுமணிமாடக்கோனுகிவீற்றிருந்து கொண்டாடுஞ் செல்வறியேன் நின்கோயில்வாசல் "படியாய்க் கிடந்துன் பவளவாய்க்காண்பே" னென்றுங், "கம்பமதயானைக் கழுத்தகத்தின் மீதிருந்து இன்பமருஞ்செல்வமு மிவ்வரசும் யான் வேண்டேன்", எம்பெருமான் பொன்மலைமே லே தே னு மா வேனே" என்றும் பலமுறைபாடிப் ப ர வ ச ரா கி யனந்தரந் தெவிந்து அப்பனுடைய ஸ்ரீபாததீர்த்த ப்ரசாதங்களை லபித்துக் கொண்டு, மீண்டும் வடநாட்டுத்திவ்ய தேசங்களேற வெழுந்தருளி அ ங் க ங் கு மு ள் ள வெம்பெருமான்களையுஞ் சேவித்து த்ருப்தராய்த் திரும்பி ராஜஸ்தானத்தைச்சேர்ந்து, இராஜகார்யங்க ளனைத்தும் ப க வ த் குணநுபவத்துக்கு ப்ரதிகூலமானவைகளென்றுநினைத்து அவற்றில் ‡ நசையற்றுக் காலக்ஷேபத்தி லீடுபட்டு ஸ்ரீரங்கமஹாத்மியத்தைக் கேட்டருளித் திருவரங்கப் பெருநகருள் அரவணைமேற் கண்வளருங் "கடல் விளங்குகரு மேனியம்மான்றன்னைக் கண்ணாரக் கண்டுகக்குங்காதலுடையவராய் "அற்றபத்தர்" என்கிறபடியே பகவத்பாகவத வைபவ குணாநுபவமொழிய, அன்யதா லட்சணங்களற்ற "அணியரங் கன்திருமுற்றத் தடியார்" களான ஸ்ரீவைஷ்ணவ சாதுகோஷ்டியின்" "இன்பமிகு பெருங்குழுவு கண்டியானு மிசைந்துடனே

‡ நசை=ஆசை.



யென்றுகொலோ விருக்குநாளே" என்று பாசுரமிட்டுக் கொண்டிருக்கையில், பெரியபெருமா ளிவர்திருவுள்ளக்கருத்தைத் தலைக்கட்டிவைப்பதாய் அனந்த கருட விஷ்வக்சேனாதி நித்யசூரிகளைக் கடாக்ஷித்து "நீவிர் சிறுமாமனிசராகி ஆழ்வாருக்குச் சேவை கொடுத்துவாருங்களென்ன; அவர்களு மப்படியே † நிலத்தேவர்களாய் ஸ்ரீவைஷ்ணவ ரூபங்கொண்டு இவரிருக்கு மிடத்தேறவந்து சேவைசாதித்தருளினர். இவர் அற்புத வாரிதி லழுந்தி ஆராத காதலா லெழுந்த அனலைத்தணித்துச் சோராதபக்தியாற் றுணைக் கண்ணீர்சோர வெதிர்கொண்டு சென்று "என்னை யாண்டிடுந் தன்மையர்", "என்னை விற்கவும்பெறுவீர்கள்" எம்பிரான்களே யென்றனுசந்தித் தடிகளில்முடிசேரவீழ்ந்துத் தண்டன்சமர்ப்பித் தவர்களது மங்களாசாசனத்துக் காளாகி யெழுந்து அவர்களைக் கூடத்திற்கெழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய் ஆசனத்தின்மீ திருக்கச்செய்து ஸ்வரூபா நுரூபமாகவாராதித்துச்சத்காலக்ஷேபங் களைக்கேட்டு ஹ்ருதயம் பூரித்து "இனிநான் போகவொட்டேன்" என்றுபரமபக்தியிலிழிந்துவிட; அவர்களுஞ் சிலநாள்வரையி லிவ் ரைவிட்டகலாமற் சேவை சாதித்துக்கொண் டெழுந்தருளினர். ஒருநாள்ஸ்ரீரங்கமஹாத்மியத்தைப்பௌராணிகர்சொல்லிக்கொண் டிருக்கையில், "ஸ்ரீரங்கயாத்ராஸ்ரீரங்கயியாஸாசைவநாரத, உத்தாரயதி ஸம்ஸாரம் நித்யவாஸஸ்துகிம்புநஃ" என்கிறபடியே ஸ்ரீரங்க யாத்ரை செய்வதும், அதிலிச்சை வைப்பதுமே விடியா வெந்நரகத்தைப்போக்கி வைகுந்தமாநகரைத்தருமெனில், அந்த ஸ்தலத்தில் வாசஞ்செய்யு மவர்களுடைய ப்ராப்தியை யென்னென்று விவரிக்கலாகும் என்றிருக்கிற விதைக் கேட்டு, உடனே ஸ்ரீரங்க யாத்ரையில் மனதைத் திருப்பிக் கோஷ்டிக்குத் தண்டன்சமர்ப்பித்து விடைதர வேண்டுமென்று ப்ரார்த்திக்தார். அவர்கள் "ஷஷ்டிர்வர்ஷ ஸஹஸ்ராணி விஷ்ணோரா ராதநம்பலம், ஸக்ருத்வைஷ்ணவ பூஜாயா கலாநார்ஹத்து ஷோடஸீம்" என்கிறபடி அறுபதினாயிர வருஷம் பெ ரு மா ளை யாராதித்துவந்தவொருவ னடைகிற பலனைப்பார்க்கினும் அவனடியார்களிலொருவரை யொருவேளையி லாராதித்தவ னடைகிறபலன் மிஞ்சிக் கிடக்குமென்பதையறிந்திருந்தும் பாகவதாராதனையைக்கைவிடப் போமோ? என்ன; இவரிந்தகோஷ்டியோடு மறுநாளெழுந்தரு

† நிலத்தேவர்-பிராமணர்.

ளலாமென்று திடப்படுத்திவைத்து அன்றைய்தினம் வழங்கப்
படித் ததீயாராதன கைங்கர்யத்தி லீடுபட்டிருந்துத் தீர்த்தமாடி
யநுஷ்டானத்தைத்தீர்த்துக்கொண்டு ப்ரயாணமாக, அச்சமயத்தி
லிவரென்றும் பாராததொரு ஸ்ரீவைஷ்ணவப்பெருந்திரளை எம்
பெருமான் கொண்டுவந்து விட்டார். இவ ரவர்களை யாராதித்த
வனந்தரம்போகவேண்டிய கடமையாகையாலே கைங்கர்யத்திலீடு
பட்டிருந்து அடுத்தநாள் போகலாமென்றிருக்க, ப்ரதி தினமு
மிப்படிப்புறப்படுஞ்சமயம,மிங்ஙே எம்பெருமானுடைய நியமனத்
தால் நித்தியசூரிகள் ஸ்ரீவைஷ்ணவர்களைப்போ லுருவங்கொண்டு
கூட்டங்கூட்டமாக வந்து சேவை சாதித்துக்கொண் டிருந்தமை
யால், யாத்ரையில்வைத்திருந்த விவரிஷ்டம் அந்த சமயத்தில்
நிறைவேறுதிருந்தது; ஆயினும் அரசன் ஸ்ரீரங்க யாத்ரைசெய்
யப் போகிறுரென்கிற கோஷமாத்திரம் நகரிக்குளெங்கும் நித்ய
மும் பரவியிருக்கும்.

இப்படி யிவர் ததீயாராதனையி லீடுபட்டுக்கொண்டு ஸ்ரீரங்க
யாத்திரையி லிச்சை வைத்திருக்கையிலும் "வேதவேத்யே பரே
பும்ஸிஜாதே தசரதாத்மஜே, வேதঃப்ராசே தஸாதாஸீத்
ஸாக்ஷாத் ராமாயணாத்மநா" என்கிறபடி யாதொரு வேதவேத்ய
ஞன் பரமபுருஷன் தசரதனுக்குத் திருக்குமாரனாகவந் தவதரித்
தருளினாற்போல அந்த வேதங்கள்தாமும் ஸ்ரீவால்மீகிபகவான்
திருவாயினிடமாக இதிஹாச சிரேஷ்டமான ஸ்ரீமத்ராமாயணரூப
மாய்ச்"செவிக்கினியசொற்"களையுடையதாய் வந்தவதரித்ததென்
கிறபடியே"இன்னமுத"த்தையு மதிக்கவொட்டாத வவ்விதிஹாச
காலக்ஷேபங் கேட்டருளி, அவ் வம்ருதத்தைச் செவியென்னும்
வாயாற்பருகிக் களித்து ப்ரேம பரவசராயிருந்துகொண்டு "சதுர்
தசஸஹஸ்ராணி ரக்ஷஸாం பீமகர்மணாம், ஏகஸ்சராகோ தர்
மாத்மாகதம் யுத்தம்பவிஷ்யதி" என்கிற சுலோகத்தால் இளைய
பெருமாளைப் பிராட்டிக்குத் திருமேனிகாவலாக வைத்துவிட்டுத்
தர்மாத்மாவானபெருமாள்தாமொருவரே கரதூஷணத்ரிசிராதி
பதினாலாயிரந் துஷ்ட ராக்ஷசர்களெதிரில் யுத்தோன்முகரா
னாரே! இனித்தா லென்செய்வதென்று ஸ்ரீவால்மீகிபகவான் கலங்
கினதைக்கேட்குந்தறுவாயில்,ப்ரீதியினாற்கியானந்தடுமாறிப்பெரு
மாளுக் கவர்களா † லவத்தங்கள் விளைந்துவிடி லென்செய்வதென்

† அவத்தம்-ஆபத்து.



றுருகி "வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வார் மற்றில்லை" யே
யென்று தளர்ந்து "உருவார் சக்கரஞ் சங்கு சுமந் திங்கும்மோ,
டொருபாடுழல்வா னோரடியானுமுளன்" என் ‡ றவசரித்துச் சது
ரங்க பத சேனைகளையுங் கூட்டிக்கொண்டு பெருமாளுக்குப்படைத்
துணையாக வெழுந்தருளாநிற்க, மந்த்ரிக ளிவருடைய அதித்வரித
மான யாத்திரையைப்பார்த்து ஆச்சர்யமடைந்து இதையெவ்
விதத்திற் றவிர்ப்பிக்கலாமென் றாகித்து உபாயத்தாற் சிலரை
யேவி யெதிரில்வரவிட்டுப்பெருமாள்தாமொருவராய்நின்றே யந்த
ராக்ஷசர்களை நிரசித்துமீண்டு பிராட்டியி னாலிங்கனத்தினாற் திரு
மேனியிலிருந்த இரணங்களெல்லாமாறிக் குளிர்ந்து சேவைசாதிக்
கிறுரென்று சொல்விக்க, அதைக்கேட்டுச் சோகந்தீர்ந்து "தந்
திருஷ்ட்வாசத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம்,ஸுகாவஹம், பூவஹ
ருஷ்டா வைதேஹிப்ரர்தாரம் பரிஷஸ்வஜே" என்று அவ்வர்த்
தத்தைக் கொண்டிருக்கிற சுலோகத்துக்குஞ் செவிசாய்த்தருளி
த்ருப்தராய்மீண்டு ராஜஸ்தானத்துக் கெழுந்தருளினார்.

பின்னுமொருநாள் இவர்க்குக்காலக்ஷேபஞ்சாதித்துக்கொண்
டிருந்த பௌராணிக ரேதோ வசந்தர்ப்பத்தினால் தம்முடைய
திருக்குமாரரை யிவரிட மனுப்பிவைக்க, அவர் காலக்ஷேபஞ்
சொல்லுகையில் இவருடைய திருவுள்ளநெகிழ்ச்சி யிருக்கும்
படியையறியாதவராகையாலே,கிஞ்சிற்றுப்படபட்ப்பாய் "ஜஹார
ராவணஸ்ஸீதாம்புதঃகே ரோஹிணீமிவா" என்கிறபடி புதனென்
னுங் க்ரஹம்ரோஹிணிநக்ஷத்திரத்தின் சமீபத்திற்சேருமோருற்
பாதம்போல, மஹாகண்டகனான விராவணன் பெருமாள் பிரிந்
திருக்குஞ் சமயம்பார்த்துத் திடீக்கெனவந்துச் சீதாபிராட்டியை
யெடுத்துக்கொண்டுபோயினனே!யென்றுருவிவயிறுபிடிக்கிறதை
வற்புறுத்திச்சொல்ல, இவர்முன்போலவே, வ்யாகுலாந்தঃகரண
ராய்வீற்றிருந்த ஸ்தானத்தைவிட்டுச் சடுதியிலெழுந்து முகம்
வியர்க்க முன்கோபமுண்டாய் அகம்பதைத்து, அங்கந்துடித்து,
நானிந்தக்ஷணமே போய் அவன் றலைகளைத்துணித்துப் பிராட்டி
யைக் கொண்டுவந்து, அந்தஸ்தானத்துக்குப் பெருமாள் திரும்பி
வருவதற் குள்ளாக வெழுந்தருளப் பண்ணக்கடவேனென் றவ
சரித்து வாளையுருவிக்கொண்டு புரவியின்மேலேறிச் சேனைகளை
யோடோடியுந்தன்னைப் பின்றொடரச்செய்துகொண்டு, இலங்கை

† அவசரித்து-விரைந்து.

யைநோக்கி யதிகவேகமாய்ச்சென்று சமுத்திரத்திலுமிறங்கிவிட, எம்பெருமானிவருடைய அத்யவசாயத்தைக் கண்டதிசயித்துச், சமுத்திரஜலத்தை இவர்க்கு மிவர்சேனைக்கும் முழந்தாளளவு படுத்தித் தான் சீதாலக்ஷ்மண சமேதராய் ஸ்ரீவிபீஷணாழ்வான் மஹாராஜர் தொடக்கமான சைனியங்களுடன் புஷ்பகவிமானத்திலேறியருளியெதிரேவந்து சேவைசாதித்து ஆழ்வீர்! நாமந்தவிராவணனைப்பின்றொடர்ந்து அவனையு மவனூரையுமழித்து வெற்றிகொண்டு வந்திருக்கிறோம் நீரினி பயந்தீர்ந் திருமென்று திருவாய்மலர்ந்தருள, இவர் திருவுள்ளங்குளிர்ந்துபிராட்டி திருவடிகளிலும் பெருமாள் திருவடிகளிலுந் தன்திருமுடியை யொருமுஹூர்த்தகாலந்தாழ்த்தியிருந்துக் கவலைதீர்ந்தெழுந்து அஞ்சலி ஹஸ்தராய் நின்று, பெருமானை அந்த திருவோலக்கத்தோடு நம்முடையதிருமாளிகைக் கெழுந்தருளி யமுது செய்து விட்டுத் திருவயோத்திக்குப்போகவேண்டுமென்று ப்ரார்த்தித்து, எழுந்தருள்வித்து மூன்றுநாள்வரையி லாராதித்துக்கொண்டிருந்தார். அனந்தரம் பெருமாளிவரைப்பார்த்துக், குலசேகரப்பெருமாளே! இனிநான் அயோத்திக்கு த்வரிதமாய்ப்போகாவிடில் பரதாழ்வான்கதி யெப்படியாமோவென்று சங்கிக்கிறோம் ஆதலால் விடைதர வேண்டுமென்று கேட்டருளி, இவரால் கொஞ்சதூரம்வரையில் வழித்துணைபெற்று நகரைக்கடந்துநாட்டார்கண்படாதவிடத்திற்போய் நீர் நம்முடைய திருவரங்கப்பெரு நகருக்குவாருமென்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். அப்போதிவர் பகவத்விஸ்லேஷத்தைச் சகியாதவராய் மெய்சோர்ந்து தன்னுடைய பொன்னொத்த திருமேனியைப் புழுதியிற்கிடத்தி மூர்க்கினிலாவி சோதிக்கும்படியாய்விட, அருகிலிருந்த ஞானசீலரான முதன்மந்த்ரி வியப்படைந்து இவரடியிற் பலமுறைபணிந்து, உமக்கிதுவரையிற்பணிசெய்து க்ருதார்த்தனாயினேன் என்னப்பனேயென்று அநித்து, உடனே படைவீட்டிலிருந்து பாங்கானதொரு தண்டிகையைக் கொண்டுவரச்செய்து இவரையதிற்பக்குவமாகக் கிடத்தித், திருமேனிக்குத் தான் காவலாகவிருந்துகொண்டுவந்து திருப்படை வீட்டில் பஞ்சணைமேற் படுக்கவைத்து, அபரிமிதமான சைத்ய வுபசாரங்களினால் தெளிவடையச்செய்ய, இவர் தெளிந்தெழுந்து அனுபவஜனித ப்ரீதியதிசயத்தினால் வேதோபப்ராம்ஹண சார பூதமாய் மணிமந்த்ர ஔஷதங்களை விவரிக்கும்



ஸ்ரீமுகுந்த மாலையென்கிற ஸ்ரீஸூக்தியைப் பாடியருளி, அன்று தொடங்கி ப்ரபஞ்சவாழ்வைத் தினையளவேனும் நினைவிற்கொள்ளாமல் பகவத்விஷயத்தி † லாழங்காற்பட்டுச் சக்ரவர்த்தித்திருமகனையே திருவாராதனமாக வெழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஸ்ரீமத்ராமாயணக் காலக்ஷேபத்தைப் பூர்த்திசெய்துப், பெருமாளுடைய திருவவதார நவமி நெருங்கினவளவிலே பெருமானையுத்சவங் கண்டருளப்பண்ணுகையில் மந்திரிகள்பார்த்து சகியாமல், நம்முடைய ராஜனுக்கு இந்த ஸ்ரீவைஷ்ணவர்களுடைய சகவாசத்தாலன்றோ இத்தனை கலக்கங்களுந் தேற்றங்களும் வந்தன; ஆகையா லரசனுக்கிவர்கள் விஷயத்தில் வெறுப்புண்டாகச் செய்யவேண்டுமென் றாலோசித்துப் பெருமாளுடையதிருவாபரணப்பெட்டியி லிருந்ததொரு நவரத்னசோபிதமான ஹாரத்தை யெடுத்து மறைத்துவைத்துவிட்டு இவருக்கந்தரங்க வுத்தேசியரான ஸ்ரீவைஷ்ணவர்க ளெடுத்துக்கொண்டார்களென்று காவற்காரர்களை யேவிப் பழிதூற்றி விட்டார்கள். இவரதைக் கேட்டு மிகவுஞ் ‡ சந்தாபங்கொண்டுக், கனவிலுஞ்சொல்லப்படாத விப்பழியை விளைத்தவர்கள் தூர்க்கதிக்காளாவதொரு பட்சமாயினும், இவ்வசையைக் கேட்பவர்களுஞ் சந்தேகித்து நகைத்துப்போக நேரிடுகிறபடியால் இதனை நாமே நிவர்த்திசெய்ய வேண்டுமென்றெண்ணி, உழையர்களை யேவிக்கொடியவிஷமுடைய சில சர்ப்பங்களைப்பிடித் தோர்பெருங்குடத்தி லடைத்துக்கொண்டு வரும்படியாக்ஞாபிக்க, அவர்களுமப்படியே கொண்டுவந்து சபைநடுவில் வைக்க, இவர் அமைச்சர்களைநோக்கி, அந்த திருவாபரணத்தை ஸ்ரீவைஷ்ணவர்களே யெடுத்தார்களென்று சொல்லுமவர்களாரேயாயினும் இந்த குடத்திற்கையையிட்டு ப்ரமாணபூர்வமாகச்சொல்லித் தேறுவார்களாகில் உண்மையெனக் கொள்வேனென்ன, அவர்களிலொருவரும் வாய்திறந்துவிடைசெய்ய வகைகாணாமல் இதேது புலியைக்கிளப்பக்காடுகலைக்கப் போய்ச்சிம்ஹத்தினிரைக்கிலக்கானாற்போலாயிற் றென்றெண்ணி அசந்துநின்றார்கள். அப்போது இவர் தாமேசபைநடுவிலெழுந்துநின்று "பரனன்பர்கொள்ளார்" என்கிறபடியே சத்யகாம சத்யசங்கற்பனை சுவாமிக் கன்பராயிருப்பவர்க ளெடுத்திரார்களென்று பூமியையும் ஆகாயத்தை

† ஆழங்காற்பட்டு - முழுதும் ஈடுபட்டு (அழுந்தி).
‡ சந்தாபம் - வருத்தம்.

யுந் திசைகளையும் பார்த்துக் கையையுயரவெடுத்துச் சொல்லிக் குடத்திலுள்ள கையைவிட்டு அந்தவுள் ளடங்கியிருந்த சர்ப்பங்களின் றலைகள்மீ தறைந்து சத்யஞ்செய்தார். அப்போது, அந்த சர்ப்பங்களிலொன்று, இவர் †† பாஹுவழியே யூர்ந்துத்திருத்தோளின்மே லிருந்தும் பணத்தைவிரித்துத் திருமுடிமேற்குடையாகக் கவிந்திருக்க, மற்றொன்று பழிசிளைத்தவர்களைச் சீறித்துறத்த, அவர்கள்பயந்திவர் திருவடிகளில் வீழ்ந்து உண்மையை வெளியிட்டுத் திருவாபரணத்தையுஞ் சமர்ப்பித்து க்ஷமைகேட்டுக் கொள்ள க்ஷமித்தருளி "நமோஸ்ரிஸிந்தாவிமுகதுகலம் வாஸவைபவம் வரம்ஹூதவஹஜ்வாலா பஞ்சராந்தர் விபவஸ்திதி:" என்கிறபடியே பகவத்வைபவங்களைச் சொல்லக்கேட்டுப்பொறுக்காதார் மத்தியிலிருக்கு மிருப்பைக்காட்டில் அக்னிஜ்வாலாமயமான ‡‡ பஞ்சரமொன்றி லடைபட்டு வருந்தும் ஸ்திதி உத்க்ருஷ்டமாகக் காணுமென்றும், எப்போதில் வாத்மாபகாரிகளுடைய சகவாசங்களை யொழியப் பெறுவோமென்றுஞ் சிந்தாகுலரா யிருந்து, அனந்தரமொருநாளில் எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளைச் சேவித்துக் காலாழ்ந்து, கண்சுழன்று, நெஞ்சழுந்தி யிருக்கையில் சிலபரிசாரகர்கள் மந்திரிகளாலேவப்பட்டு இவரெதிரிலோடிவந்து நின்று பெருமூச்செறிந்து, ஐயோ!!! உமது புத்ரன் குளத்தில்மூழ்கிவிட்டானே என்செய்யக்கடவோமென்று கூவ, இவரதற்குப் புத்ரன் கைவிட்டாலென்ன பெருமாள் கைவிடாதிருக்கும்படி அவன் 0பலமுந்துசீரிற்படியவேண்டுமென்றுரைத்துவிட்டுப் பகவதனுபவத்தை விடாதிருந்து, ஒரு முஹூர்த்தமான பிறகு திருக்கண்களைவிழித்தார். அப்போது புத்ரன் திருமேனி நலங்காமலே திரிலுலாவிக்கொண்டிருக்கையால் அவர்கள்சொல்லிய † அபோஹத்திற்கஞ்சியும், இனியவர்கள் மத்தியிலிருக்கில் ஆத்மாவனர்த்தப் படுமென்றெண்ணியும், "பரித்யக்தாமயாலங்காமித்ராணிச தநாநிச" என்றும் "த்யக்த்வாபுத்ராம்ஸ்ச தாராம்ஸ்ச ராகவம் ஸரணம் கத:" என்றும் ஸ்ரீவிபீஷணாழ்வான் இலங்காபுரியையும் புத்ரமித்ர களத்ர தனாதி போகங்களையும் ‡ ஸவாஸனமாகவிட்டுச்சர்வலோகசரண்யனான பெருமானையாசிரயித்தாற்போல, தத்க்ஷணமே

†† பாஹு - புஜம். ‡‡ பஞ்சரம் - கூடு. 0 பலம் - பயன். † அபோஹம் - விபரீதம். ‡ ஸவாஸனமாக - அடியோடு.



ராஜ்யத்திலும் 0 ஐஹிகாமுஷ்மிக திவ்யமாநுஷ போகங்களிலும் நசையற்று திடவ்ரதரென்கிற தமது திருக்குமாரருக்கு இராஜ்யாபிஷேகஞ்செய்து வைத்துவிட்டு, எம்பெருமான் திருவரங்கம் எங்கே? எங்கே? யென்னுஞ் சோராத காதல்கொண்டு வெளிப்பட்டுத் தமக்கந்தரங்கரான ஸ்ரீவைஷ்ணவ சகவாசத்துடனே "நல்லார்கள் வாழும் நளிரரங்க"த்தை நோக்கி எழுந்தருளி ப்ராகார மண்டப விமானாதிகளை ஸ்வரூபாநுரூபமாகச் சேவித்துச் சேனை முதலியாரையடிபணிந்து "புஜோபதாநம்ப்ரஸ்ருதான்யஹஸ்தம் நிகுஞ்சிதோத்தாநிதபாதயுக்மம், ஸுதீர்க்க முத்பாஹூமுரப்ரதேஸம்புஜம்கதல்பம் வ்ருஷம் மஹம்தம்" என்கிறபடியே வலத்திருக்கரத்தைச் சிரசின்கீழ்ப்படுத்தி, இடத்திருக்கரத்தைத் தொடையின்மேல் நீட்டிக்கொண்டு, விசாலமான வக்ஷஸ்தலத்தையுடையனாய், அரவரசப்பெருஞ்சோதியனந்தனென்னுமணைமேற் பள்ளிகொண்டருளி, பெருவிடாயடைந்தவனுக்குத்தெளிந்ததீர்த்தமும் குளிர்ந்தசோலையும் அகப்பட்டாற்போலே தன்னை அடியவர்க்ககப்படச்சேவைசாதிக்கின்றபெரியபெருமாளைமணத்தாணைபற்றிநின்றுபாதாதிகேசம்கேசாதிபாதமாகப் பலமுறைசேவித்து சகலதாபங்களையும்போக்கிக்கொண்டுத்ததீயாராதனகைங்கர்யத்திலீடுபட்டுத், திருமுற்றத்தடியார்களோடு சிலகாலம் வாசஞ்செய்துகொண்டிருக்கப், பெரியபெருமாளிவர் கைங்கர்யத்தி † லுவப்புடையவராய்நம்முடையதிருக்கண்ணபுரத்துக்குவாரீரென்ன, இவரும் அவ்வாறே திருக்கண்ணபுரத்துக் கெழுந்தருளிச்சௌரிராஜனழகிலீடுபட்டு நீங்காதசெல்வம் பெற்றிருக்கையில் அவரும் ஆழ்வீர்! நம்முடைய தில்லைத் திருச்சித்ர கூடத்திற்கு வாரீரென்ன, அவ்விடத்துக் கெழுந்தருளி ருத்ரன் பணிந்து ஆனந்தித்து நர்த்தனஞ் செய்யும்படித் தன்னுடைய நிர்வாஹத்வங் காட்சியிலே தோற்றத் திருவனந்தாழ்வான் பேரில் சாய்ந்தருளி யிருக்கிற தெய்வச்சபாநாயகனான கோவிந்தராஜனைத் திருவடிதொழுது, ததனந்தரம் ஆழ்வார் திருநகரிக்கடுத்த வீரநாராயண புரத்துக்

0 ஐஹிகாமுஷ்மிக திவ்யமாநுஷ போகம். - (ஐஹிகம்) இகலோகத்தில் (மாநுஷ) மனிதர்களாலும் (ஆமுஷ்மிகம்) பரலோகத்தில் (திவ்ய) தேவர்களாலும் (அநுபவிக்கப்படும்) போகங்கள்.

† உவப்பு - மகிழ்ச்சி.

கெழுந்தருளி மன்னனுரைச்சேவித்துத், தத் ‡ சௌந்தர்யாசக்த சித்தராய் அவ்விடத்தில்தானே பெருமாளுடைய கைங்கர்யத்தி லீடுபட்டிருந்து அறுபத்தேழாவது திருநட்சத்திரத்தில் ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீதேவிபூஷனையுத பரிஜனங்களோடு வீற்றிருந்து தனிக்கோல் செலுத்துகின்ற திருநாட்டுக் கெழுந்தருளி அடங்காப் பெருங்காதலோ டடிபணிந்து "அந்தமில் பேரின்பத்தடியரோடு" திருமாமணி மண்டபத்தி லெழுந்தருளி யிருந்தார்.

திருநக்ஷத்ரதனியன்.

"கும்பேபுநர்வ ஸௌஜதாம் கேரளே சோளபட்டனே
கௌஸ்துபாம் ஸம் தராதீபம் குலசேகரமாச்ரயே."

ஸ்ரீகுலசேகராழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

☞ ஸ்ரீகுலசேகராழ்வார் திருவவதார வருஷம்-௩கூ௫ங-க்குச் சரியான பஹுதான்ய வருஷம் மாசிமீ.

‡ சௌந்தர்யாசக்தசித்தர் - சௌந்தரியத்தில் காதலுற்ற சித்தத்தையுடையவர்.

# பெரியாழ்வார் வைபவம்.

## தனியன்கள்.

### நேரிசை வெண்பா.

மின்னார் தடமதில்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகாற்
சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோங் கீழ்மையினிச் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

"தாதாத்விக † ப்ரதிபலத் பகவத்பரத்வம் விஸ்தீர்யபாண்ட்ய நதகேந்த்ர ஜயிகஜேந கச்சந்ப்ரி யாநுபகதே கருடகநாதே ப்ரேம்ணாவிஷம்ரசயதிஸ்ம நமோஸ்து தஸ்மை; ஜ்யேஷ்டேஷ தமாஸே பவமாநதாரேஸ்ரேஷ்டோகுனே நாஜநிபட்ட நாதஃ தத்ரத்ரயீருப கருத்மதாத்மா கடாக்ஷ லக்ஷ்யம் கமலாபதேர்யஃ" என்கிறபடி இப்புவியில் பாண்டியநாட்டில் ஆனிமாசம் ஸ்வாதி நட்சத்திரத்தி லவதரித்தருளிச், சர்வேசுவரனுடைய கிருபைக்குப் பாத்ரராகிப், பரதெய்வ நிர்ணயஞ் செய்துப் பஹுஜனங்கள் சூழ்ந்துவர ஜைபப்ரதமான யானையின்மேலிருந்து பவனிவந்து அந்த சர்வேசுவரன்றானே வேதரூபியான பெரியதிருவடியின்மே லெழுந்தருளி ஸ்ரீதேவி பூஷணயுத பரிஜனங்களுடன் ஆகாசத்தி லிருந்து சேவைசாதிக்கச் சாக்ஷாத்கரித்துச் • சோராதகாதல் கொண்டு அவன் வடிவழகுக்குத் திருஷ்டிதோஷம் வாராதபடி மங்களாசாசனஞ்செய்தவரான பட்டநாதனை நமஸ்கரிக்கிறேனென்று இவ்வாழ்வாருடைய அவதார விசேஷத்தைத் திவ்யசூரிசரிதையிற் சொல்லிற்றிறே.

இவருடைய வைபவமெங்ஙனே யென்னில் "வேதவாய்த் தொழிலார்கள் வாழ்வில்லிபுத்தூர்" என்கிறபடியே வையத்தேவர்களான ப்ராம்ஹணோத்தமர்கள் வாழாநின்ற "தன்விபுரி" என்கிற ஸ்ரீவில்லிபுத்தூரிலே, போதாயன ஸூத்ரம் எஜுச் சாகையை

† 'ப்ரதிபயா பகவத் பரத்வம்' என்றும் பாடம்.

யுடைய குடியில்வேதாந்த பாரங்கதரான முகுந்தபட்டரென்னுமொரு முன்குடுமிச் சோழியப்ராம்ஹண சிரேஷ்டர் பத்நீசஹிதராய் வடபெருங் கோயிலுடையானை முப்போதுந் தப்பாதடிப் பணிந்துத் திருமுற்றத்தடியார்க் காட்பட்டுக் கைங்கர்யத்தி லூற்றமுடையவராகியிருக்கிறகாலத்தில், பெருமாளுவந்து தன்னுடைய நித்யவிபூதியிலிருக்கிற பெரியதிருவடியைநோக்கி, நீர் நம்முடைய லீலாவிபூதியின்கண் வடபெருங்கோயிலை யாசிரயித்துக் கொண்டிருக்கிற முகுந்தபட்டருடைய பத்நியாகிய பத்மவல்லியம்மையார்கர்ப்பத்திலவதரித்துப்பொலிந்து அஜ்ஞானமென்னுங் கொடியசர்ப்பத்தாற் கடியுண்டு விஷமேறிமடிய மயங்குகிறமாந்தர்களைத் தெளிவுபெறச்செய்து வரக்கடவீரென்று நியமித்தருள, அவரிவ்வாழ்வாராகத் "தத்வாப்தாபகமேகலௌயுகபரேஸம்வஸ்தரேக்ரோதநே சண்டாம் ஸௌமிதுனங்கதேஹ்நி நவமேபக்ஷே வள்ர்க்ஷேபிச ஸ்வாத்யாம் பாஸ்கர வாஸரேஸம்பதிதாவேகாதஸீ நாமநி ஶ்ரீமாநாவிரபூதநிர்ந்ய மஹிமாஶ்ரீ விஷ்ணுசித்தோநக:" என்கிறபடியே கலியப்தம் நாற்பத்தேழாவதாண்டில் நிகழ்ந்த குரோதனவருஷம் ஆனிமாசம் சுக்லபக்ஷம் ஏகாதசி ஞாயிற்றுக்கிழமை சுவாதி நக்ஷத்ரங்கூடிய சுபதினத்திலவதரித்தருளி, எண்ணரும்புகழுக்கிடமான விஷ்ணுசித்தரென்கிற திருநாமத்தைப் பெற்று வடபெருங்கோயி லுடையானுடைய நிர்ஹேதுகஜாயமான கடாட்சத்தினால் மயர்வற மதிநல மருளப்பெற்று "ப்ரக்லாதோ ஜந்மவைஷ்ணவ:" என்கிறபடி ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைப் போலே ஜந்மவைஷ்ணவராய் "ஆத்மதாஸ்யம் ஹரேஸ்வாம்யம்" என்கிறபடி வேதமுதல்வனுக்கே இவ்வுயிரடிமை யென்னுஞ் சொல்லிளக்கும் ஸ்வரூபாநுரூபமான க்ஞானமும் க்ஞாநாநுரூபமான வ்ருத்தியுமுடையவராய் "நாகிஞ்சித்குர்வதஸ் ஸேஷத்வம்" என்கிறபடி தாம்பகவத் விஷயத்தில் கிஞ்சித்கரித்தே ஸ்வரூபத்தை நிறம்பெறச் செய்துகொள்ள வேண்டுமென்று பார்த்து, அதைச் செய்யுமிடத்துத் "தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே" என்கிறபடியே அவனுகந்த வடிமையில் தாமீடுபடுவதுதான், கர்த்தவ்யமென்றநுசந்தித்து, அதையறிகைக்கு அவனுடைய அவதாரங்களை யாராயப்புகுந்தார்.

எங்ஙனென்னில் மண்ணின் பாரத்தை நீக்குவதற்காகவும் தர்மஸ்தாபனை செய்துவைப்பதற்காகவும் "ஏஷநாராயண ஶ்ரீ



மான் க்ஷீரார்ணவ நிகேதந: நாகபர்யங்க முத்ஸ்ருஜ்யஹ்யாகதோ மதுராம்புரீம்" என்கிறபடி திருப்பாற்கடலில் வடதளத்தின் மேல் சேஷசாயியாயிருக்கும் யாவனொரு நாராயணனே வடமதுரையிற் கண்ணனாகவந் தவதரித்தருளின னென்றும் "புண்யாத்வாரவதீயத்ர தத்ராஸ்தே மதுஸூதந: ஸாக்ஷாத்தேவ: புராணோஸௌ ஸஹிதர்மஸ்ஸநாதந:" என்கிறபடி அநாதியாயும் சநாதன தர்மாத்மாவாயு மிருக்கின்ற அந்த மதுசூதனனுடைய அவதார விசேஷத்தால் திருவாய்ப்பாடியுந் திருத்வாரகையும் பரிசுத்தமாவதற்கு ஹேது கண்டனனென்றும், அவன் † சாது பரித்ராணாதித்ரயத்துக்காகத் "திருவின் வடிவொக்குந் தேவகி" பெறப்பிறந்து, "மைத்தடங்கண்ணியசோதை" வளர்க்கச், "செய்த்தலைநீலச் சிறுபிள்ளையாய்" வளர்ந்தருளி "சூட்டுநன்மாலைக ளேனவேந்தி விண்ணோர்களன்னீ, ராட்டியந் தூபந்தரா நிற்கவே யங்கோர் மாயையினால், வீட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப்போந்தவன்" என்கிறபடியே பரமபதத்தில் நித்யமுக்தாககள் [illegible]ர்கள் தூபந்தராநிற்குஞ் சமயத்தில்மாயமாய்மறைந்து [illegible]நத்தைச்செய்து அந்த புகைக்கொழுந் தடங்குவதற்கு[illegible] ாகவே லீலாவிபூதியைச் சிருஷ்டித்துப் போயினனென்பது போலவே, வ்யூகத்திலும் இந்திராதிதேவர்கள் அவனுடைய திருமேனி யழகுக்கேற்ற கோலமாமலர் மாலைகளைக் கையிலேந்தி நின்றுகொண்டு நாற்றிசை தீர்த்தங்களையும் நறுமணச்சாந்துகளையுங்கொணர்ந்து திருமஞ்சனங் கண்டருளப்பண்ணித், தூபந்தராநிற்க, அந்தப் புகைச்சாயலில் தானேமறைந்து வடமதுரையிலுதித்துத் திருவாய்ப்பாடியைச்சேர்ந்து ஆனையுண்ணப்போந்தவனாகையாலே, அந்த வாசனையைப்பின்னாட்டிக் "கம்ஸகார்ய வதஸ்தஸ்ய ஸூ தாமஸதனம் ப்ரதிஸ்வயமேவாரபிதம்மாலா மக்ராஹீஸ்தாக்ரஜஸ்தத:" என்கிறபடி கம்ஸகார்யமாக வெழுந்தருளினபோது அந்த கம்ஸனுக்குப் பணிசெய்துபோந்த ஸ்ரீமாலாகாரருடைய திருமாளிகைக்குள் புகுந்து பூமாலையிரந்து "ப்ராஸாத பரமௌ நாதௌ மமகேஹமுபாகதௌ தன்யோஹம், அர்ச்சயிஷ்யாமீத்யாஹ மால்யோபஜீவந:" என்கிறபடி அவர் [illegible] என்றார்களே! இப்படி வலியப்புகுந்து இருவராய் வந்தென

† சாது பரித்ராணாதித்ரயம் – சாதுக்களை ரக்ஷித்தல், துஷ்டர்களைச் சிக்ஷித்தல், பூபாரந்தீர்த்தல்.

முன்னேநின்று என்னை யாட்கொள்ளவு மிசைந்துத் தன்யனுகச் செய்த கிருபைக்குக் கைம்மாறெது காண்பேனென்று துதித்துக் கம்ஸனுக்கினாக் காற்கடைகொண்டு கட்டிவைத்திருந்த புஷ்ப மாலையை யெடுத்துச்சூட்டச் சூடிக்கொண்டு மகிழ்ந் திருந்தானென்று சொல்லப்பட் டிருக்கிறதை யறிந்து இவ்விஷயத்துக்குப் பூவிடுகையே யுகப்பென்றுதேறினர்.

உடனே தம்முடைய பிதுரார்ஜிதங்களை யெல்லாங்கொண்டு ஒரு நீர்ப்பாங்கான நிலத்துக்கிட்டு வேலிவளைத்து, அதனிடையில் திவ்யமான திருக்குளங்களெடுப்பித்து "நாட்கமழ் பூம்பொழில்" என்கிறபடியே பரிமள ப்ரசுரமான பூந்துளவம், செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், மல்லிகை, முல்லை, மாதவி முதலிய நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, கோட்டுப் பூக்கள் மலிந்து பொலியும்படியாகத் திருநந்தனவனம் திருத்தி நாடோறும், ப்ரதம காலையிலெழுந்து தீர்த்தமாடி ஸ்வரூபானுகுணமான வநுஷ்டானங்களை முடித்துக்கொண்டுத், தம்முது நாசியில் வாசனையேறுதபடித் திருப்பரிவட்டத்தாற் கட்டிக்[illegible] வண்டுகள் மொய்த்து எச்சிற் படுத்தா முன்னமே திருவு[illegible] தப்டிப் பக்குவமாகக் கொய்துத் திருப்பூக் கூடையிற் சேர்த்துக் கொண்டு வந்து பிணையல், கண்ணி, கோவைமுதலிய பலவித மாலைகளாகக் கட்டிக்கொண்டு போய் வடபெருங்கோயிலுடையானுக்குச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்.

அப்போது, நாட்டை யாண்டுக்கொண்டிருந்த மஹா தார் மீகனுன ஸ்ரீவல்லபதேவ பாண்டியனென்னு மரசன் கூடலென்கிற மதுரையில் ஒருநாளிரவில் நகரசோதனர்த்தமாக வேஷ மாறித் திரியுமளவில், அங்கொரு திண்ணைமேல் ஒரு ப்ராம் ஹணர் நித்ரைசெய்துக் கொண்டிருக்கக்கண்டு, அவரையெழுப்பி நீரார்! இவ்வளவுபோதி லிங்குத் தனித்துக் கிடக்கைக்கு ஹேது வென்னென்று கேட்க, அவரும் நானொரு ப்ராம்ஹணன் கங்கா ஸ்நானம்பண்ணித் திரும்பிச் சேதுதர்சனர்த்தமாக விவ்வழியே வந்து இராப்பொழுதாகவே இங்கு தங்கினே னென்ன; நீர்: சாஸ்த்ர சஞ்சாரமுந் தேச சஞ்சாரமுஞ் செய்திருப்பவராக உம்முடைய நினைவாலு மிருப்பாலுங் காணப்படுகையால் நீரறிந்துங் கேட்டு மிருப்பவைகளி லொரு நன்மார்க்கத்தைக் காட்டுவதான



க்ரந்தஞ் சொல்லுமென்றிரந்தான். அப்போதந்த ப்ராம்ஹணர் "வர்ஷார்த்தமஷ்டௌ ப்ரயதேதமாஸாந் நிஸார்த்த மர்த்தந்திவஸம்யதேத வார்த்தக்ய ஹேதோர்வயஸாநவேந பரத்ரஹேதோ ரிஹஜன்மநாச" என்னுமிச்சுலோகத்தைச்சொல்ல, அரசன் அதிக † வ்யுத்பன்ன னுகையாலே, வர்ஷாகாலமாகிற நாலுமாசங்களிலிருந்து ஜீவனஞ்செய்வதற்கு வேண்டிய உபகரணங்களை மிருந்த எட்டுமாசங்களில் சேர்த்துக்கொள்ள வேண்டுவது போலும், இராக் காலங்களில் வேண்டியதாகிற உணவுகளைப் பகற்காலங்களில் தேடிக்கொள்ள வேண்டுவதுபோலும், வார்த்தக்ய காலத்தில் தேஹசம்ரக்ஷணை செய்துகொள்ளுவதற்கு வேண்டிய த்ரவ்யங்களை வாலிபகாலத்தில் சம்பாதித்துக் கொள்ள வேண்டுவது போலும், பரலோகத்திலிருந்து சுகானுபவம் பண்ணுவதற்கு வேண்டிய தத்வக்ஞான ஸ்வரூப வைலக்ஷண்யாதிகளை இந்த ஜன்மத்திற்றானே சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்னும் பரமார்த்த மிதிலிருப்பதாக வுணர்ந்துத் தானுவரையிலும் பர[illegible]ாக வின்பத்தைப்பேணி யாசரித்ததொன்று மில்லையேயென்று [illegible]ங் குழைந்து, அந்த ப்ராம்ஹணரை யடிபணிந்துக், கொஞ்ச நாள் தன்னிடத்திலிருந்துத் தன்னை நல்வழிக் காளாக்கிவைத்து அனந்தரம் சேது தர்சனத்திற்குப்போகச் சித்தம்வைத் தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்து அவரை அரண்மனைக்கழைத்துக் கொண்டுபோய் உபசரித்துச் சிலநாளைக்குள் அவரால் நல்ல கேள்வியுமுடையவனுகி அவரைச் சேது தர்சனத்துக்கனுப்பினன்.

பின்பு ஒருநாள் தனக்கு ஹிதஞ்சொல்வாராரென்று சிந்தித்[illegible]க்கொண்டிருக்கையில், ஸ்ரீயபதியினுடைய திருவடிகளில் சித்[illegible]ம நன்கொருங்கின ஸ்வரூபவைலக்ஷண்ய முடையவராய், வேதாகமசாஸ்த்ரங்களில் அதிகநிபுணரானசெல்வநம்பியென்னும் புரோஹிதர் அங்கெழுந்தருள, அவரை யெதிர்கொண்டுபோய் அடியில் முடிதாழ்த்தி யழைத்துவந்து ஆசனத்தின்மீதேறத் தருளவித்து அஞ்சலிஹஸ்தனுய் நின்று சுவாமீ! புருஷார்த்த நிர்ணய பூர்வகமாக அத்ருஷ்ட சித்திக்குச் செய்வதேதென்று கேட்டனன். அவர் அரசனைக் குளிரக் கடாக்ஷித்து அந்தப் புருஷார்த்தஞ் சித்திக்க வேண்டுமாகில், தத்வக்ஞானிகளான பரம பாகவதர்களை

† வ்யுத்பன்னன் - அறிஞன்.

வாக்கு மனஸ் காயங்களாகிற த்ரிகரண சுத்தியோடே திருவடி தொழுது, அவர்கள் திருவாய் மலர்ந்தருளும் பரமார்த்தங்களை மனனஞ்செய்து, அவர்களிட்ட வழக்கி லீடுபட்டிருக்கவேண்டும்; அப்படி யிருக்குமிடத்துந் த்ரிமூர்த்திஸாம்யபுத்தியையொழித்துச் "காரணம் து த்யேய:" என்கிறபடி யாவனொருவன் ஜகத்காரண வஸ்துவோ அவனே சேதனனுடைய த்யானத்துக்குரியவனென்னு முபாயத்தைப் பற்றவேண்டும்; அவ் வுபாயத்தை யுள்ளபடி யறியப்புகில், உம்முடைய சமஸ்தானத்தில் "ஞானம் பல பல" என்கிறபடியே, பலசமயங்களிலுந் தலைபிட்டுக் கொண்டிருக்கிற வித்வான்க ளனந்தம்பேரிருக்கையால், ஒவ்வொருவரும் அவரவர் மதத்தினதிதேவதையையே பரதெய்வமென்று வாதித்துச் சம்சயப் பெருங்கடலில் மூழ்ந்த விடங்காண்பார்களானால், நாம் சொல்லுவதி லுமக்கு ‡ ஆசக்தி யிருக்கமாட்டாதேயென் றஞ்சுகிறோமென்று சொன்னார். அவ்வளவிலே அரசன் அவர் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு அதைத் தேவரீரே விவரிக்க வல்லீரென் றிரந்தனன். நம்பி அவனைநோக்கி அரசனே! விவரிப்பது 0 க்யாதிபூஜா லாபங்களுக்காகவன்றே தானும் ருசிக்க ஹேதுவில்லாதபடி யாராய்ந் துரைக்கத்தக்க தொன்றுமிலை யால், நீர் உம்முடைய ஸ்திஸ்தானத்தில் ஒரு தோரணக்கம்பம் நாட்டி அதனுச்சியில் வித்யாசுல்கத்தை நிர்மித்துவைத்து, எந்த மதஸ்த்தர் வேதோக்தமாகப் பரத்வ ப்ரதிபாதனம் பண்ணி அதைத் தன்கடையே யறுத்துவிழச் செய்வரோ அந்த மதத்தி லடிமைப்பட நிச்சயித்திருக்கிறேனென்று உம்முடைய தேசத்திலுந் தேசாந்தரங்களிலும் பறையறைவித்துந் தூதுவ[…]க்தி மறிவித்துப் பல வித்வான்களைத் திரட்டி வாதிக்கச்செய்வீர். அப்போது நாம் சொல்லிய தத்வஜ்ஞானிகள் தங்களை வெளியிட்டுக்கொண்டு வந்து நிர்ணயஞ்செய்து கிழியையறுத்து உம்மை யாட்கொண்[…]பாயவைபவ மிருக்கும்படியை யருளிச்செய்வார்களென்ன; […]மப்படியே செய்தான். அப்போது சமண, பௌத்த, […], மாயாவாத, வைசேஷிக, சாங்க்ய, பாசுபதாதி ம[தங்]களில் ஆசிரியத்வம் பூண்டிருந்த பெருந்தலைகளும் வித்வான்களுந் தங்கள் தங்க ளிருப்பிடம்விட்டு வெளிப்பட்டுத் திரள் திரளாகத் தென்மதுரைக்குள் வந்து நிறைந்து

‡ ஆசக்தி - பிரியம். 0 க்யாதி - புகழ்.



குறிப்பிட்டிருந்த நாளை யெதிர்பார்த் திருந்தார்கள். செல்வநம்பி யென்னும் ஸ்ரீமான் வடபெருங்கோயி லுடையானைத் திருவடி தொழுது இவ்வர்த்தமானத்தை விண்ணப்பஞ் செய்து நின்னருளே பார்த்திருப்பேனென்று தீர்த்தமேற்றுக் கொண்டவரானார்.

அதன்பின்பு வடபெருங் கோயிலுடையான் "பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப் பொய்ந்நூலை மெய்ந்நூலெ ன்றென்றுமோதி, மாண்டவத்தம் போகாதே" என்கிறபடியே யுபாயத்தைத் தருமவற்றையே யுபாயமாகப்பற்றி அசுர ராக்ஷச ப்ராஹ்மணர்த்த மோகக் கற்பிதமா யிருக்கிற மோஹ சாஸ்திரங் களையே மஹா கலைகளாக ப்ரமித்துப் போந்து ஜனன மரணத்தில் தோள்மாறி யுழலுஞ் சம்சாரிகளை அவற்றினின்றும் மீட்ப[…] திருவுள்ளம் பற்றி, மெய்ந்நாவரும் மெய்யடியருமான விஷ்ணு[…]ருடைய ஸ்வப்ரதேசத்துக் கெழுந்தருளி விஷ்ணுசித்[…]ர் ப[ாண்]டியன் சதசுக்குப்போய் அவன் கட்டியிருக்கிற [கிழியை] யறுத்துவாருமென்றார் - இவர் பெருமானைநோக்கி, அது […]நிர்மிதமாயிருக்கிறதே! "நலங்களாய நற்கலைகள்" [நா]வில் […] அடியேன்போய் கையிலிருக்கும் † கொட்டுத்தழும்பைக் காட்டி யறுப்ப தொன் றுண்டோவென்ன; அது உமக்குப் பாரமன்று காண்? நாமே வேதார்த்த ப்ரதிபாதனத்துக்குக் கடவோமென்று நிர்ப்பந்தித்தருளினார். இவர் திடுக்கிட்டு நித்திரைகலைந் தெழுந்து, ஈதொரு ஸ்வப்ன மிருந்தபடியென்னென்று ‡ விஸ்மிதராய் விசுவசித்துக் கொண்டிருக்கையில், பெருமான் சந்நிதிகாக்கு முதலிகளி லொவ்வொருவருடைய ஸ்வப்நத்திலு மெழுந்தருளி நாம் விஷ்ணுசித்தரை யேவித்துப் பாண்டியனால் நிர்மிதமாயிருக்கிற கிழியை யறுக்கப்போகிறோ மாகையால், நீங்கள் நம்முடைய சகல விருதுகளையு மெடுப்பித்துக்கொண்டு அவருக்குத் துணையாகப்போய் வாரீரென் றருளிச் செய்தபடியால், அவர்களும் நித்ரை கலைந்தெழுந்து ஒருவரோடொருவர் கலந்து வசனித்து அற்புதமடைந்து "சிற்றஞ்சிறுகாலே" தீர்த்தமாடி நித்யானுஷ்டானங்களை முடித்துக் கொண்டுத் திருப்பல்லக்குத் திருவெண்கொற்றக் குடை, வெண்சாமரை, திருச்சின்னமுதலிய விருதுகளை யெடுப்பித்துக்கொண்டு இவரிடம் வந்து பெருமாளுடைய நியமனமிருந்த

† கொட்டுத் தழும்பு - மண்வெட்டி. ‡ விஸ்மிதர் - ஆச்சரியப்பட்டவர்.

படியை விளைப்பஞ் செய்தார்கள். இவர் அவதரித்த வைபவமும் கேட்டபடியே தமது ஸ்வரூபத்துக்கு 0 நிறமென்று தாதர் தங்கள் பெருங்கோயிலுக்குப்போய்ப் பெருமாளைத் திருவடிதொழுது திருமாலை திருப்பரிவட்டமும் பெற்றுக்கொண்டு திரும்பி மாடவீதி கடந்து திருப்பல்லக்கிலேறியருளி ஸ்ரீவைஷ்ணவ குமாரர்களுடன் பாண்டியன் சதஸ்ஸிலெழுந்தருளினார். ஸ்ரீமானான செல்வநம்பியும் அரசனும் †† அப்யுத்தான ப்ரஸம பூர்வகமாக இவரையாதரித்தார்கள். அவ்வளவிலே சதஸ்ஸிலிருந்து கொண்டிருந்த வித்வஜ்ஜனங்கள் இவருக்கு வேதாப்யாஸ [illegible]யில்லையென்றும் புத்தியாலே அரசனை ‡‡ அதிக்ஷேபிக்க, அபிமான [illegible]ங்கரானசெல்வநம்பி இவரைத் தென்டனிட்டு வேதாந்தப்ரதிபாத்யமான பரத்வத்தை நிச்சயித்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்தார்.

## பரத்வ நிர்ணயம்.

அப்போது "சீரிய சிங்கமறிவுற்றுத் தீவிழித்து,
பொங்க வேப்பாடும் பேர்ந்துதறி, மூரி நிமிர்ந்து,
பட்டுப் போதருமாபோலே" என்கிறபடியே குகை[illegible]
திருந்த கண்டீரவமானது துயிலுணர்ந்தாற்போலே கண்[illegible]ப் புரட்டி விழித்தெழுந்து நாற்புறமும்பார்த்து ஹஸ்த பாதங்களை நெரித்து மெய் நிமிர்வாங்கி பிடரியைச்சிலிர்ப்பி மீட்டுறுமி செய்து பில வாய்விட்டு வெளிப்படுமா போலே இவ்வாழ்வாருடைய அகவாயி லமர்ந்திருந்தபெருமான் ஆனந்தமயமான திவ்யாத்மஸ்வரூபத்தை யும் ஆனந்தகுணங்களுந் தன்னளியுமான செ[illegible]விலாஸத்தையு முடையதன்னை இவர் திருவாக்காலே வெளியிட்டுக்கொள்ளத்திரு வுள்ளம்பற்றி இவரைக் குளிரக்கடாக்ஷிக்க; இவர் "ஹஸிதம்பாஷிதஞ்சைவ கதிர்யாயச்ச சேஷ்டிதம் தத்ஸர்வந்தர்மவீர்யேணயதா வல்ம ப்ரபஸ்யதி" என்கிறபடியே ப்ரம்ஹாவின் ப்ரசாதத் தாலே சக்ரவர்த்தித் திருமகனுடைய சிரிக்கை, பேசுகை, நடக்கை, கிடக்கை முதலியவற்றையே சர்வதேச சர்வகால சர்வாவஸ்தைகளிலும் நினைந்து நினைந்து ஆனந்திக்கும் மனதையுடையவரான ஸ்ரீவால்மீகியைப் போலும் "மய்யப்ராங் [illegible] கோவிந்தஸ் [illegible]

0 நிறம் - பண்பு. †† அப்யுத்தான ப்ரஸமபூர்வகமாக - எழுந்து வந்து தெண்டனிட்டு முறைப்படி. ‡‡ அதிக்ஷேபிக்க - குதர்க்கிக்க.